விலை : 20.00
பக்கங்கள் : இருபது
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
## Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
உலகத்தர ISO 14 001, 9001
சான்றிதழ் பெற்றுள்ள
ஒரே சீமெந்து ராம்கோ

சங்கு 14 வள்ளுவர் ஆண்டு 2044 புரட்டாதி 11 வெள்ளிக்கிழமை (27.09.2013) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 282

### இலங்கை தொடர்பான அறிக்கையால்
## ஐ.நா பேரவைக்குள் கருத்துப் பிளவு

ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளையின் இலங்கை தொடர்பான வாய்மொழி மூல அறிக்கை தொடர்பில் மனித உரிமை பேரவை நேற்று இரண்டாகப் பிளவுபட்டிருந்தது.

அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம் உட்பட பல நாடுகள் நவிபிள்ளையின் அறிக்கைக்கு ஆதரவு வழங்கியதுடன் இலங்கை அரசாங்கத்தை கடுமையாக விமர்சித்தன.

இந்த நிலையில் பாகிஸ்தான், ரஷ்யா, சீனா, வெனிசுவேலா ஆகிய நாடுகள் இலங்கையை கடுமையாக ஆதரித்து கருத்துக்களை முன்வைத்தன.

அதேவேளை இலங்கை அரசாங்கம், மனித உரிமை ஆணையாளரின் அலுவலகத்துடன் மனித உரிமைகள் தொடர்பில் தொடர்ந்தும் இணைந்து பணியாற்ற ஊக்குவிப்பதாக இந்தியா தெரிவித்தது.

புனரமைப்பு; கண்ணிவெடி அகற்றல், மீள்குடியேற்றம் உள்ளிட்ட இலங்கை அரசாங்கத்தின் சாதனைகள் தொடர்பில் மனித உரிமை ஆணையாளர் தனது அறிக்கையில் 20-ம் பக்கம் பார்க்க

## இலங்கைக்கு எதிராக தொடர்ந்தும் அமெரிக்கா
### கோத்தபாய காட்டம்

இலங்கை நலன்களைச் சீரழிக்கும் அரசியல் நிகழ்ச்சி நிரலை கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகம் தொடர்ந்து முன்னெடுத்து வருவதாக பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாணசபைத் தேர்தல் தொடர்பாக, அமெரிக்கத் தூதரகம் வெளியிட்ட அறிக்கை குறித்து மேலும் கருத்து 20-ம் பக்கம் பார்க்க

## அரசு - கூட்டமைப்பு இணக்கமே நல்லிணக்கத்திற்கு வழிகோலும்
### யாழ். இந்திய துணைத்தூதரகம் அறிக்கை

(யாழ்ப்பாணம்)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் அரசின் இணைந்த அணுகுமுறையே தமிழ், சிங்கள சமூகங்களினதும் உண்மையான நல்லிணகத்திற்கு வழிவகுக்கும் என யாழ். இந்தியத் துணைத்தூதரகம் தெரிவிததுள்ளது.

நடந்து முடிந்துள்ள வட மாகாண சபைத் தேர்தல் தொடர்பில் புதுடில்லியினை மேற்கோள் காட்டி யாழ். இந்தியத் துணைத்தூதரகம் அறிக்கையொன்றினை வெளியிட்டுள்ளது.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

செப்டம்பர் 21 அன்று வட மாகாணம் அடங் 20-ம் பக்கம் பார்க்க

## நந்த மல்லவராச்சி இன்று யாழ். விஜயம்

ஜனாதிபதியினால் அண்மையில் உருவாக்கப்பட்ட சட்டம் மற்றும் ஒழுங்கு அமைச்சின் செயலாளர் மேஜர் ஜெனரல் நந்த மல்லவராச்சி இன்று யாழ்ப்பாணம் வருகை தரவுள்ளார்.

யாழ்ப்பாணம் வருகை தரும் செயலர் முன்னதாக யாழ். பொது நூலகத்திற்கு முன்பாக நடைபெறவுள்ள பொலிஸ் அணிவகுப்பு மரியாதையை பார்வையிடுவார். பின்னர் ரில்கோ விருந்தினர் விடுதியில் வட மாகாண பிரதிப் பொலிஸ்மா அதிபர் காமினி டி சில்வாவினையும் சந்திக்கவுள்ளார்.

இச்சந்திப்பில் வடக்கின பொலிஸ் உயரதிகாரிகளும் கலந்து கொள்ளவுள்ளனர் எனவும் தெரியவருகின்றது.

ஐ.நா மனிதவுரிமை ஆணையாளர் நவநீதம் பிள்ளையின் வருகையின் போது உருவாக்கப்பட்ட சட்டம் மற்றும் ஒழுங்கு எனும் அமைச்சின் அதிகாரங்கள் முன்னர் பாதுகாப்பு செயலரிடமே காணப்பட்டன.

இந்நிலையில் வடக்கில் கூட்டமைப்பு பெரு வெற்றியிட்டியுள்ள நிலையிலும், காணி, பொலிஸ் அதிகாரங்கள் மத்திய அரசிற்கே உண்டு மாகாண சபைக்குரியதல்ல எனும் சர்ச்சைகளின் மத்தியில் சட்டம் மற்றும் ஒழுங்கு அமைச்சின் செயலாளர் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்யவுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (செ-4)

# காணி அதிகாரங்கள் மாகாணங்களிற்கு இல்லை!

## உச்சநீதிமன்றம் அதிரடி

**இலங்கையின் 13ஆவது அரசியல் சட்டத்திருத்தம் மூலம் உருவாக்கப்பட்ட மாகாணசபைகளுக்குக் காணி அதிகாரங்கள் எவையும் இல்லை என்றும், ஜனாதிபதி தலைமையிலான அரசாங்கத்துக்கே முழுமையான காணி அதிகாரம் இருப்பதாகவும் உச்சநீதிமன்றம் நேற்று திடீர் தீர்ப்பளித்திருக்கிறது.**

உச்சநீதிமன்றத்தின தலைமை நீதிபதி மொஹான் பீரிஸ் உட்பட மூன்று நீதிபதிகள் அடங்கிய குழுவினர் நேற்று வியாழக்கிழமை பரபரப்பான இந்த தீர்ப்பை அளித்திருக்கிறார்கள். மத்திய மாகாண சபையில் அமைந்துள்ள காணி ஒன்று தொடர்பான வழக்கை விசாரித்த கண்டி மேல் நீதிமன்றம், இலங்கை அரசியல சட்டத்தின் 13 ஆவது திருத்தத்தின்கீழ் மாகாணசபைகளுக்கு காணிகள் சம்பந்தமான எந்தவித மான அதிகாரங்களும் இல்லை என்று 2000 ஆம் ஆண்டு தீர்பளித்திருந்தது.

இந்த தீர்ப்பை எதிர்த்து கொழும்பு மேல் முறையீட்டு நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

அந்த வழக்கை விசாரித்த கொழும்பு மேல் முறையீட்டு நீதி 20-ம் பக்கம் பார்க்க

## வடக்கிற்கான தேர்தல் முக்கியத்துவம் வாய்ந்தது
### ஐரோ. பிரதிநிதி தெரிவிப்பு



மூன்று தசாப்த மோதல்களினால் கஷ்டங்களை அனுபவித்த நாட்டின் ஒரு பகுதியான வடக்கில் நடைபெற்ற தேர்தல் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது என ஐரோப்பிய ஒன்றிய பாராளுமன்றத்தின் தெற்காசிய விவகாரங்களுக்கான பிரதிநிதி ஜீன் லம்பார்ட் தெரிவித்தார்.


வடக்கு மாகாண சபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பெற்ற வெற்றியை பாராட்டியுள்ள அவர், இது தேசிய அரசாங்கத்திற்கும் மாகாணத்தில் வெற்றிபெற்ற கட்சிக்கும் இடையில் நம்பிக்கை மற்றும் தேசிய நல்லிணக்க செயற்பாடுகளை முன்னோக்கி இட்டுச் செல்லும் சந்தர்ப்பத்தை உருவாக்கியுள்ளது என கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வன்முறை மற்றும் அச்சுறுத்தல்களுக்கு மத்தியில் 68 வீதமாக மக்கள் வாக்களித்து தமது விருப்பத்தை பிரதிபலித்துள்ளனர். 20-ம் பக்கம் பார்க்க

## நல்லிணக்க முனைப்புகளில் கூடிய கவனம் தேவை
### ஆஸி. அமைச்சர் சுட்டிக்காட்டு

இலங்கையில் இனங்களுக்கிடையிலேயான நல்லிணக்க முனைப்புக்கள குறித்து கூடிய கவனம் செலுத்தப்பட வேண்டுமென அவுஸ்திரேலியா தெரிவித் 20-ம் பக்கம் பார்க்க



ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் 68ஆவது கூட்டத் தொடரில் கலந்துகொண்டுள்ள ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கும் பொதுநலவாய நாடுகள் அமைப்பின் செயலாளர் நாயகம் கமலேஷ் ஷர்மாவிற்கும் இடையில் இருதரப்பு பேச்சுவார்த்தை இடம்பெற்றபோது...

## வீரவன்சவின் சவாலுக்கு விரைவில் பதில் கிடைக்கும்!
### சுமத்திரன் பதில் தாக்குதல்

"வடக்கிலிருந்து இராணுவத்தையும், ஆளுநரையும் முடிந்தால் வெளியேற்றிப் பார்க்கட்டும் என சவால் விடுத்துள்ள அமைச்சர் விமல் வீரவன்ஸவுக்கு அதற்கான பதில் விரைவில் கிடைக்கும்" என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

"பகுத்தறிவு அற்றவர்கள் தான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் விஞ்ஞாபனத்தை எதிர்க்கின்றார்கள். அமைச்சர் விமல் வீரவன்ஸ விடுத்துள்ள சவாலுக்கு விரைவில் பதில் கிடைக்கும்" என்று கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரான சட்டத்தரணி எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன் தினம் நடைபெற்ற அதிகாரத்தைப் பகிர்ந்து நாட்டை ஐக்கியப் படுத்துவோம் அமைப்பின் வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேலும தெரிவித்ததாவது:

வடக்கில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வெற்றி சரித்திரத்தில் பதியப்பட வேண்டியது. எமது விஞ்ஞாபனத்தை சிலர் கடுமையாக விமர்சிக்கிறார்கள். உண்மையில் இவர்களுக்கு பகுத்தறிவு இலலை. இல்லையென்றால் இதை எதிர்க்கமாட்டார்கள்.

கூட்டமைப்பின் விஞ்ஞாபனத்தில் 20-ம் பக்கம் பார்க்க

**நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்**

# சூரிய குடும்பத்திற்குள் புதிய வால்நட்சத்திரம்

சூரிய குடும்பத்தில் ஜசான் என்ற புதிய வால் நட்சத்திரம் எதிர்வரும் நவம்பரில் நுழைகிறது.

இதன் வயது சுமார் 460 கோடி எனவும் சூரியன் தோன்றியபோது இதுவும் தோன்றியிருக்கும் என்வும் விஞ்ஞானிகள் கணித்துள்ளனர்.

மிகவும் பிரகாசமான இந்த வால் நட்சத்திரம் 200 ஆண்டுகளுக்குப்பின் மீண்டும் நம் கண்களுக்கு தெரியவுள்ளது.

நவம்பர் மாதம் 2ஆவது வாரத்தில் இருந்து இந்த வால்நட்சத்திரத்தை வெற்றுக் கண்களால் பார்க்க முடியும்.

தொடர்ந்து வால் நட்சத்திரம் சூரிய குடும்பத்திற்குள் நுழைய முயற்சிக்கும் போது, சூரியனை உரசிச் செல்வது போல் தோன்றும். அப்போது வால்நட்சத்திரம் சிதறக்கூடிய வாய்ப்பும் உள்ளது.

சிதறாமல் நுழைந்து விட்டால், இந்த நூற்றாண்டில் பிரகாசமாக தெரியும் வால் நட்சத்திரம் இதுவாகத்தான் இருக்கும்.(அ-2)

## பௌர்ணமி விழா

(யாழ்ப்பாணம்)

கலட்டி ஐக்கிய சனசமூக நிலையம் நடத்தும் பௌர்ணமி விழா இன்று வெள்ளிக்கிழமை மாலை 6.30 மணிக்கு ஜெயச்சந்திரன் மண்டபத்தில் தலைவர் சி.ஜி.திருமாலழகன் தலைமையில் நடைபெறவுள்ளது. நிகழ்வில் பிரதம விருந்தினராக ஓய்வுபெற்ற இ.போ.ச. நடத்துநர் சிவஞானம் கலந்து கொள்ளவுள்ளார். (செ-11)

## கணனி கற்கை வகுப்புக்கள் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

இணுவில் பொதுசனநூலகத்தினால் நடத்தப்படும் கணனி கற்கை வகுப்புக்கள் நாளை சனிக்கிழமை முதல் நிலையத்தின் தகவல் தொழில்நுட்ப மையத்தில் ஆரம்பமாகவுள்ளது.

மேற்படி கணனி வகுப்புக்களில் சிறுவர்கள், வளர்ந்தோர், முதியவர்கள் அனைவரும் பங்கெடுக்க முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் இவ் வகுப்புக்களில் Ms Office, Internet & Email, Computer Hardware & Networking, Online English Course போன்ற கற்கை நெறிகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

இது தொடர்பான மேலதிக விபரங்களை பெறுவதற்கு 0212241930 என்ற தொலைபேசி இலக்கத்துடனோ அல்லது நேரடியாக அலுவலகத்தையோ தொடர்பு கொள்ள முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (செ-5)

# பதவி உயர்வுக்கான விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

அரசாங்க சேவைகள் ஆணைக்குழு தொல்பொருள் திணைக்களத்தின் இலங்கை தொழில்நுட்ப சேவையின் படவரைஞர் பதவிகளின் விசேட வகுப்புக்கு பதவியுயர்த்துவதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

தொல்பொருள் திணைக்களத்தில் தற்போது பணியாற்றுகின்ற அல்லது அத்தினத்தில் தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள இளைப்பாறிய அலுவலர்கள் விண்ணப்பங்களை அனுப்பி வைக்க முடியும்.

அனைத்து விண்ணப்பதாரர்களும் இலங்கை தொழில்நுட்ப சேவையில் பட வரைஞர் முதலாம் வகுப்பிலிருந்து 6 வருட திருப்திகரமான சேவைக்காலத்தையும் வெற்றிடத் திகதிக்கு முன்னரான 5 வருட சேவைக் காலத்தையும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

விண்ணப்பதாரர் வர்த்தமானிப் பத்திரிகையில் வெளியிடப்பட்டுள்ள விண்ணப்பப் படிவத்துக்கு அமைவாக சுயமாக தயாரித்த விண்ணப்பங்களை எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 7 ஆம் திகதிக்கு முன்னர் பிரிவுத் தலைவர் ஊடாக பணிப்பாளருக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

இவ் விண்ணப்பம் தொடர்பான மேலதிக விபரங்களை கடந்த 20 ஆம் திகதி வெளியாகிய வர்த்தமானிப் பத்திரிகையில் அல்லது வலம்புரிக் க ாரியாலயத்தில் பார்வையிட முடியும். (அ-7)

# பயன் விளைவிக்க கூடியவர்களுக்கு அமைச்சு பொறுப்பை வழங்குங்கள்

## இந்துமகா சபை வலியுறுத்து

(யாழ்ப்பாணம்)

நடந்து முடிந்த வடமாகாண சபைத் தேர்தலில் மக்கள் தெளிவான சிந்தனையையுடன் வாக்களித்தமை பாராட்டப்பட வேண்டிய விடயம் ஆகும். மக்கள் விரும்புகின்ற, மக்களுக்கு பயனுள்ள வகையில் வடமாகாண சபை செயற்பட வேண்டிய கடப்பாட்டில் உள்ளது என இந்து மகாசபை தலைவர் டாக்டர் இ.சிவசங்கர் தெரிவித்துள்ளார். அவர் அனுப்பி வைத்துள்ள செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

நிலைத்து நிற்கும் பயனுள்ள அபிவிருத்தியே மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தும். இதற்கு முறைப்படியான ஆளுமையும் அதனுடன் சேர்ந்து துறை சார்ந்த பின்புல அறிவும் வேண்டற்பாலது.

அத்துடன் கொள்கைப் பிடிப்பும் ஊழலற்ற நேர்மையான செயற்றிறனும் அடிப்படை தன்மையாக அமைய வேண்டும்.

வடமாகாண அமைச்சுக்களுக்கு கட்சி பிரதேச பிரதிநிதித்துவம் என்ற பங்கீட்டை விடுத்து காத்திரமான பயனை விளைவிக்கக்கூடியவர்களை இனங்கண்டு அமைச்சு பொறுப்புக்கள் வழங்கப்படுவதே மக்கள் நலன்சார்ந்த செயற்பாடாக அமையும் என அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)


## மனோதத்துவ வைத்தியம்

(General Psychotheraphy)

பிரபல மனோதத்துவ நிபுணர்

Dr.P.ஆறுமுகம்



T.P.: 0719315664 , 0777569205

மீண்டும் யாழில்

27.09.2013 முதல் 04.10.2013 வரை 6 நாட்கள் மட்டுமே இருப்பார். உடன் பதிவுகளை மேற்கொள்ளவும்.

பதிவுக் கட்டணம் ரூபா: 300/-

ஆரம்பநிலை மனநோய் விரைவில் சுகமாக்கலாம். நீரிழிவு நோய்க்கு திறமான மூலிகை மருந்து உண்டு. ஆஸ்துமா, மாதவிடாய்க் கோளாறுகள், வெள்ளைபடுதல், குழந்தைப் பேறின்மை, வாதநோய், தலையிடி, பல்முரசு கரைதல் போன்ற நோய்களுக்கு வைத்தியம் உண்டு.

இளைஞர்கள் ஞாபகத்திறன் குறைவு, கல்வியில் நாட்டம் குன்றிப் பயம், நடுக்கம், நரம்புத் தளர்ச்சி உண்டாகி ஆளுமை குறைந்து தாழ்வு மனப்பான்மை உண்டாகக் காரணமான இளமையில் ஏற்படும் தவிர்க்க முடியாத தவறுகளைத் திருத்தி வாழ்வில் வெற்றிபெற பிரபல மனோதத்துவ நிபுணர் Dr.P.ஆறுமுகம் அவர்களைச் சந்தியுங்கள்.

தாம்பத்திய பாதிப்புக்கள் (பிறவியில் ஆண்மையற்றவர்களைத் தவிர) எந்தவித மோசமான தாம்பத்திய கோளாறுகளையும் மனோதத்துவரீதியில் திறமான மூலிகை மருந்துகளாலும் 45 நாட்களில் சுகமாக்கலாம். பலர் சுகமாகியுள்ளனர். ஆண்களுக்கு ஏற்படும் விந்து உயிரணுக்கள் குறைபாடுகளுக்கு சிறந்த மூலிகை மருந்து கொடுக்கப்படுவதால் யாழ்ப்பாணத்தில் பல பேருக்கு குழந்தைகள் கிடைத்தமைக்கு ஆதாரங்கள் உண்டு.

நாதன் இன்

(பழைய கமால் லொஜ்) 392/A, மணிக்கூட்டு கோபுர வீதி, யாழ்ப்பாணம். (சிவதர்சன் எலக்ரிக்கல் கடைக்கு அருகில்) (பெருமாள் கோவிலுக்கும் வெலிங்டன் சந்திக்கும் இடையில்)

(C-4919)


# கேள்வி அறிவித்தல்

(மாநகரசபை யாழ்ப்பாணம்)

**2013/14 ஆம் ஆண்டுக்கான சுத்திகரிப்பு தொழிலாளர்களை வழங்குவதற்கான விலைமனுக் கோரல்**

1. மாநகர சபை பெறுகைக் குழுவினால் மாநகர சபையின் 2013/14 ஆம் ஆண்டுக்கான சுத்திகரிப்புத் தொழிலாளர்களை வழங்குவதற்கு தகைமையுள்ள கேள்விதாரர்களிடமிருந்து பொறியிடப்பட்ட கேள்வி மனுப்பத்திரங்கள் கோரப்படுகின்றன.
2. பெறுகைதாரர் தனிநபராகவோ அல்லது நிறுவனமாகவோ சுத்திகரிப்புச் சேவையை வழங்கும் நிறுவனமாக பதிவு செய்யப்பட்டிருத்தல் வேண்டும் என்பதுடன் தகைமையுள்ள தொழிலாளராக இருத்தல் வேண்டும்.
3. பெறுகைதாரின் காரியாலயம் மாநகரசபை எல்லைக்குள் அமைந்திருத்தல் வேண்டும்.
4. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் தமிழ்மொழி மூலமான கேள்வி ஆவணங்களை எழுத்து மூலமான விண்ணப்பத்தின் பெயரில் மீளளிக்கப்படாத வைப்புப் பணமாக ரூபா 1000/- ஐ காசாகச் செலுத்தி **28.09.2013** தொடக்கம் 04.10.2013 வரை **முற்பகல் 9 மணி** தொடக்கம் பிற்பகல் 4 மணி வரை அலுவலக நாட்களில் மாநகரசபை அலுவலகம், யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் பெற்றுக் கொள்ளலாம்.
5. கேள்வி ஆவணங்கள் **07.10.2013** ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு முன்பதாக கிடைக்கக்கூடியவாறு முதல்வர், மாநகரசபை பெறுகைக்குழு, மாநகரசபை அலுவலகம், யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு பதிவுத் தபாலிலோ அல்லது அறையிலுள்ள பெறுகைப் பெட்டியினுள் நேரடியாகவோ இடப்படல் வேண்டும். கேள்விப் பத்திரங்கள் அனைத்தும் **07.10.2013 பிற்பகல் 2 மணிக்கு** திறக்கப்படும். இதில் பெறுகைத்தாரரோ அல்லது அவரால் எழுத்து மூலம் அதிகாரம் வழங்கப்பட்ட பிரதிநிதி ஒருவரோ கலந்து கொள்ள அனுமதிக்கப்படுவர்.
6. கிடைக்கப்பெற்ற கேள்விகளை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ நிராகரிப்பதற்கும் மீள் கேள்வி கோரலை கோருவதற்கும் பெறுகைக்குழு தலைவருக்கு அதிகாரம் உண்டு.

யோ.பற்குணராசா

தலைவர், மாநகரசபை கேள்விச்சபை,

மாநகரசபை அலுவலகம், யாழ்ப்பாணம்.

(சி-4922)

# தமிழகத்தில் ஒருவர் தீக்குளித்து மரணம்

ஈகச்சுடர் திலீபனின் நினைவைப் போற்றியும் தமிழகத்தில் சாதியால் ஒடுக்கப்பட்டுவரும் ஆதித்தமிழர்களான அருந்ததியர்களுக்கான 6 சதவீத உள் ஒதுக்கீட்டை வலியுறுத்தியும் கடிதம் எழுதி வைத்துவிட்டு பெரியார் சிந்தனைப் பற்றாளர் தோழர் பழ.நீலவேந்தன் தீக்குளித்து நேற்று அதிகாலை மரணமடைந்துள்ளார்.

ஈழ விடுதலைப்போர் நடந்து கொண்டிருந்தபொழுது இலங்கைக்கு இந்திய அரசு அனுப்பிய இராணுவ தளபாடங்கள் கொண்டு சென்ற வாகனங்கள் மீது தாக்குதல் நடத்திய வழக்கில் தோழர் நீலவேந்தனும் கைதாகி சிறையில் இருந்தார். கோவை, திருப்பூர் மாவட்டம் என்றில்லாது தமிழகத்தின் அனைத்து பகுதிகளுக்கும் சென்று தமது அனல் கக்கும் பேச்சால் தமிழ் மக்கள் பிரச்சினையை அனைவருக்கும் கொண்டு சென்றவர் என்பது குறிப்பிடத்தக்கது. (செ-11)


## பிள்ளையார் இன்

இன்று முதல் அதி விசேட விலைக்கழிவுடன் தரமான சைவ உணவுகள் எமது உணவகத்தில் நிறைவான சேவையுடன் காலை மாலையில் வழங்கப்படும்.

**இன்றைய விசேட உணவு :**

தோசையும் மசாலாத் தோசையும் உருளைக்கிழங்கு கறியுடன் 80/-

பூரி, சப்பாத்தி, உருளைக்கிழங்கு கறியுடன் 80/-

தொடர்புகளுக்கு: இல.31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். 021 222 2829

(C-4921)


## முதியோர் சங்கத்தின் சிறப்பு நிகழ்வுகள்

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் வடக்கு முதியோர் சங்கத்தின் 2 ஆவது ஆண்டு நிறைவு நாள் சிறப்பு நிகழ்வுகள் நாளை மறுதினம் ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 11 மணிக்கு கோப்பாய் வடக்கு மாதர் கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (செ-5)


**மனத்தளர்வா? தனிமையா? வாழ்க்கையில் வெறுப்பா?**

உங்களுக்காக நாங்கள் இருக்கின்றோம். உடனே அழையுங்கள். இரகசியங்களை முழுமையாகப் பாதுகாப்போம்.

**கைகொடுக்கும் நண்பர்கள்**

**021 222 8117**

(சி-4924)

## Computer & Accessories Sales

Intel 3.0 GHz Dual Core,3rd Generation Full Set : ~~54500~~. 49500. (Warranty 3Yrs)

Intel 3.3 GHz Core I-3, 3rd Generation Full Set : ~~64800~~. 58950 (Warranty 3Yrs)

Tablet PC : 1.3 GHz, 1GB, 16GB Nand Flash, 3G, 7.5" HD Screen, Keyboard Pouch.. Full Set : ~~28800~~. 25750 (1Yrs)

Tablet PC : 1.6 GHz, 1GB, 16GB Nand Flash, 3G, 9.7" HD Screen, Keyboard Pouch.. Full Set : ~~37800~~. 35350 (1Yrs)

சகல விதமான கணனி உதிரிப்பாகங்களையும் 30% விலைக்கழிவுடனும், கூடிய உத்தரவாதத்துடனும் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.

NORTH LEAD No:328, Stanly Road, Jaffna (ஆரியகுளம் சந்திக்கு அருகில்)

Tel : 222 4459, Mob : 0772533390, Fax : 222 4460


## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியை திருமதி அமலராணி ரவிசங்கரின் அன்புத் தந்தை

**சூசைமுத்து மரியதாஸ்**

அவர்களின் மறைவை முன்னிட்டு ஆசிரியைக்கும் அவரது குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

யா/கற்கோவளம் மெ.மி.த.க. பாடசாலைச் சமூகம்

(C4926)

# இன்று ஒரு தகவல்

## ஆகிரி இராகம்

ஒரு நாள் நாரதர் பாட்டுப் பாடிக் கொண்டே வந்தார். பொதுவாக நாரதர் மற்றவர்களை சிக்கலில் மாட்டிவிடுவது தான் வழக்கம். இந்த விடயத்தில் அவரே சிக்கலில் மாட்டிக் கொண்டார்.

நாரதர் ஆகிரி இராகத்தில் அந்தப் பாட்டைப் பாடிக்கொண்டு வந்தார். இருந்தாலும் பாட்டை சரியாகத்தான் பாடுகிறோமா? என்ற சந்தேகம் அவருக்கு!

உடனே சரஸ்வதியிடம் போய் நான் பாடும் இந்த இராகம் சரியாக இருக்கிறதா? என்று கேட்டார்.

அதற்கு சரஸ்வதி "இதை ஆஞ்சநேயரிடம் போய்க் கேட்டுத் தெரிந்து கொள்!" என்றார்.

நாரதருக்கு ஒரு மாதிரியாகி விட்டது. அவரிடம் போய்க் கேட்டுத் தெரிந்து கொள்ளும் அளவுக்கு நிலைமை ஆகிவிட்டதே என்று நினைத்தார்.

இருந்தாலும் ஆஞ்சநேயரிடம் போய்ப் பாடிக் காட்டினார்.

ஆஞ்சநேயர் நாரதரை அழைத்துக் கொண்டு போய் ஒரு மலையில் நிறுத்தினார். "இப்பொழுது பாடு... அது சரியாக இருந்தால் இந்த மலை உருக வேண்டும்" என்றார்.

நாரதர் பாடினார் மலை உருகவில்லை.

"சரி... இப்பொழுது நான் பாடுகிறேன்" என்று சொல்லி ஆஞ்சநேயர் பாடினார். மலை உருக ஆரம்பித்தது.

"நான் நின்று கொண்டிருக்கின்ற மலை உருகுதே!" என்று சத்தம் போட்டார் நாரதர்.

ஆஞ்சநேயர் பாட்டை இடையில் நிறுத்தினார். உடனே மலை உருகுவது நின்று உறைய ஆரம்பித்தது.

நாரதரின் கால் பாறையில் மாட்டிக் கொண்டது. எடுக்க முடியவில்லை. மறுபடியும் சத்தம் போட்டார். ஆஞ்சநேயர் மறுபடியும் பா்டி நாரதரைக் காப்பாற்றினார்.

நாரதர் தப்பினோம் பிழைத்தோம் என்று தூரத்தில் போய் நின்றார். அவரின் கோபம் குறையவில்லை. அதனால் ஒரு சாபம் கொடுத்தார்.

"இந்த ஆகிரி இராகத்தை யார் பாடினாலும் அவருக்கு சோறு கிடைக்கக் கூடாது" என்று!

அதனால் இந்த இராகத்தை இப்பொழுதும் பாடுவதற்கு பயப்படுபவர்கள் உண்டு.

ஒரு சங்கீத வித்துவான் இதை சோதித்துப் பார்க்க வேண்டும் என்று புறப்பட்டார். தயிர் சாதத்தைக் கட்டி எடுத்துக் கொண்டு ஒரு மூங்கில் காட்டுக்குப் போனார். வளைந்திருந்த ஒரு மூங்கிலில் சோற்று மூட்டையைக் கட்டினார்.

கீழே உட்கார்ந்து ஆகிரி இராகம் பாட ஆரம்பித்தார்.

பாடி முடித்ததும் கண்ணைத் திறந்து பார்த்தார். சோற்று மூட்டையைக் காணவில்லை.

சூரிய ஒளி பட்ட வளைந்திருந்த மூங்கில் நிமிர்ந்து விட்டது. கட்டுச் சோறு கைக்கெட்டாத தூரத்துக்குப் போய் விட்டது. பசி வயிற்றைக் கிள்ளியது. என்ன செய்வது என்று யோசித்தார்.

ஒரு செல்வந்தர் வீட்டுக்குப் போனார். பசிக்கிறது என்றார். உடனே இவரை உட்கார வைத்து சாப்பாடு பரிமாறினார்கள். இவருக்கு சந்தோசம்.

"ஆகிரியால் இனிமேல் எதுவும் செய்ய முடியாது! அவ்வளவுதான்!" என்று சொல்லிக் கொண்டே சோற்றைக் கையிலெடுத்தார்.

அதற்குள் இருவர் வந்து அவரை இழுத்துக் கொண்டு போய் வெளியில் தள்ளி விட்டார்கள்.

என்ன விடயம் தெரியுமா? அந்த செல்வந்தரின் மனைவியின் பெயர் ஆகிரியாம்!

ஆகிரி இராகம் பாடினால் சோறு கிடைக்காது என்பதற்கு இப்படியெல்லாம் கதைகள் உண்டு.

அது உண்மை என்ற நினைப்பில் பாடுவதற்கு பயப்படுபவர்களும் உண்டு.

ஆகிரி இராகத்தை வைகறைப் பொழுதில் வேறு ஸ்வரம் எதுவும் கலக்காமல் பாடினால் சோறு கிடைக்காது என்பது ஒரு நம்பிக்கை அவ்வளவுதான்!

இவ்வளவு இருந்தும் எனக்குத் தெரிந்த சங்கீத வித்துவான் தினமும் ஆகிரி இராகம் பாடிக் கொண்டிருப்பார்.

அவரை ஒரு நாள் பார்த்து "உங்களுக்கு ரொம்ப தைரியம் தான் சேர்!" என்றேன். அதற்கு அவர் "அப்படி இல்லை சேர்! நான் எந்த இராகம் பாடினாலும் எங்கள் வீட்டில் சோறு கிடைக் காது! அதனால்தான் தைரியமாக அந்த இராகத்தை பாடுகிறேன்" என்றார்.

*தென்கச்சி கோ.சுவாமிநாதன்*

# குறைந்த வாக்குகளை பெறும் கட்சிகள் தேர்தலில் பங்கேற்க முடியாது

## தேர்தல் ஆணையாளர் தேசப்பிரிய தெரிவிப்பு

(கொழும்பு)

குறைந்தளவுவாக்குகளைப்பெறும் கட்சிகளுக்கு அடுத்த தேர்தலில் போட்டியிட அனுமதி வழங்கக் கூடாது என்ற யோசனை முன்வைக்கப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையாளர் மஹிந்ததேசப்பிரியதெரிவித்துள்ளார்.

தேர்தல் திணைக்களத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊட கவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்த போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறியதாவது,

கூடுதலான சுயேட்சைக்குழுக்கள் போட்டியிடுவதால் அவற்றுக்கான கட்டுப்பணத் தொகையை அதிகரிப்பதன் மூலம் போட்டியிடும் சுயேட்சைக்குழுக்களை மட்டுப்படுத்த முடியும் என்று குறிப்பிட்ட அவர் மின்னணு வாக்குப் பதிவு முறை அறிமுகப்படுத்தப்பட வேண்டும் என்றும் தெரிவித்தார். புத்தளத்தில் வாக்காளர் அட்டை கண்டுபிடிக்கப்பட்ட சம்பவத்தின் மூலம் மின்னணு வாக்களிப்பு முறை துரிதமாக அறிமுகப்படுத்தப்பட வேண்டியதன் அவசியம் உணரப்படுகிறது.

சில மாவட்டங்களில் கூடுதலான அரசியல் கட்சிகளும் சுயேட்சைக் குழுக்களும் போட்டியிடும் போது, வாக்கு எண்ணுவதில் தாமதம் ஏற்படுகிறது. நீண்ட வாக்குக் பட்டியலைப்பிரித்து தனித்தனியாக எண்ண வேண்டும். இதனால் ஆயிரத்தில் ஒரு வாக்குக் கூட பெற்றுக் கொள்ளாத கட்சிகளுக்கு அடுத்த தேர்த லில் வாக்களிக்க இடமளிக்க முடியா தவாறு சட்டதிருத்தம் செய்யப்பட வேண்டும்.

சுயேட்சைக் குழுக்களும் தேவை யின்றி போட்டியிடுவதால் அதனை கட்டுப்படுத்த கட்டுப்பணத் தொகை அதி கரிக்கப்பட வேண்டும் என யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

ஒரே தினத்தில் வாக்குகளையும் விருப்பு வாக்குகளையும் எண்ணாது தேர்தலின் மறுநாள் விருப்பு வாக்குகள் எண்ணும் முறையை அறிமுகப் படுத்துவதன் மூலம் பல நெருக்கடிகளைத் தவிர்க்லாம்.

தபால் மூல வாக்களிப்புக்குப் பதில் முன்கூட்டியே வாக்களிக்கும் முறை கொண்டு வரப்பட வேண்டும். வாக்குச் சீட்டின் அளவும் குறைகப்பட வேண்டும். இவ்வாறானமாற்று வழிகள் மூலம் தேர்தல் தொடர்பான பல பிரச்சினைகளுக்கு தீர்வு ஏற்படும் என்றார். (அ-2)

## மாணவர்களுக்கான இலவச கணனிப் பயிற்சி

ஐ.நா. அபிவிருத்தி திட்டத்தின் ஆதரவுடன் ஆரம்பிக்கப்பட்ட யாழ். எம்.சி. எஸ். நிறுவனத்தினால் நடத்தப்படும் இவ்வாண்டு க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களுக்கான இலவச கணனிப் பயிற்சிநெறிக்கு மாணவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இப்பயிற்சி நெறியில் இணையவடிவமைப்பு, பல்லூடக தொழில்நுட்பம், வன்பொருளும் வலைப்பின்னலும் தொடர்பான பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன. மேலும் இப்பயிற்சி நெறிகள் நாளை சனிக்கிழமை முற்பகல் 9 மணிக்கு யாழ். பல்கலைக் கழகத்திற்கு அண்மையில் அமைந்துள்ள யாழ். எம்.சி.எஸ். நிறுவன வளாகத்தில் நடைபெறவுள்ளன.

இதன்படி இப்பயிற்சி நெறியைத் தொடரவிரும்புவோர் 0772395895 என்ற தொலைபேசி இலக்கத்திற்கு குறுந் தகவல் மூலம் தமது பெயரை அனுப்பி வைக்கமுடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-5)

## அருள் ஒளி வெளியீடு

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தினால் வெளியிடப்படும் அருள் ஒளி மாதாந்த சஞ்சிகையின் புரட்டாதி மாதத்துக்கான சஞ்சிகை வெளிவந்துள்ளது. தேவஸ்தான மஹோற்சவ சிறப்பு மலராக வெளிவந்துள்ள இச் சஞ்சிகை சைவ ஆன்மீக தமிழ் இலக்கிய படைப்புக்கள் மற்றும் அறிவியல் விஞ்ஞான விடயங்களுடன் ஆலயத்திற்கென புதிதாக நிர்மாணிக்கப்பட்ட கைலாச வாகன வெள்ளோட்டம் புகைப்பட பிரதிகளையும் உள்ளடக்கியுள்ளது. (அ-5)

## சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 40 | 40 | 60 |
| உருளைக்கிழங்கு | 80 | 100-140 | 100 |
| பச்சைமிளகாய் | 70 | 60 | 80 |
| தக்காளி | 100 | 80 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 30 | 40 | 40 |
| கோவா | 60 | 60 | 80 |
| கரட் | 60 | 60 | 80 |
| பூசணி | 20 | 30 | 40 |
| புடோல் | 60 | 60 | 40 |
| வாழைக்காய் | 50 | 30 | 50 |
| சின்ன வெங்காயம் | 170 | 100-110 | 200 |
| பெரிய வெங்காயம் | 60 | 60 | 90 |
| பாகற்காய் | 110 | 80 | 80 |
| வெண்டிக்காய் | 50 | 60 | 40 |
| கருணைக் கிழங்கு | 60 | 60 | 70 |
| பயற்றங்காய் | 40 | 40 | 50 |
| லீக்ஸ் | 100 | 60 | 100 |
| பீற்றூட் | 15 | 20 | 30 |
| கறிமிளகாய் | 60 | 50 | 70 |
| முருங்கைக்காய் | 150 | 110 | 120 |
| போஞ்சி | 100 | 90 | 120 |
| கீரை - 1 பிடி | 10 | 15 | 25 |
| தேசிக்காய் | 400 | 350 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 40-50 | 40-45 |
| இராசவள்ளி | 60 | 60 | 120 |

## இராசி பலன்

27.09.2013
(புரட்டாதி 11, வெள்ளிக்கிழமை)
சூரிய உதயம் காலை 5.59 மணிக்கு
அட்டமி முன்னிரவு 11.02 மணிவரை
திருவாதிரை முழுவதும்
இராகுகாலம் 10.32-12.02 மணிவரை
சுபநேரம் 6.02-7.32 மணிவரை
மத்தியாஸ்டமி

**மேடம்** சவால்களை சமாளிக்கும்நாள், சகோதரர்களின் ஒத்துழைப்பால் நல்ல சம்பவங்கள் நடைபெறலாம், கொடுக்கல் வாங்கல்களை ஒழுங்கு செய்து கொள்ள முன்வருவீர்கள், தொழில் நன்மையுண்டு.

**இடபம்** வருமானம் அதிகரிக்கும் நாள், ஆலய வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், தொலைபேசித் தகவல் தொழில் வளர்ச்சிக்கு உறுதுணை புரியும், சுபகாரிய பேச்சுக்கள் முடிவாகலாம்.

**மிதுனம்** ஒரு வகையில் சிக்கனமாக இருந்தாலும் மற்றொரு வகையில் செலவுகள் ஏற்படலாம், உறவினர்களின் அன்புத் தொல்லைகள் ஏற்படலாம், உடல் ரீதியான உபாதைகள் ஏற்பட்டு உற்சாகம் குறையும்.

**கடகம்** தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், மாற்றங்களால் ஏற்றம் பெறுவீர்கள், சுபசெலவுகள் அதிகமாகும், வழிபாட்டால் காரியம் சாதிக்க வேண்டிய நாள்.

**சிங்கம்** இனிமையான நாள், செய்தொழில் மேன்மையுண்டு, வருமானத்தை அதிகரிக்க புதிய திட்டம் தீட்டுவீர்கள், உறவினர் வருகையுண்டு, சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு.

**கன்னி** விடியும் பொழுதே நல்ல தகவல்கள் வந்து சேரலாம், ஆடம்பர பொருட்களை வாங்கும் எண்ணம் மேலோங்கும், தொழிலில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், போசன சுகமுண்டு.

**துலாம்** தேகாரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், தொழில் ரீதியாக சிலர் உங்களிடம் உதவி கேட்டுவரலாம், பயணங்களால் பலனுண்டு, ஆரோக்கியத்தில் அக்கறை காட்ட வேண்டிய நாள்.

**விருச்சிகம்** குடும்பத்தில் எதிர்பாராத மனஸ்தாபங்கள் ஏற்படலாம், பயணங்களால் பலனுண்டு, வேலைச்சுமையுண்டு, வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், போசன சுகமுண்டு.

**தனுசு** நீண்ட நாளைய ஆசையொன்றை நிறைவேற்றலாம், நண்பர்களின் சந்திப்புண்டு, ஏட்டிக்குப் போட்டியாக செயற்பட்டவர்கள் மனம் மாறுவர், வெளியூர் பயணமொன்றால் பண வரவுகளைப் பெறுவீர்கள்.

**மகரம்** வெற்றிச் செய்திகள் வந்து சேரலாம், சேமிப்பை அதிகரிக்க முற்படுவீர்கள், கனிவாகப் பேசி காரியம் சாதிக்க வேண்டிய நாள், தேகநலன் சீராகும், கௌரவமான நாள்.

**கும்பம்** பிள்ளைகளின் தேவைகளை பூர்த்தி செய்யும் எண்ணம் உருவாகும், சந்தித்தவர்களால் சந்தோசம் கிடைக்கும் நாள், வியாபார விருத்தியுண்டு, வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**மீனம்** புதிய நபர்களின் சந்திப்பால் பொருளாதார நன்மையுண்டு, தொலைபேசி தகவல் மகிழ்ச்சி தரும், கல்வியில் மேன்மையுண்டு, மனச்சிக்கல்கள் தீர கணபதியை வழிபட வேண்டிய நாள்.

வளவன்

# சைவப் புலவர் சங்கத்தின் ஏற்பாட்டில் மாணவர்களுக்கு போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை சைவப்புலவர் சங்கத்தினால் நடத்தப்படும் மாணவர்களுக்கான புராணபடனம், சைவ சமய வினாடிவினா, வில்லிசை ஆகிய போட்டிகளில் பங்குபற்ற விரும்பும் மாணவர்கள் போட்டிகளுக்காக விண்ணப்பிக்க முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.


மேற்படி தரம் 11 மாணவர்களுக்கான புராண படனப் போட்டியில் இருவர் கலந்து கொள்ள முடியும் என்பதோடு, அவர்களில் ஒருவர் பாட மற்றவர் பொருள் கூறவேண்டும்.

இதில் தரம் 11 சைவ நெறி திருப்பெருவடிவம் முதற் 10 பாடல்களும் இடம் பெற்றிருத்தல் வேண்டும். தரம் 12, 13 மாணவர்களுக்கான சைவ சமய வினாடி வினாப் போட்டியில் ஒரு குழுவில் 5 மாணவர்கள் பங்குபற்ற முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் வில்லிசை திறந்த போட்டியில் 6 மாணவர்கள் பங்குபற்ற முடியும். வில்லிசை போட்டிக்கான கருப்பொருளாக நாயன்மார்களில் ஒருவரைப் பற்றியோ அல்லது சந்தான குரவர்களில் ஒருவர் பற்றியோ எடுத்துரைக்கமுடியும் என்பதோடு போட்டிக்கான கால அளவு 30 நிமிடம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி இப்போட்டிகளில் பங்கெடுக்க விரும்புபவர்கள் விண்ணப்பத்தில் பெயர், வகுப்பு, பாடசாலை, போட்டியின் பெயர், தொலைபேசி இலக்கம் என்பவற்றைக் குறிப்பிட்டு, பாடசாலை அதிபரின் கையொப்பத்துடன் எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்பாக தலைவர், அகில இலங்கை சைவப் புலவர் சங்கம், 153, காங்கேசன்துறை வீதி, கொக்குவில் என்ற முகவரிக்கு அனுப்பி வைக்க முடியும்.

இப்போட்டிகளில் வினாடிவினா போட்டி எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 6 ஆம் திகதியும் புராண படனம், வில்லிசை ஆகிய போட்டிகள் 13 ஆம் திகதியும் முற்பகல் 8 மணிக்கு யா/நாவலர் மகாவித்தியாலயத்திலும் நடைபெறவுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-5)



# பொது நிறுவனங்களின் அபிவிருத்திக்கு 17 மில்லியன் ரூபா ஒதுக்கீடு

## நல்லூர் பிரதேச சபை தவிசாளர் வசந்தகுமார் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

**திருநெல்வேலி பொதுச்சந்தை 7 மில்லியன் ரூபா செலவில் அழகு படுத்தப்படவுள்ளது என நல்லூர் பிரதேச சபைத் தலைவர் தெரிவித்தார். நல்லூர் பிரதேச சபையின் மாதாந்தக் கூட்டம் நேற்றுமுன்தினம் காலை பிரதேச சபை மண்டபத்தில் நடைபெற்றது.**

இக் கூட்டத்தின் போதே சபை அங்கத்தவர்களினால் திருநெல்வேலி சந்தை உட்பட நல்லூர் பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகளில் காணப்படுகின்ற பொது நிறுவனங்களை 17 மில்லியன் ரூபா செலவில் அபிவிருத்தி செய்வது என தீர்மானிக்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

இவ் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் திருநெல்வேலி பொதுச் சந்தையும் உள்ளடங்குகிறது எனவும் அவர் தெரிவித்தார்.

இது தொடர்பில் நல்லூர் பிரதேச சபைத் தலைவர் பா.வசந்தகுமார் மேலும் தெரிவிக்கையில்,

எமது பிரதேச சபையினால் 17 மில்லியன் ரூபா செலவில் வேலைத்திட்டங்கள் பல ஆரம்பிக்கப்படவுள்ளன.

இவற்றில் விளையாட்டு கழகங்களுக்கு ஒரு மில்லியன் ரூபா, சனசமூக நிலையங்களின் அபிவிருத்திக்கு 2 மில்லியன் ரூபா, ஏனைய வேலைத் திட்டங்களுக்கு 3 மில்லியன் ரூபா, ஆயுர்வேத வைத்தியசாலை அபிவிருத்திக்கு 4 மில்லியன் ரூபா, திருநெல்வேலி பொதுச் சந்தையினை அழகுபடுத்துவதற்கு 7 மில்லியன் ரூபா என ஒதுக்கப்பட்டுள்ளது.

இவ் அபிவிருத்திக்குரிய நிதி யாவும் பிரதேச சபையின் நிதியிலிருந்தே ஒதுக்கப்பட்டுள்ளன.

இதேவேளை திருநெல்வேலி பொதுச் சந்தையில் சுழற்சி முறை மூலம் கழிவகற்றப்படாமையினால், அங்குள்ள சில இடங்களில் துர்நாற்றம் வீசுவதாக் சுட்டிக்காட்டப்படுகின்றது.




மற்றும் வீதிகளில் இறக்கும் விலங்குகளின் அவயவங்களை புதைப்பதற்கு நல்லூர் பிரதேச சபையினருக்கு அறிவித்தல் விடுக்கப்படுகின்ற போதிலும், அது தொடர்பில் பிரதேச சபை அக்கறை கொள்வதில்லை என வருத்தம் தெரிவிக்கப்படுகின்றது.

ஆகவே, 7 மில்லியன் ரூபா திருநெல்வேலி பொதுச் சந்தை அபிவிருத்தியின்போது இவற்றினையும் கவனமெடுத்து அபிவிருத்தி செய்யுமாறும் கோரப்படுகின்றது.

மேலும் இவ் அபிவிருத்திப் பணிகள் யாவும் அடுத்த வாரமளவில் ஆரம்பித்து எதிர்வரும் ஒக்டோபர் மாதத்திற்குள் பூர்த்தி செய்யப்படும் எனவும் அவர் தெரிவித்தார். (அ-4-9)

# தியான வகுப்பு

(தும்பளை)

பருத்தித்துறை விநாயகர் முதலியார் வீதியில் அமைந்துள்ள ஞானாலயத்தில் குருஜி ரவிசங்கரின் மாணவர்களால் தியான பயிற்சி வகுப்புக்கள் ஆரம்பமாகவுள்ளன.

இப் பயிற்சி வகுப்புக்களில் கலந்து கொள்ள விரும்புபவர்கள் ஞானாலயத்தில் நேரடியாக வந்து தொடர்பு கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர். (அ-9-19)

# இரு மாடுகள் திருடப்பட்டுள்ளன

(கரணவாய்)

கரணவாய் மண்டான் பகுதியில் மேய்ச்சலுக்காக கட்டப்பட்ட மாடுகள் களவாடப்பட்டுள்ளதாக உரிமையாளர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

கடந்த 20 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மேய்ச்சலுக்காக காணி ஒன்றினுள் கட்டப்பட்டிருந்த இரு மாடுகளைக் களவாடிச் சென்றுள்ளனர்.

இவ்விருமாடுகளும் சுமார் 50 ஆயிரம் ரூபா பெறுமதியானவை இவை தொடர்பில் நெல்லியடிப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.மேற்படி பகுதியில் மாடுகள் தொடர்ச்சியாக திருடப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ-9-60)

# நாமக்கல் சின்னப்பபாரதி விருதை எழுத்தாளர் டேவிட் பெறுகிறார்

(யாழ்ப்பாணம்)

இந்தியாவின் நாமக்கல் சின்னபாரதி அறக்கட்டளை அமைப்பினால் வழங்கப்படும் 2012 ஆம் ஆண்டிற்கான நாமக்கல் சின்னப்பபாரதி விருதிற்காக இலங்கைத் தமிழரான எழுத்தாளர் கே.ஆர். டேவிட் எழுதிய மண்ணின் முனகல் எனும் சிறுகதைத் தொகுதி தெரிவு செய்யப்பட்டுள்ளது.

இவ்விருது வழங்கும் விழா விரைவில் நாமக்கல் செல்வம் பொறியியல் கல்லூரி வளாகத்தில் நடத்தப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

1966 ஆம் ஆண்டில் சிறுகதை எழுத்தாளராக அறிமுகமான இவர், இதுவரையில் 7 நூல்களை வெளியிட்டுள்ளார். இவ்வாறு கடந்த ஆண்டில் பாடுகள், மண்ணின் முனகல் ஆகிய சிறுகதைத் தொகுதிகளை வெளியிட்டிருந்தார்.



இதேவேளை, இவரால் எழுதப்பட்ட எழுதப்படாதவரலாறு எனும் சிறுகதை 8 ஆம் தரத்துக்கான தமிழ் மொழியும் இலக்கியமும் நூலின் பாடப் பரப்பில் இடம்பெற்றுள்ளது. இவர் 30 இற்கு மேற்பட்ட இலக்கிய விருதுகளை பெற்றுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ-5)

# வேட்பாளருக்கு எதிரான வழக்கு தள்ளுபடியானது

(கரவெட்டி)

வடக்கு மாகாண சபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் போட்டியிட்ட யாழ். மாவட்ட வேட்பாளர் கணபதிப்பிள்ளை தர்மலிங்கம், தேர்தல் சட்டத்திற்கு முரணாக நடந்து கொண்டார் என வல்வெட்டித்துறை பொலிஸாரால் குற்றஞ்சாட்டப்பட்ட வழக்கை, பருத்தித்துறை நீதிமன்றம் நேற்றுமுன்தினம் தள்ளுபடி செய்துள்ளது.

வடமராட்சி இமையாணன் அ.த.க.பாடசாலைக்கு அருகில் கடந்த 20 ஆம் திகதி இரவு இவர் தேர்தல் விதிகளை மீறி துண்டுப் பிரசுரங்களைத் தம்வசம் வைத்திருந்து விநியோகித்ததாக குற்றஞ்சாட்டப்பட்டு வல்வெட்டித்துறைப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு அன்றைய தினமே விடுவிக்கப்பட்டார்.

இவ் வழக்கு விசாரணை நேற்றுமுன் தினம் பருத்தித்துறை நீதவான் நீதிமன்ற நீதவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரம் முன்னிலையில் விசாரணைக்காக எடுத்துக் கொள்ளப்பட்டது.

வழக்கை விசாரித்த நீதவான் வேட்பாளருக்கு எதிராக பொலிஸார் மேற்படி குற்றச்சாட்டுகளை முன்வைத்த போது அதற்கு எதிராக 8 சட்டத்தரணிகள் மன்றில் ஆஜராகி வாதிட்டனர்.

சட்டத்தரணிகள் மன்றில் வாதிடும் போது, 1988 ஆம் ஆண்டு மாகாண சபைத் தேர்தல் சட்டத்தின் 68 ஆவது உப பிரிவின் கீழ் ஒரு வேட்பாளர் தேர்தல் தினம் தவிர்ந்த நாட்களில் தன் அடையாளத்தை உறுதிப்படுத்தக் கூடிய ஆவணங்களையும் துண்டுப் பிரசுரங்களையும் வைத்திருக்க முடியுமென வாதிட்டனர்.

இதற்கு பொலிஸார் ஆட்சேபனை தெரிவிக்காமையால் வேட்பாளரை வழக்கிலிருந்து விடுவித்ததுடன், அவரது மோட்டார் சைக்கிளை ஒப்படைக்குமாறும் பொலிஸாருக்கு நீதவான் உத்தரவிட்டார். (அ-9-24)

# வடக்கு மாகாணசபை தமிழர்களின் வாழ்வாதாரத்தை வலுப்படுத்தட்டும்

## ஆனந்தவிகடன் சஞ்சிகை சுட்டிக்காட்டு

(சென்னை)

**இலங்கையில் நடைபெற்ற வடக்கு மாகாண சபைத்தேர்தலில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் வெற்றி மகத்தானதொன்றாகும். ஒரு யுக இருளின்பின் முளைத்த ஒற்றை ஒளிக்கீற்றுக்கு நிகரானதாகும். இவ்வாறு தமிழகத்திலிருந்து வெளியாகும் ஆனந்தவிகடன் சஞ்சிகையின் இவ்வார ஆசிரிய தலையங்கம் குறிப்பிடுகிறது.**

அதில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் வருமாறு,

இலங்கை இராணுவம்- விடுதலைப்புலிகளுக்கு இடையிலான போர்முடிந்து நான்கு ஆண்டுகள் கடந்துவிட்டபோதிலும் இலங்கை அரசு இலங்கைத் தமிழர்களின் காயங்களுக்கு மருந்து போடாதது மட்டுமல்லாது அவற்றை மேலும் ரணப்படுத்தும் விதமாகச் செயற்பட்டும் வந்திருக்கிறது.

இலங்கைத்தீவில் தமிழர்கள் படும் அவலத்தை ஊடகங்களும் சமூக செயற்பாட்டாளர்களும் உரக்கக் கத்தியும் அது உலகத்தின் மனச்சாட்சியை இன்னமும் உலுக்கவேயில்லை.

இந்நிலையில் வடக்கு மாகாணத் தேர்தலில் இலங்கை அரசின் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் மிரட்டல்களுக்கும் பகட்டான வாக்குறுதிகளுக்கும் மசியாமல்தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்கு தங்கள் ஒருமித்த ஆதரவைதமிழ்மக்கள்அளித்துள்ளனர். இலங்கைத்தமிழர்கள் ஆதரவாகத் தந்த வலிமையை ஆக்க பூர்வமாக முன்னெடுத்துச் செல்லவேண்டிய மாபெரும் பொறுப்பு வடக்கு மாகாண சபை முதல்வராக பதவியேற்கவிருக்கும் க.வி.விக்னேஸ்வரனுக்கும் அந்தச் சபையின் உறுப்பி னர்களுக்கும் இருக்கிறது.

அனைத்து நிலைகளிலும் தமிழர்களின் வாழ்வாதாரங்களை வலுப்படுத்தவும் வருங்காலத்தை வழிநடத்தவும் ஆக்கபூர்வமான பணிகளை முன்னெடுக்க அந்தச் சபை முனைப்பு காட்ட வேண்டும்.

இதற்கு மேலும் இலங்கையுடன் இராஜாங்க உறவைப் பேணிக் கொண்டிருப்பதில் கவனம் செலுத்தாது நல்லது நடக்கும் என்று நம்பும் இலங்கைத் தமிழர்களின் நம்பிக்கையை நிச்சயமாக இந்திய அரசும் தமிழக அரசும் தங்கள் பொறுப்புக்களையும் கடமைகளையும் உணர்ந்து செயற்பட வேண்டும்!

மக்களின் குரலுக்கு செவிசாய்க்காத அரசுகள் மண்ணோடு மண்ணாக மட்கிப்போனதே வரலாறு. அதை தெரியாதவர்கள் அல்ல நாம்! இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது. (அ-2)


நீங்கள் பீனிசம், பீனிச வாய்வு, இளநரை, தலையிடி, தலைப்பாரம், மூக்கினால் இரத்தம் வடிதல், காதடைப்பு, கண் மங்கல் என்பவற்றால் அவதிப்படுகின்றீர்களா?

**இதோ பாவியுங்கள்**

கண்ணுக்குக் குளிர்ச்சியும் முகத்திற்கு அழகும் உண்டாக்கி கூந்தலை நீளமாகவும் கறுப்பாகவும் அழகாகவும் வளரச் செய்யும் சித்த ஆயுள்வேத முறைப்படி தயாரிக்கப்பட்ட

**சித்தாரா பொன்னாங்காணித் தைலம்**

போலிகள் நடமாடுவதால் பொன்னாங்காணி தைலம் வாங்கும்போது வர்ண மூடியில் சித்தாரா டிஸ்பென்ஸரி வைத்திய முத்திரைக் குறியீடு என்பன பொறிக்கப்பட்டுள்ளதா எனவும் பெட்டியில் ஒறிஜினல் என பொறிக்கப்பட்ட பளபளப்பான ஸ்ரிக்கர் ஒட்டப்பட்டுள்ளதா எனவும் பார்த்து வாங்குங்கள்.

Manufactured by:
**Sithara Products**
Puttalam Road, Chilaw
(Reg.No: 63 82)
AR/PR/No 228

யாழ்.மாவட்ட ஏக விநியோகஸ்தர்:
**சிவா நறுமணப் பூங்கா**
இல.288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம். தொ.பே: 021 222 2567

(சி/4917)



உ

## சேவை நலன் பாராட்டு

### திருமதி.நாகேஸ்வரி சிவநாதன்



பெண் கல்விக்குப் பெரிதும் உழைத்த
பெருமகன் வம்சத் துதித்து
தன்முயல்வதனால் ஆசிரியத்தில்
தக்க உயர்வுகள் நாட்டி,
அன்பறம் தவறாக் கடமையால் அனைத்து
மாணவர் மனங்களும் வென்ற
பெண்மணி நாகேஸ் சிவநாதனாம்
பெருமகள் பணி மறவோமே.

**பணியாற்றிய இடங்கள்:**

- யா/ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயம் 21.10.1988 முதல் 04.02.1991 வரை
- யா/கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை 05.02.1991 முதல் 31.12.1992 வரை
- யா/உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலயம் 01.01.1993 முதல் 31.12.1997 வரை
- யா/கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயம் 01.01.1998 முதல் 26.09.2013 வரை

[இன்று அகவை அறுபதில் பணி ஓய்வு பெறும் கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலய ஆசிரியை திருமதி நாகேஸ்வரி சிவநாதன் அவர்களுக்கு எமது வாழ்த்துக்களும் பாராட்டுக்களும்]

– பழைய மாணவர் –

(4030)


## பௌர்ணமி கலைவிழா

கரவெட்டி கலட்டி ஐக்கிய சனசமூக நிலையத்தினரால் பௌர்ணமி விழா இன்று வெள்ளிக்கிழமை மாலை 6.30 மணிக்கு ஜெயச்சந்திரன் மண்டபத்தில் தலைவர் சி.ஜி.திருமாலழகன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக ஓய்வு பெற்ற இலங்கை போக்குவரத்து சபையின் நடத்துநர் ஐ.சிவஞானம் கலந்து சிறப்பிக்கவுள்ளார். உளவியலும் வாழ்வியலும் எனும் தலைப்பில் யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் வண அருட் தந்தை எஸ். டேமியன் , சிறப்பு சொற்பொழிவு ஆற்றவுள்ளார்.

அத்துடன் மேற்படி சனசமூக நிலையத்தினரால் வாணிவிழா கொண்டாடப்படவுள்ளது. இதனையொட்டி பேச்சுப்போட்டி, பண்ணிசைப் போட்டி, பொது அறிவுப்போட்டிகளும் நடைபெறவுள்ளன.

எனவே இறுதி நாள் நிகழ்வுகளில் நிகழ்ச்சிகள் வழங்கவிரும்புவோர் முன்னதாகவே நிர்வாகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. (அ-9-60)

## சைவப்புலவர் தேர்வுக்கான கருத்தரங்கு நாளை

அகில இலங்கை சைவப்புலவர் சங்க அறிமுகவிழாவும்இளம்சைவப்புலவர்சங்கஅறிமுகவிழாவும் இளம் சைவப்புலவர்கள், சைவப்புலவர்கள் தேர்வுக்கான கருத்தரங்கு நிகழ்வும் நாளை சனிக்கிழமை முற்பகல் 8.30மணிக்குதிருகோணமலையில்அமைந்துள்ள ஸ்ரீபத்திரகாளி அம்பாள் தேவஸ்தான கல்யாண மண்டபத்தில் அகில இலங்கை சைவப்புலவர் சங்கத்தலைவர் மு.திருஞானசம்பந்தம்பிள்ளை தலைமையில் நடைபெறவுள்ளன.

இதில்திருகோணமலைஸ்ரீபத்திரகாளிஅம்பாள் தேவஸ்தான ஆலய ஆதீன தர்மகர்த்தா பிரம்ம ஸ்ரீ சோ. இரவிச்சந்திரக் குருக்கள் கலந்து கொள்ளவுள்ளதோடு நிகழ்வுக்கான ஆசியுரையையும் வழங்கவுள்ளார். (அ-5)

## ஜே/101 கிராம சேவகர் பிரிவில் சிறுவர், முதியோர் கௌரவிப்பு

(யாழ்ப்பாணம்)

ஜே/101 கிராம சேவகர் பிரிவில் சுகாதாரப் பரிசோதகர், குடும்பநல உதவியாளர், கிராம உத்தியோகத்தர் மற்றும் பொதுமக்கள் ஆகியோர் இணைந்து நடத்தும் சர்வதேச முதியோர், சிறுவர் கௌரவிப்பு விழா எதிர்வரும் ஒக்டோபர் மாதம் முதலாம் திகதி முற்பகல் 9 மணிக்கு நீராவியடி சைவ பரிபாலன சபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

யாழ். மாநகர சபை சுகாதார வைத்திய அதிகாரி ஏ.ஈ.ஞான ஜோதி தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாநகர சபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா கலந்துகொள்ளவுள்ளார். (அ-5)


## உடனடி வேலை வாய்ப்பு

யாழ்ப்பாணம், வவுனியா, கிளிநொச்சி,
மன்னார், முல்லைத் தீவு
ஆயுட் காப்புறுதி மற்றும் பொதுக் காப்புறுதி
துறையில் அனுபவம் உள்ளவர்களுக்கு
கவர்ச்சிகரமான அடிப்படை சம்பளத்துடன்
கூடிய வேலைவாய்ப்பு
பின்வரும் இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும்

**0716840786, 0716791744**

(சி/4920)



## செய்ந்நன்றி மறவாது பணிசெய்து கிடப்பேன்



தங்களின் பெறுமதியான வாக்குகளை அளித்து என்னை வெற்றிபெறச் செய்த என் இனிய தமிழ் உறவுகளுக்கும்,

சுட்டெரிக்கும் வெய்யிலையும் பொருட்படுத்தாது கால்கடுக்க வீடுவீடாகச் சென்று எனக்காகப் பரப்புரை செய்த எனது பழைய மாணவச் செல்வங்களுக்கும், உறவினர்களுக்கும், நண்பர்களுக்கும்,

என் கருத்துரைகளினைச் செய்திகளாக்கிய ஊடக வியலாளர்களுக்கும்

**என் நெஞ்சம் நெகிழ்ந்த நன்றி**

எமது மக்களின் வாழ்வாதாரங்களுக்காகவும், வாழ்வுரிமைகளுக்காகவும் அயராது உழைப்பதுவே அனைவருக்கும் நான் செய்யும் கைம்மாறு என்பதை நன்கு உணர்வேன்.

அந்தப் பணிகளில் என் சக்திக்கும் மேலாக இதய சுத்தியுடன் உழைப்பேன் என உறுதி கூறுகிறேன்.

**பொ.ஐங்கரநேசன்** M.Sc,PGDJMC

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு

(சி/4923)

# ஆளணிப் பற்றாக்குறைகளுடன் இயங்கும் கரைதுறைப்பற்று பிரதேச செயலகம்

(முல்லைத்தீவு)

**மீள்குடியேற்றம் செய்யப்பட்டு மூன்று வருடங்களாகியும் முல்லைமாவட்ட கரைதுறைப் பற்று பிரதேச செயலகத்தில் ஆளணிப்பற்றாக்குறை மற்றும் வளப் பற்றாக்குறை நிலவு வதாக அப்பகுதி மக்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்.**

முல்லைத்தீவு - கொக்கிளாய் வீதியில் இருந்து 100 மீ தூரத்தில் உள்வீதியில் அமைந்துள்ள இப்பிரதேச செயலகத்தை 46 கிராம சேவையாளர் பிரிவுகளில் உள்ள 210 கிராமங்களின் 12637 குடம்பங்கள் பயன்படுத்தி வருகின்றார்கள்.

கடந்த 2010 ஆம் ஆண்டு மீள்குடியேற்றம் செய்யப்பட்ட இக்கிராமத்தில் இவ்அலுவலகம் புதிதாக நிர்மாணிக்கப்பட்டு கடந்த 201 ஆம் ஆண்டு ஜனாதிபதியால் திறந்து வைக்கப்பட்டது.

இப்பிரதேச செயலகத்தில் நிரந்தர பிரதேச செயலர், நிரந்தர கணக்காளர், நிரந்தர சமூக சேவை உத்தியோகத்தரென்று எவரும் இல்லை. எல்லோரும் பதில் கடமை புரிபவர்களே, இச் செயலகத்திற்கு 19 முகாமைத்துவ உதவியாளர்கள் தேவைப்படுகின்ற நிலையில் 7பேர் மட்டுமே கடமையாற்றுகின்றனர்.

பிரதேச செயலகம் ஒன்றில் முக்கியமான அதிகாரிகள் பற்றாக்குறை நிலவின் பொது மக்கள் பெரும் சிரமங்களை அனுபவிப்பது கண்கூடான நிலை என்பது இங்கு குறிப்பிடத் தக்கது.

அத்துடன் பகல்நேர காவளாளி இல்லை பணியாளர்கள் 10பேர் தேவைப்படுகின்ற நிலையில் 2பேரே கடமையாற்றி வருகின்றார்கள், நிரந்தர கிராமசேவையாளர்கள் 28 பேரே கடமையிலுள்ளனர் மேலும் 18 கிராம சேவையாளர்களின் சேவை தேவையாக வுள்ளது.


செயலகத்திற்கு வாகன சாரதிகளாக இருவர் தேவைப்படும் நிலையில் தற்பொழுது ஒரு சாரதி மட்டுமெ நிரந்தர கடமையில் உள்ளார். சுகாதார சுத்திகரிப்பு தொழிலாளர்கள் மூவர் நிரந்தரமாக தேவைப்படுகின்றனர். இறப்பு, பிறப்பு பதிவு கிளை காணி கிளை ஆகியவை கணணி மயப்படுத்தப்படவுமில்லை.



இங்கு ஒரு கிணறு பாவனையில் உள்ள போதிலும் அதன் நீர் தற்பொழுது சிவப்பு நிறமாக மாறியுள்ளமையால் பயன்படுத்த முடியாத நிலையும் காணப்படுகிறது.

எனவே இச்செயலகத்தில் நிலவும் ஆளணி பற்றாக்குறைகளை நிவர்த்தி செய்வதுடன், வளப்பற்றாக்குறைகளையும் நிவர்த்தி செய்து தருமாறு அப்பகுதி மக்கள் கோரிக்கை ஒன்றை முன்வைத்துள்ளனர். (ம-267)

# திறப்பு விழா



(பூந்தோட்டம்)


வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலயத்தில் பழைய மாணவர்களால் பிரமாண்டமான முறையில் தேநீர்சாலை இன்று காலை திறந்து வைக்கப்படவுள்ளதாக பழைய மாணவர்சங்கத்தினர் தெரிவித்தனர்.

இது தொடர்பில் அவர்கள் தெரிவிக்கையில்,

பாடசாலை மாணவர்களின் நன்மை கருதியும் சுகாதார நிலை கருதியும் எமது பாடசாலையில் பழைய மாணவர் சங்கத்தினால் தேனீர்சாலை திறந்து வைக்கப்படவுள்ளது.

இதனை வவுனியா மாவட்டத்தில் இருந்து வடமாகாணசபைக்கு தெரிவு செய்யப்பட்டுள்ள வைத்தியகலாநிதி ப.சத்தியலிங்கம் திறந்து வைக்கவுள்ளதாகவும் அவர்கள் தெரிவித்தனர். (ம-266)

# திகதி மாற்றம்



(பூந்தோட்டம்)

வவுனியா மாவட்டத்தில் இடம்பெறவிருந்த ஜெகோவாவின் சாட்சியங்களிளுடைய மாநாட்டிற்கான திகதி மாற்றப்பட்டுள்ளதாக ஏற்பாட்டுக்குழு தெரிவித்துள்ளது.

இன்று முதல் 29 ஆம் திகதி வரை கடவுளுடைய வார்த்தையே சத்தியம் என்ற தலைப்பில் வவுனியா கலாசார மண்டபத்தில் ஜெகோவாவின் சாட்சியங்களால் நடத்தப்படவிருந்த மாவட்ட மாநாடு தவிர்க்க முடியாத காரணங்களால் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 11 ஆம் திகதி முதல் 13 ஆம் திகதி வரை காலை 9.20 இல் இருந்து 4.50 வரை அதே மண்டபத்தில் இடம்பெறும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-266)

இவ் ஆண்டுக்குரிய வவுனியா பிரதேச கலை இலக்கிய விழாவின் முன்னேற்பாடுகள குறித்து ஆராய்வதற்கான கூட்டம் ஒன்று இன்று பிற்பகல் 3 மணிக்கு பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெறவுள்ளதாக வவுனியா பிரதேச செயலாளர் கா.உதயராசா தெரிவித்தார் (ம-250)

# குளவிகளின் தாக்கத்தால் அவஸ்தையுறும் மக்கள்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தின் புதுமுறிப்பு, உருத்திரபுரம் மற்றும் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையின் பின்புற சூழல் ஆகிய இடங்களில் பெரும் குளவிகள் ஆக்கிரமிப்பு கூடுதலாகவுள்ளது.

நேற்று காலை புதுமுறிப்பு சங்கத்திற்கு அருகாமையில் ஒருவர் குளவிக் கொட்டுக்கு ஆழாகியுள்ளார்.

இதேவேளை உருத்திரபுரம் சந்தைப் பகுதியில் உள்ள கடைகளில் தொங்கவிடப்பட்டிருக்கும் வாழைப்பழக் குலைகளில் மற்றும் சந்தைகளில் உள்ள மீன் வகைகளில் பெருங் குளவிகள் பெருமளவில் காணப்படுகின்றது.




இதனால் சந்தை வியாபாரிகளும் பொருட்களை வாங்கவரும் பொதுமக்களும் மிகுந்த அசௌகரியத்தை எதிர்நோக்குகின்றனர்.

பலத்த காற்று இப்பகுதிகளில் வீசுவதால் பெருங்குளவி கூடுகள் கலைந்து மக்கள் நடமாடும் பகுதிகளுக்குள் பெரும் சிரமங்களையும் ஏற்படுத்துகின்றன.

இத்தகைய நிலையில் இவற்றை கட்டுபடுத்துவதற்கு துறைசார்ந்த அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென மக்கள் கோரிக்கை ஒன்றை விடுத்துள்ளனர். (ம-254)

# கூட்டம்



இவ் ஆண்டுக்குரிய வவுனியா பிரதேச கலை இலக்கிய விழாவின் முன்னேற்பாடுகள குறித்து ஆராய்வதற்கான கூட்டம் ஒன்று இன்று பிற்பகல் 3 மணிக்கு பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெறவுள்ளதாக வவுனியா பிரதேச செயலாளர் கா.உதயராசா தெரிவித்தார் (ம-250)

# பொலிசார் என கூறி எனது ஆதரவாளர்களுக்கு எச்சரிக்கை

## வைத்தியகலாநிதி ப.சத்தியலிங்கம் குற்றச்சாட்டு

(பூந்தோட்டம்)

தம்மை பொலிஸார் என கூறிய சிலர் தனது ஆதரவாளர்களின் வீடுகளுக்கு நேற்று முன்தினம் இரவு 12 மணிக்கு சென்று அச்சுறுத்திய சம்பவமொன்று நேற்று இடம் பெற்றதாக வட மாகாணசபைக்கு தெரிவு செய்யப்பட்டுள்ள வைத்தியகலாநிதி ப. சத்தியலிங்கம் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் கருத்து தெரிவிக்கையில்,

கல்மடு பிரதேசத்தில் அரசாங்க கட்சி ஆதரவாளர் ஒருவரின் வீட்டின் முன்னால் வெடி கொளுத்தப்பட்டதாக தெரிவித்து நடைபெற்று முடிந்த தேர்தலில் எனது வெற்றிக்காக செயற்பட்ட சிலரின் வீடுகளுக்கு இரவு 12 மணியளவில் சென்ற சிலர் தம்மை பொலிஸார் என கூறி அங்கிருந்தவர்களை அச்சுறுத்தியுள்ளதடன் எனது ஆதரவாளர்களை வவுனியா பொலிஸ் நிலையத்திற்கு வருமாறும் பணித்துள்ளனர்.

இதன் காரணமாக இன்று காலையில் வவுனியா பொலிஸ் நிலையத்திற்கு சென்ற



எனது ஆதரவாளர்கள் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டதன் பின்னர் எவ்வித குற்றமும் செய்யவில்லை என தெரிவித்து அவர்கள் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

எனினும் இரவு நேரங்களில் விசாரணைக்காக பொலிஸார் செல்வதும் அவர்களை அச்சுறுத்தும் செயற்பாடுகளையும் கண்டிப்பதுடன் தீர விசாரிக்காது எவ்விதத்திலும் சம்பந்தப்படாத எனது ஆதரவாளர்கள் விசாரணை எனும் பெயரில் பொலிஸ் நிலையத்திற்கு அழைக்கப்பட்டமையும் கண்டிக்கத்தக்க விடயம் எனவும் அவர் தெரிவித்தார். (ம-266)




# சகோதரத்துவ சங்கம நிகழ்வு

(பூநகரி)

சகோதரத்துவ சங்கம நிகழ்வு இன்றும் நாளையும் நாளை மறுதினமும் முழங்காவில் மகாவித்தியாலயத்தில் ஈ.ஐ.சட் நிறுவனத்தின் அனுசரணையுடன் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் வவுனியா மாவட்டத்தை சேர்ந்த மடுக்கந்த சிங்கள மகாவித்தியால மாணவர்கள் நாச்சிக்குடா முஸ்லிம் தமிழ் கலவன் பாடசாலை மாணவர்கள் முழங்காவில் மகாவித்தியாலய மாணவர்கள் உள்ளிட்ட 150இற்கு மேற்பட்டோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

வவுனியாவில் இருந்து வருகை தரும் மாணவர்கள் முழங்காவிலில் இருநாட்கள் தங்கி இருந்து வெளிக்கள சுற்றுளவில் ஈடுபடுவதுடன் மாணவர்களின் சங்கம நிகழ்விலும் பங்குபற்றவள்ளதாக முழங்காவில் மகாவித்தியாலய அதிபர் தெரிவித்துள்ளார்.

இந்நிகழ்வுக்கு வேண்டிய சகல ஒழுங்குகளையும் ஈ.ஜ.சட் நிறுவனமும் பாடசாலை சமூகமும் இணைந்து மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-84)

# பொதுநலவாய உச்சி மாநாடு குறித்து தவறான பிரசாரங்கள் முன்னெடுப்பு

## அமைச்சர் கெஹலிய குமுறல்

(கொழும்பு)

**இலங்கையில் நடத்தப்படவுள்ள பொதுநலவாய நாடுகளின் தலைவர்கள் உச்சிமாநாட்டைத் தடுக்கும் வகையில் பலர் தவறான பிரசாரங்களை முன்னெடுத்து வருகின்றனர். இத்னை முறியடிக்கும் வகையில் இலங்கையர்கள் தமது உண்மை நிலை குறித்து விழிப்புணர்வுடன் செயற்பட வேண்டுமென தகவல் ஊடகத்துறையமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.**

அரசாங்கத் தகவல் திணைக்களம், கல்வியமைச்சு என்பன தேசிய தொலைக்கல்விச் சேவையுடன் இணைந்து பாடசாலை மாணவர்களுக்கென நேற்று முன்தினம் இணையவழி பரீட்சையை நடத்தியது. அதில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார். அவர் தொடர்ந்து கூறுகையில்,

இலங்கையில் உச்சி மாநாடு நடத்த திட்டமிடப்பட்ட நாள் முதல் தவறான அபிப்பிராயத்தை ஏற்படுத்துவதற்கு பல்வேறு குழுக்கள் செயற்பட்டு வருகின்றன.

இந்தக் குழுக்களின் பிரதான நோக்கம் உலகத் தலைவர்கள் இலங்கை வருவதைத் தடுப்பதாகும். இதற்காக முரண்பாடான மற்றும் ஆதாரமற்ற குற்றச்சாட்டுக்களை இவர்கள் முன்வைப்பதாகவும் அமைச்சர் கூறினார்.

எமது நாட்டில் பொதுநலவாய உச்சி மாநாட்டை நடத்துவதன் மூலம் கிடைக்கக் கூடிய பயன்கள் தொடர்பில் பொதுமக்கள் அறிந்து வைத்திருக்க வேண்டியது அவசிய



மெனவும் அவர் குறிப்பிட்டார்.

பொதுநலவாய உச்சி மாநாட்டின் வரலாறு மற்றும் அதனால் இலங்கைக்குக் கிடைக்கக் கூடிய பயன்கள் தொடர்பில் தமிழ் மற்றும் சிங்கள மொழிகளில் சுமார் அரை மணித்தியாலயத்திற்கு வினாக்கள் கேட்கப்பட்டன.

இணையவழி பரீட்சையில் நாடு முழுவதும் உள்ள 35 தொலைக்கல்வி நிலையங்களிலுமிருந்து சுமார் 4 ஆயிரம் மாணவர்கள் கலந்து கொண்டதாக பணிப்பாளர் நாயகம் பேராசிரியர் ஆரியரத்ன அத்துகல தெரிவித்தார்.

பாடசாலை மாணவர்கள் பொது அறிவை வளர்த்துக் கொள்வதற்கு கோகம் சிறந்தவொரு சந்தர்ப்பமெனவும் அமைச்சர் சுட்டிக் காட்டினார். (அ-2)

# அதிகார பகிர்வு குறித்த பேச்சுவார்த்தைக்கு தயார்

## ஹெல உறுமய தெரிவிப்பு

நாட்டின் தேசிய இனப்பிரச்சினைக்கு அதிகாரப் பகிர்வு மூலமாக தீர்வு காண்பதற்கான பேச்சுவார்த்தைகளைத் தொடர தாம் தயார் என ஜாதிக ஹெல உறுமய கட்சி அறிவித்துள்ளது.

சமூக ஜனநாயகக் கூட்டணியினால் ஒழுங்கு செய்யப்பட்ட கூட்டத்தில் கலந்து கொண்ட போதே ஜாதிக ஹெல உறுமய கட்சியின் ஊடகப் பேச்சாளர் நிசாந்த ஸ்ரீவர்ணசிங்க மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இதுவரை காலமும் அதிகாரங்கள் பகிரப்படக் கூடாது என்பதில் ஜாதிக ஹெல உறுமய கட்சி உறுதியாக போராடி வந்தமை குறிப்பிடத்தக்கது.

வடமாகாண சபைத் தேர்தல் முடிபுகளின் பின்னர் கட்சியின் நிலைப்பாட்டில் மாற்றம் ஏற்பட்டுள்ளதாக அரசியல் ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

கோட்டே நாக விஹாரையின் பீடாதிபதி மாதுலுவே சோபித தேரர், சட்டத்தரணியும் மேல் மாகாண சபை உறுப்பினருமான ஸ்ரீலால் லக்திலக்க உள்ளிட்ட பலரும் இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டனர். (அ-2)


# நீதிமன்றம் உத்தரவிட்டால் மீண்டும் தேர்தல் நடத்துவோம்

(கொழும்பு)

புத்தளம் சென். அன்ருஸ் கல்லூரியில் தேர்தல் கடமையில் ஈடுபட்ட அரச ஊழியர்கள் குறித்து விசாரணை நடத்துமாறு அரச நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளருக்கு பணித்துள்ளதாக தேர்தல்கள் ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

புத்தளத்தில் வாக்குச் சீட்டுக்கள் மீட்கப்பட்டமை தொடர்பில் தெளிவுபடுத்தும் ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று முன்தினம் தேர்தல்கள் செயலகத்தில் இடம்பெற்ற போதே தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதேவேளை மோசடி இடம்பெற்றுள்ளதாக தெரிவித்து மீண்டும் தேர்தல் நடத்தும்படி நீதிமன்றம் உத்தரவிட்டால் மாத்திரமே புத்தளத்தில் மீண்டும் தேர்தல் நடத்தப்படும் என தேர்தல்கள் ஆணையாளர் குறிப்பிட்டார். (அ-7)



அளவெட்டி அபிவிருத்தி மன்றத்தில் நெனசல- அறிவகம் அண்மையில் திறந்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட இலங்கை தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவர் நிலையத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி ரொஷான் தேவப்புர நெனசல அறிவகத்தினை திற நது வைத்த போது. .. (மல்லாகம் செய்தியாளர்)

# கொள்ளை வழக்குடன் தொடர்புடைய மூன்று சந்தேகநபர்களுக்கு பிணை

(கொழும்பு)

தமிழ் வர்த்தகரிடம் கோடி ரூபாய் கொள்ளையடித்த சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர்களில் மூவர் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

நீதிமன்றத்தின் உத்தரவுக்கு அமைய நான்கு மாதங்களாக விளக்கமறியலில் இருந்த கோட்டை பொலிஸ் நிலைய போக்குவரத்து பொறுப்பதிகாரி உட்பட மூவருக்கு பிணை வழங்கப்பட்டுள்ளது.

தமிழ் வர்த்தகர் ஒருவரிடமிருந்து கம்பனி வீதியில் வைத்து 10 மில்லியன் ரூபா கொள்ளையடிக்கப்பட்ட சம்பவம் தொடர்பான வழக்கு விசாரணை கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போதே நீதவான் மேற்கண்டவாறு உத்தரவிட்டுள்ளரார். அடையாள அணிவகுப்பில் இவர்கள் அடையாளம் காணப்படவில்லை என்பதனால் இவர்களை பிணையில் விடுவிப்பதாக நீதவான் அறிவித்தார்.

இதேவேளை இந்த கொள்ளை சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்று கூறப்படும் ஏனைய எட்டு சந்தேக நபர்களையும் ஒக்டோபர் 9 ஆம் திகதி வரையிலும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடையதாக கூறப்படும் பிரதான் சந்தேக நபர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து கொழும்பு குற்றப்புலனாய்வு பிரிவினரால் கைது செய்யப்பட்டிருந்தார். (அ-2)

# நான் விலகியதாலேயே வீழ்ந்தது ஐ.தே.கட்சி

## தயாசிறி பெருமிதம்

(கொழும்பு)

எனது விலகலோடு ஐக்கிய தேசியக் கட்சி வீழ்ச்சி எவ்வாறு இருக்கும் என்பதை தேர்தல் முடிபு சுட்டிக்காட்டியுள்ளதாக தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

அத்துடன் குருநாகல் மாவட்டத்தில் ஐக்கிய தேசியக் கட்சி வீழ்ச்சியடைந்துள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

ஹெட்டிபொல பகுதியில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

ஐக்கிய தேசியக் கட்சியில் உள்ள 37 பேரும் ஒரு இலட்சத்து 65 ஆயிரம் வாக்குகளையே பெற்றுள்ளனர். ஆனால் மூன்று இலட்சத்து 36 ஆயிரம் வாக்குகளை என்னால் பெற முடிந்தது.

குருநாகல் மாவட்டத்தில் ஐக்கிய தேசியக் கட்சி சரிந்து வீழ்ந்துள்ளது. அதை ஏற்றுக் கொள்ள வேண்டும். குருநாகல் மாவட்டத் தலைவர் அகில விராஜ் காரியவசத்தின் தொகுதியில் 18 வீத வாக்குகளே கிடைத்திருக்கின்றன.

அடுத்து ஹரீன் பெர்னாண்டோவும் ரஞ்சன் ராமநாயக்கவும் பண்டுவஸ்நுவர தொகுதியில் என்னைப் பற்றிக் கீழ்த்தரமாக பேசிவிட்டு சென்றுள்ளார்கள். இவர்கள் இங்கிருந்து மேலும் என்னைத் தூற்றி இருந்தால் எனக்கு மேலும் வாக்குகள் அதிகரித்திருக்கும்.

மேலும் விருப்பு வாக்குகளுக்கு விலை நிர்ணயிக்க முடியாது என்பதை நாம் நிரூபித்துள்ளோம். உண்மையில் இது நாட்டின் அரசியலுக்கு நாம் செய்த மிகப் பெரிய கௌரவமாகும்.

எனவே பணத்தால் இவற்றை கணிப்பிட முடியாது என்பதை அனைத்து வேட்பாளர்களும் புரிந்து கொள்ளுதல் வேண்டும் என்றார். (அ-7)

# மனுத்தாக்கல் செய்தார் விக்ரமபாகு கருணாரட்ன

(கொழும்பு)

கலாநிதி விக்ரமபாகு கருணாரத்ன தனக்கு கிடைக்க வேண்டிய சம்பளம், சேவைக்கால கொடுப்பனவு, சேமலாபநிதி என்பனவற்றை பேராதனை பல்கலைக்கழகம் வழங்கத்தவறியுள்ளதென முறையிடும் ஓர் அடிப்படை உரிமைகள் மனுவை உயர் நீதிமன்றில் தாக்கல் செய்துள்ளார்.

இந்த மனுவில் பிரதிவாதிகளாக பேராதனை பல்கலைக்கழகத்தின் பேரவை உறுப்பினர்கள் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

இந்த மனுவை விசாரித்த நீதிமன்றம் பல்கலைக்கழகத்தின் பேரவை உறுப்பினர்களுக்கு அறிவித்தல் வழங்குமாறு பணித்தது.


மனுதாரர் சார்பில் கே.சாமிந்த பெரேராவால் நெறிப்படுத்தப்பட்ட எம்.ஏ. சுமந்திரன் பிரேமதிலக ஆகியோர் ஆஜராகினர்.

20.10.1982 இலிருந்து தன்னை மீண்டும் பணியில் அமர்த்தும்படி அமைச்சரவை எடுத்த தீர்மானத்தை செயற்படுத்த பேராதனை பல்கலைக்கழக பேரவை உறுப்பினர்கள் தவறிவிட்டனர் என நீதிமன்றம் அறிவிக்க வேண்டுமென அவர் கேட்டுள்ளார்.

தனக்குரிய கொடுப்பனவுகளை பிரதிவாதிகள் வழங்க பணிக்க வேண்டுமெனவும் தனக்கு நட்ட ஈடாக இரண்டு மில்லியன் ரூபாய்களை வழங்க வேண்டுமெனவும் இவர் நீதிமன்றிடம் கேட்டுள்ளார். (அ-2)




# பெருந்தனக்காரன் தண்டிலன் கதை



...அவனை வாயில் காவலர்கள் தடுத்து நிறுத்தியதோடு அவன் வெளியே போக வேண்டும் என்று மிகவும் கடுமையாகக் கூறினர். அப்போது அங்கிருந்த கோரம்பன் காவலர்களை எச்சரிக்கை செய்பவன் போல் "காவலர்களே, ஜாக்கிரதை! பெரும்பணக்காரன் தண்டிலன் அரசனின் ஆதரவைப் பெற்றதினால் மிகுந்த ஆணவக்காரனாகிவிட்டான். அவன் முன்பு என்னை அடித்து உதைத்ததைப்போல உங்களையும் அடித்து உதைத்துவிடப் போகிறான். ஜாக்கிரதை!" என்று சொன்னான்.

உடனே தண்டிலன், கோரம்பன் தன்னைப் பற்றி அரசனிடம் தவறான தகவலைக் கூறி அவர் மனதில் நஞ்சு கலந்துவிட்டான். என்று புரிந்து கொண்டான். அவன் தனது வீட்டிற்குத் திரும்பி வந்து இனி தான் செய்ய வேண்டியதைப் பற்றி யோசித்தான்.

அன்று மாலை தண்டிலன் கோரம்பனைத் தன் வீட்டிற்கு அழைத்து வரச்செய்து அவனுக்கு அருமையான இரண்டு பட்டாடைகளைப் பரிசாக அளித்து "நண்பனே! எனது மகளுடைய திருமணத்தன்று நான் உன்னிடம் நடந்து கொண்ட முறைக்கு என்னை மன்னிப்பாயாக. அப்போது



நான் மிகவும் பதற்றத்துடன் இருந்தேன். நீ தவறுதலாக அரசரின் இருக்கையில் அமர்ந்தவுடன் நான் உணர்ச்சி வசப்பட்டு உன்னை அடித்துவிட்டேன்! அதற்கு வருந்தும் வகையில் நான் உனக்கு அளிக்கும் இப்பரிசை நீ ஏற்றுக்கொள்ள வேண்டும்" என்று கூறினான்.

இந்த முகஸ்துதியில் மயங்கிப் போன கோரம்பன், தண்டிலன் பரிசாக அளித்த பட்டாடைகளை ஏற்றுக் கொண்டு அவனை மன்னித்தான்.

"நீங்கள் ஏன் அவ்வாறு நடந்து கொண்டீர்கள் என்பது இப்போது எனக்குப் புரிகிறது. உங்கள் தவறை நீங்கள் உணர்ந்து கொண்டது எனக்கு திருப்தியளிக்கிறது.

நீங்கள் மீண்டும் அரசரின் ஆதரவினைப் பெறுவதற்கான வேலையை நான் செய்வேன்" என்று புன்னகையுடன் கோரம்பன் சொன்னான்.

அவன் அங்கிருந்து செல்வதைப் பார்த்துக்கொண்டிருந்த தண்டிலன், அற்ப விடயங்கள் ஒரு துஷ்டனிடம்



கூட மாற்றத்தை ஏற்படுத்திவிடும் என்பது மிகச் சரிதான் என்று நினைத்தான்.

கோரம்பனும் தான் செய்த தவறுக்காகவே தான் அவமானப்படுத்தப்பட்டோம் என்று நினைத்தான்.

இப்போது தண்டிலன் கோரிய மன்னிப்பும் அவன் அளித்த உயர்ந்த பரிசும் அவனுக்கு மகிழ்ச்சியை அளித்தன.

மறுநாள் காலை, அரசனின் பள்ளியறையை சுத்தம்செய்ய வந்த கோரம்பன், அரசனுக்குப் பாதி விழிப்பு வரும்வரைக் காத்திருந்து மெதுவாக முணுமுணுக்கத் தொடங்கினான்.

"அடடா! அரசரின் பழக்கத்தைப் பார்! கழிப்பறையில் வைத்து வெள்ளரிக்காய் சாப்பிடுகிறாரே" என்று தலையை அங்குமிங்கும் அசைத்துக் கொண்டே கூறினான்.

இதைக் கேட்டதும் அரசனுக்கு ஆத்திரம் உச்சிக்கு ஏறியது.


"கோரம்பா! என்ன முட்டாள்த் தனமாகப் பேசுகிறாய்! கழிப்பறையில் வைத்து நான் ஒருபோதும் வெள்ளரிக்காயை சாப்பிடமாட்டேன்" என்று சினந்து கூறியதோடு "நீ என் பணியாள் என்பதால்தான் உன்னைக் கொல்லாம் விட்டேன்" என்றான்.

"அரசே! என்னை மன்னித்து விடுங்கள். நான் நேற்றிரவு நன்கு மது குடித்துவிட்டு சூதாடினேன்.

அந்த மயக்கம் இன்னும் எனக்கு இருக்கிறது. அதனால் நான் என்ன சொன்னேன் என்பது எனக்குத் தெரியவில்லை" என்று கோரம்பன் மிக்க பணிவுடன் கூறினான்.

மன்னன் நினைத்தான்: "இவன் என்னைப் பற்றியே இப்படிப் பொய்யுரைத்தான் என்றால் தண்டிலனைப் பற்றிக் கூறியதும் பொய்யாகத் தானே இருக்க வேண்டும். தண்டிலனை நான் உதாசினம் செய்தது மிகப் பெரிய தவறாகும். நல்ல நிர்வாகத்திற்கு அவனது அறிவுரை எனக்குத் தேவை!" என்று.

அதனால் தண்டிலனுக்கு அரச



னின் ஆதரவு மீண்டும் கிடைத்தது.

(முற்றும்)




- 1540 - இயேசு சபைக்கு போப்பாண்டவர் மூன்றாம் பவுல் ஒப்புதல் அளித்தார்.
- 1590 - ஏழாம் ஏர்பன் திருத்தந்தை பதவியேற்ற 13 ஆம் நாள் இறந்தார். இவரே மிகக்குறுகிய காலம் திருத்தந்தையாக இருந்தவர்.
- 1821 - மெக்சிக்கோ, ஸ்பெயினிடமிருந்து விடுதலை அடைந்தது.
- 1825 - உலகின் முதலாவது பயணிகள் தொடருந்து சேவை இலண்டனில் ஆரம்பமானது.
- 1893 - சிகாகோவில் இடம்பெற்ற உலகச் சமயங்களின் பாராளுமன்ற மாநாடு முடிவடைந்தது.
- 1905 - அல்பேர்ட் ஐன்ஸ்டைன் முதற்தடவையாக $E=mc^2$ என்ற சமன்பாட்டை அறிமுகப்படுத்தினர்.
- 1937 - பாலிப்புலி இனத்தின் கடைசிப் புலி கொல்லப்பட்டது.
- 1940 - இரண்டாம் உலகப்போர்: ஜெர்மனி, ஜப்பான், இத்தாலி ஆகியன முத்தரப்பு உடன்பாட்டில் பேர்லின் நகரில் கையெழுத்திட்டன.
- 1961 - சியேரா லியோன் ஐ.நா.வில் இணைந்தது.
- 1977 - ஒண்டாரியோவில் 300 மீட்டர் உயர தொலைக்காட்சி கோபுரம் ஒன்றில் சிறு விமானம் ஒன்று மோதியதில் கோபுரம் இடிந்து வீழ்ந்தது.
- 1994 - மியான்மரில் இராணுவ ஆட்சியை எதிர்க்க மக்களாட்சிக்கான தேசிய அமைப்பொன்றை ஆங்கான் சூகி உருவாக்கினார்.
- 1996 - ஆப்கானிஸ்தானில் முஹமது ஓமார் தலைமையிலான தலிபான் தீவரவாதிகள் காபூல் நகரைக் கைப்பற்றி ஜனாதிபதி புரானுடீன் ரபானியை ஆட்சியிலிருந்து விரட்டினர். முன்னாள் ஜனாதிபதி முஹமது நஜிபுல்லா காபூல், நகர மின்சாரக் கம்பத்தில் மக்கள் முன்னிலையில் தூக்கிலிடப்பட்டுக் கொல்லப்பட்டார்.
- 1997 - செவ்வாய் தளவுளவியுடனான தொடர்புகள் துண்டிக்கப்பட்டன.
- 1998 - கூகிள் தேடுபொறி ஆரம்பிக்கப்பட்டது.
- 2002 - கிழக்குத் தீமோர் ஐக்கிய நாடுகள் சபையில் இணைந்தது.

### பிறப்புகள்

- 1907- பதக் சிங், இந்திய விடுதலைப் போராட்டவீரர் (இ.1931)
- 1933 - நாகேஷ் நகைச்சுவை நடிகர் (இ.2009)
- 1953 - மாதா அம்ருதானந்தமயி இந்திய ஆன்மீகவாதி


### இறப்புகள்

- 1907 - ஜேம்ஸ் எச்.மார்ட்டின், யாழ்ப்பாணம் கத்தோலிக்க பத்திரிகை ஆசிரியர்
- 1972 - எஸ். ஆர்.ரங்கநாதன், இந்தியக் கணிதவியலாளர் (பி.1892)
- 1996- முஹமது நஜிபுல்லா, ஆப்கானிஸ்தான் ஜனாதிபதி (பி.1947)

### சிறப்புகள்

உலக சுற்றுலா நாள்

### பகத் சிங்



இந்தியாவின் விடுதலைப் போராட்ட வீரரும் இந்திய விடுதலை இயக்கத்தில் முக்கிய புரட்சியாளரும் ஆவார். இக்காரணத்துக்காக இவர் சாஹீது பகத் சிங் என அழைக்கப்பட்டார். இவர் இந்தியாவின் முதலாவது மாக்சியவாதி எனவும் சில வரலாற்றாசிரியர்களால் குறிப்பிடப்படுவதுண்டு.

இந்தியாவின் பிரித்தானிய ஆட்சிக் கெதிராகப் போராடிய குடும்பமொன்றின் பிறந்த பகத் சிங் இளம் வயதிலேயே ஐரோப்பிய புரட்சி இயக்கங்களைப் படிக்க ஆரம்பித்து பொதுவுடமைக் கொள்கைகளில் ஈர்க்கப்பட்டார்கள். பல புரட்சி இயக்கங்களுடன் தொடர்புகளை ஏற்படுத்தி விரைவிலேயே இந்துஸ்தான் குடியரசு அமைப்பு என்ற புரட்சி அமைப்பின் தலைவர்களின் ஒருவரானார். 63 நாட்கள் சிறை வாசத்திலிருந்த போது இந்திய கைதிகளுக்கு ஏனைய பிரித்தானிய கைதிகளுடன் சமவுரிமை பெறுவதற்காக உண்ணாநோன்பு இருந்ததில் இவரது செல்வாக்கு மக்களிடையே அதிகரித்தது.

முதுபெரும்காங்கிரஸ் தலைவர் லாலா லஜபத் ராய் என்பவரின் இறப்புக்குக் காரணமாயிருந்த காவல அதிகாரியைச் சுட்டுக்கொண்ட குற்றத்துக்காக 24 -வது அகவையில் தூக்கிலிடப்பட்டார். இந்நிகழ்வானது மேலும் பல இளைஞர்களை இந்திய விடுதலைப்போராட்டத்தில் ஈடுபடவும் சோஷலிசக்கொள்கைகள் இந்தியாவில் பரவவும் வழிவகுத்தது.

# குண்டலி சக்தி என்றால் என்ன?



ஆன்மீகம் 126

உலகம் முழுவதும் இப்பொழுது எந்த வியாபாரம் சூடு பிடிக்கிறது என்றால், ஆன்மீகம் என்ற போர்வையில் ஆங்காங்கே நடைபெறும் யோகபயிற்சி, தியானப்பயிற்சி, குண்டலிபயிற்சி என்றும், ஆதி காலத்தில் வாழ்ந்த ரிஷி, சித்தர், முனிவர்களைப் பற்றிப் பேசயும் இன்றும் சிலர் இராமாயணம், மகாபாரதம் போன்ற உன்னதமான கதைகளை எடுத்து கூறியும் அதனை தங்களது வசிகர பேச்சு திறமையால் ஆங்கிலத்தில் சரளமாகப்பேசி, வெளிநாட்டினரை திகைக்க வைத்து அவர்கள் மன அமைதியையும், சந்தோஷத்தையும் தேடி ஆங்காங்கே உள்ள ஆன்மீகவாதிகள் ஆச்சிரமங்களில் கூடி ஆஹா மிகப்பெரிய ஆச்சிரமம், இதுபோல் இல்லை என்றும் போட்டா போட்டியுடன் அவர் என் குரு! அவர்தான் என் குரு! இல்லை, இல்லை இவரே கலியுகத்துக் குரு! ஜெகத்குரு! ஜெயகுரு! சிவகுரு! என்றெல்லாம் சொல்லக் கேள்விப்பட்டிருக்கிறோம்.

ஆனால், குண்டலி சக்தியை மாமிசமும், மதுவும், மங்கையர்களுடன் மன மகிழ்ச்சியில் இருக்கும் மூன்று நட்சத்திர ஹோட்டல்களில் இதற்கு இவ்வளவு பணம் கட்டினால் பயிற்சி கற்றுக்கொடுக்கப்படும் என்ற விளம்பரங்களைக் காணும் போது மனம் வருத்தப்பட்டாலும், கேவலம் மனிதன் அமெரிக்க டொலருக்காக ஆண்டனுக்கே டீலராகி கடைசியில் அனைத்தும் விட்டு விட்டு திவாலாகி வெறும் கையோடு போவதற்குள், ஆன்மீகவாதிகள் ஆடுகின்ற ஆட்டம், சொல்லி மாளாத அளவுக்கு இவர்கள் பின்னால் கூடும் மனித கூட்டமோ கூட்டம்!



இந்த கும்மாளம் போடும் குருட்டு குருவுக்கு கிடைத்த செவிட்டு சீடர்களைக் கண்டு வருத்தப்பட்டே ஆக வேண்டும்.

இப்படிப்பட்டவர்கள் எப்படிப் பட்டவர்கள். ஆனாலும் சரி, நிச்சயமாக இவர்களால் மனித உடலில் இருக்கும் மாபெரும் உயிர் சக்தியான தாய் மனோன்மணி ஈஸ்வரி சிறிய பாம்பின் ரூபமாக அதுவும் ஆலம் பழத்திலுள்ள விதையைப் போல இருக்கும் வடிவில் தொப்புளுக்கு மேல உள்ள ஒரு அங்குல உயரத்தில் உடலில் ஒட்டியும் ஒட்டாமல் இருக்கும் அந்த உயிர் சக்தியை விரயம் ஆக்காமல் பாதுகாக்கும் அற்புத மனிதர்களால் மட்டுமே அந்த மாபெரும் சக்தியை புருவ மத்தியில் பல வர்ணங்களில் அவர் அவர் சக்திக்கு ஏற்ப நாகத்தின் ரூபமாக காண்பார்கள்.

தன் உயிரையே இத்தனை வருடம் வெட்டியாய் வாழும் உடலும் மனமும் சேர்ந்து கண்ட காட்சியை அவர் அவரே அனுபவிக்க வேண்டும்.

சரி இந்த காலத்தில் குண்டலி சக்தியை எந்த மகானாலும் எழுப்ப முடியுமா என்று கேட்டால் மனித ரூபமாய் உள்ளவர் 100 சதவீதம் கண்டிப்பாக எழுப்பவே முடியாது! முடியாது! முடியாது!

ஆனால், முப்பது வயதிற்கு மேல் இந்த சக்தியை எழுப்புவது சாத்தியம் அல்ல!

என்னமோ குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை பள்ளிக்கூடம், காலேஜ் போறாங்க படிக்கிறாங்க. ஆனால், எதைப்படிக்க வேண்டும். நல்ல ஒரு ஆசான் எதையெல்லாம் சொல்லித் தரவேண்டும். மனித உயிர் வளர்ச்சிக்கும் பிறந்த பயனை பெறுவதற்கும் உடலுக்குள் இருக்கும் அற்புத ஆற்றல் பெற்ற சக்திகளை பெறுவது எப்படி? ஞானக் கண்களை திறக்கும் வழிமுறை தான் என்ன? என்பதும் கெமிக்கல் அல்லாத உணவுகளை ஏன் உண்ண வேண்டும்? வித விதமான வியாதிகள் வருவதற்கு முன் தடுப்பது எப்படி? என்பதை அறிந்து உணர்ந்த குருமகா ஆசான் இல்லாத கல்வி அறிவு அனைத்தும் கடலில் கரைத்த பெருங்காயம் போல்தான்.

அன்னை சித்தர்
இராஜ்குமார் குருஜி

(தொடரும்)

# இனப்படுகொலை குறித்து விசாரிக்க, சுதந்திரமான- பன்னாட்டு விசாரணை ஆணையத்தை அமைக்கவும்

## ஐ.நா.சபையில் அன்புமணி ராமதாஸ் ஆற்றிய உரை

“இலங்கை வடக்கு மாநிலத்தில் செயற்பட்டுவரும் மனித உரிமை அமைப்புகளிடமிருந்து அண்மையில் வெளியாகியுள்ள அறிக்கையில் தமிழ்ப்பெண்களை மிரட்டிக் கட்டாயக் கருத்தடை செய்யப்பட்டது குறித்து ஆதாரங்களுடன் பதவுசெய்யப்பட்டிருக்கிறது.

உலகில் அனைத்து வகையான இன வெறியையும் அது தொடர்பான சகிப்புத்தன்மையின்மையையும் எவ்வளவு கடுமையாகக் கண்டிக்க முடியுமோ, அவ்வளவு கடுமையாக பசுமைத் தாயகம் கண்டிக்கிறது.

இன வெறியால் அன்றாட ஒடுக்குமுறை முதல் ஒட்டுமொத்த இனப்படுகொலை வரை பலவிதமான விளைவுகள் ஏற்படுகின்றன.

இவற்றில் இரண்டாவது விளைவான இனப்படுகொலை துரதிர்ஷ்டவசமாக இன்று இலங்கை நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.

இனப்படுகொலை என்பது அப்பாவி மக்களைத் திட்டமிட்டுப் படுகொலை செய்வது என்று வரையறுக்கப்பட்டிருக்கிறது.

இனப்படுகொலை திட்டமிட்டுச் செய்யப்படும் ஒன்று என்பதால் இது மிகவும் கொடூரமானதாகவும் நிரூபிக்க முடியாததாகவும் இருக்கும்.

இலங்கை வடக்கு மாநிலத்தில் செயற்பட்டு வரும் மனித உரிமை அமைப்புகளிடமிருந்து அண்மையில் வெளியாகியுள்ள அறிக்கைகளில், தமிழ்ப்பெண்களை மிரட்டிக் கட்டாயக் கருத்தடை செய்யப்பட்டது குறித்து ஆதாரங்களுடன் பதிவு செய்யப்பட்டிருக்கிறது.


வடக்கு மாநிலத்தில் உள்ள ஒரு கிராமத்தைச் சேர்ந்த 3 பெண்களை, அவர்களின் குழந்தைகளுக்குத் தடுப்பூசி போட்டுக் கொள்வதற்காக, கிளிநொச்சி அரசு மருத்துவமனைக்கு வரும்படி அதிகாரிகள் கூறியுள்ளனர்.

அதன்படி அவர்கள் அங்கு சென்றபோது அவர்களை மோசடி செய்து கருத்தடை ஊசியை அவர்களின் கைகளில் செலுத்தியுள்ளனர்.

கருத்தடை செய்து கொள்ளாவிட்டால் அந்த அரசு மருத்துவமனையில் வழங்கப்படும் எந்த சிகிச்சையையும் பெற்றுக்கொள்ள முடியாது என்று அப்பெண்கள் மிரட்டப்பட்டிருக்கின்றார்கள்.

இத்தமிழ்ப்பெண்களுக்கு கட்டாயக் கருக்கலைப்பு செய்யப்பட்டது குறித்து, அமெரிக்க வெளியுறவு அமைச்சகத்தால் கடந்த 2007 ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட அறிக்கையை விக்கிலீக்ஸ் அண்மையில் அம்பலப்படுத்தியது.

இக்கட்டாயக் கருத்தடையும் கருக்கலைப்புச் செயலும் சர்வதேச மனித உரிமைகள் மற்றும் மனித நேயச் சட்டத்தை அப்பட்டமாக மீறும் செயலாகும்.



நலிவடைந்த மக்களுக்குத் தேவைப்படும் அடிப்படை சுகாதார சேவைகளை கட்டாயக் கருத்தடைக்காகப் பயன்படுத்திய இச்செயல் மூர்க்கத்தனமானது. தார்மீக ரீதியில் கண்டிக்கத் தக்கது என்று ஒரு மருத்துவர் என்ற முறையில் நான் கருதுகிறேன்.

இந்தக் குற்றச்சாட்டுக்கள் ஐக்கிய நாடுகள் அமைப்பால் விசாரிக்கப்பட வேண்டும். இந்தக் குற்றங்கள் அனைத்தும் தமிழர்களுக்கெதிரான இனப்படுகொலை வரலாற்றில் அண்மையில் நடைபெற்றவையாகும்.

2009 ஆம் ஆண்டில் இந்த அட்டூலியங்கள் உச்சக்கட்டத்தை அடைந்தன. அப்போது நிகழ்த்தப்பட்ட போர்க் குற்றங்கள் மற்றும் மனித இனத்திற்கு எதிரான குற்றங்களின் விளைவாக இலங்கை கடற்கரை ஓரத்தில் குருதி வெள்ளம் ஓடியது. பல்லாயிரக்கணக்கான தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டனர்.

எனவே, இலங்கை அரசின் போர்க்குற்றங்கள், மனித இனப்படுகொலை குறித்து விசாரிக்க சுதந்திரமான பன்னாட்டு விசாரணை ஆணையத்தை அமைக்கும்படி ஐ.நா.மனித உரிமை ஆணையத்தை நாங்கள் கேட்டுக்கொள்கிறோம்” என அன்புமணி ராமதாஸ் தனது உரையில் தெரிவித்திருந்தார்.

## யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் பிரிவு A வழங்கும்...

# அணு தொழில்நுட்பத்தின் நன்மைகளும் தீமைகளும்

*(சென்றவாரத் தொடர்ச்சி...)*

ஒரு செக்கனுக்குள் கோடான கோடி தாக்கங்கள் அணு உலையில் ஏற்படுகின்றன. ஓர் அணுப் பிளவில் மட்டும் $200MeV$ வெப்ப சக்தி வெளிவிடப்படுகின்றது. $U^{235}$ சுயமாகவே பிளவுபடுவதனால், அதனைச் சூழ நியூத்திரன்கள் உருவாகி மறைகின்றன. நியூத்திரன் பெருக்க இலக்கம் (Multiplication Factor) $K$ எனும் குறியீட்டால் குறிக்கப்படும். $K$ யின் பெறுமதியைக் கொண்டு அணு உலையின் இயக்கம் பற்றிக் கூறலாம்.

$K = 1$ எனில் உருவாகும் நியூத்திரன்கள யாவும் தாக்கத்தில் பயன்படுகின்றன.


$K = 0.5$ எனில் நியூத்திரன்களின் எண்ணிக்கை குறைக்கப்பட்டு உலை நிறுத்தப்படுகின்றது.

$K = 1.006$ எனில் அணு உலையின் சக்தி அதிகரிக்கின்றது.

$K \geq 1.5$ எனில் நியூத்திரன்களின் எண்ணிக்கை அளவுக்கு மீறி அபாயம்.

$K \geq 3$ எனில் அணுகுண்டு வெடிப்பு.


இரண்டாம் உலகப்போர் நடந்து கொண்டிருந்த போது ஐரோப்பாவைச் சேர்ந்த பல



சிக்காக்கோ பல்கலைக்கழகத்தில் முதலாவது அணு உலை


விஞ்ஞானிகள் அமெரிக்காவிற்கு வரவழைக்கப்பட்டனர். டென்மார்க்கைச் (Denmark) சேர்ந்த நீல்ஸ் போர் (Niels Bohr), கங்கேரியைச் (Hungery) சேர்ந்தவர்களான லியோ ஸிலார்டு, (Leo Szilard), எட்வெட் ரெலர் (Edward Teller), யூஜீன் விஞ்ஞர், (Eugene Wigner) ஆகியோரும், இத்தாலியைச் சேர்ந்த என்றிக்கோ ஃபேர்மி (Enrico Fermi), ஜேர்மனியைச் சேர்ந்த கான்ஸ் வெதே (Hans Bethe) போன்றோர் அமெரிக்காவைச் சென்றடைந்தனர். இவர்கள் அனைவரையும் ஒன்று சேர்த்த அமெரிக்க விஞ்ஞானியான ரொபேட் ஓப்பன்கைமர் (Robert Oppenheimer) லெஸ்லஸ குரூஸ் (Leslie Groves) எனும் இராணுவ அதிகாரியின் தலைமையின் கீழ் நியூமெக்ஸிக்கோ நகரில் அணுகுண்டுத் தயாரிப்பில் ஈடுபட்டனர்.

அதே காலப்பகுதியில் (1942) சிக்காக்கோ





பல்கலைக்கழகத்தில் உள்ள உலோகவியல் ஆய்வுகூடத்தில் (Metallurgical Laboratory) அணுவியல் விஞ்ஞானிகள் ஒன்று கூடி முதலாவது அணு உலையைக்கட்டத் தொடங்கினர். இதற்கு Chicago Pile-1 எனப் பெயரிடப்பட்டது. இவ் அணு உலை வடிவமைப்பில் ஆர்தர் கொம்தன் (Arthur Compton), லியோ ஸிலார்டு (Leo Szilard), யூஜீன் விஞ்ஞர் (Eugene Wigner), வால்ற்டர்ஸின் (Walter Zinn) மற்றும் என்றிக்கோ ஃபேர்மி (Enrico Fermi) போன்றோர் ஈடுபட்டனர். Chicago Pile-1 எனும் அணு உலையானது கவசமற்று (Unshielded) வடிவமைக்கப்பட்டதோடு, வெப்பம் தணிக்கப்படாததாகவும் வடிவமைக்கப்பட்டது. இவ் அணு உலையில் 4988. 5kg யுரேனியமும் 32,652kg யுரேனியம் ஒட்சைட்டும் பயன்படுத்தப்பட்டன. அணுப் பிளவின் மூலம் முதலில் உருவாகும் நியூத்திரனின் வேகத்தைக் கட்டுப்படுத்த 312,008kg காபன் (Graphite) கட்டிகள் பயன்படுத்தப்பட்டன. இதற்கான மொத்தச் செலவு ஒரு மில்லியன் டொலர் ஐத் தாண்டியது.

அணுவியல் சோதனைகளுக்கும் அணுக் கருத் தொடரியக்கச் சோதனகளுக்குமென வடிவமைக்கப்பட்ட இவ் அணு உலை மிகக் குறைந்தளவு வலுவை உடைய வெப்ப




**The World's First Cain Reaction**

சக்தியை உருவாக்கக்கூடியதாக இருந்தது. நியூத்திரன் பெருக்க இலக்கம் (Multiplication Factor) $K=1$ ஆகவுள்ளவாறு பேணி, உருவாகும் நியூத்திரன்கள் யாவும் தாக்கத்தில் பயன்படுகின்றவாறு 17 நாட்களுக்கு என்றிக்கோ ஃபேர்மி (Enrico Fermi) பரிசோதனை செய்தார். வேகம் குறைந்த நியூத்திரன்தான் $U^{235}$ உடன் தாக்கமடைந்து அணுக்கருப் பிளவை உண்டாக்கும். வேகம் கூடிய நியூத்திரன்கள் $U^{235}$ உடன் தாக்க மடைந்து அணுக கருப் பிளவை உண்டாக்காது. ஆனால் வேகம் கூடிய நியூத்திரன்கள் $U^{238}$ அணுக்கருவுடன் தாக்கமடையும் போது அது $Pu^{239}$ ஆக மாறுகின்றது. இதையடுத்து வேகம குறைந்த நியூத்திரன்கள் $Pu^{239}$ ஐத் தாக்கி அணுக்கருப் பிளவை ஏற்படுத்தி பெருமளவு சக்தியை வெளிவரச் செய்கின்றது.




காபன் (Graphite) கட்டிகள் செங்கல் வடிவத்தில் வெட்டப்பட்டு, அவற்றின் மூலைகளில் எரிபொருளான யுரேனியக் கோளங்கள் அடுத்தடுத்து அடுக்கப்பட்டன. அணு உலையின் பாதுகாப்பிற்காக நியூத்திரன் விழுங்கியான கட்மியம் கோல்கள் (Cadmium Rods) இடையிடையே துளைகளிடப்பட்டு நுழைக்கப்பட்டன. நியூத்திரன்களின் வேகத்தைக் கட்டுப்படுத்த போரன் இரும்புக் கோல்கள் (Boron Steel Rods) பயன்படுத்தப்பட்டன. மற்றைய துளைகளில் போரன் ரைபுளோரைட் (Boron Trifluoride) உள்ள நியூத்திரன் கண்காணிப்பான்கள் (Neutron Monitors) அமைக்கப்பட்டன.



**Chicago Pile - 1**

1942ஆம் ஆண்டு டிசம்பர் 2ஆம் திகதி நியூத்திரன்களின் வேகத்தைக் கட்டுப்படுத்தும் போரன் இரும்புக் கோல்கள் (Boron Steel Rods) நீக்கப்பட்டு, நியூத்திரன் பெருக்க இலக்கம் (Multiplication Factor) $K=1.006$ ஆக்கப்பட்டு முதன் முதலாக அணுககருத் தொடரியக்கத் தாக்கம் (Nuclear Chain Reaction) என்றிக்கோ ஃபேர்மி (Enrico Fermi) மற்றும் யோர்ச் வீல் (George Weil) ஆகியோர் தலைமையில் சிக்காக்கோ அணு உலையில் செய்துகாட்டப்பட்டது. இதன்மூலம் அணுயுகம் (Atomic Age) தோன்றியது. மாபெரும் இவ் அரிய

திருமதி G.செல்வலட்சுமி
**B.Sc (Hons), P.G.D.E. (Merit)**
ஆசிரியர்,
யாழ்.வேலணை மத்திய கல்லூரி

சாதனையை விஞ்ஞான மேதைகளான என்றிக்கோ ஃபேர்மி (Enrico Fermi), ஆர்தர் கொம்தன் (Arthur Compton), லியோ ஸிலார்டு (Leo Szilard), யூஜீன் விஞ்ஞர் (Eugene Wigner), வால்ற்டர் ஸின் (Walter Zinn) போன்றோர் நேரடியாகக் கண்டு பெருமகிழ்ச்சி அடைந்தனர். இவ்வாறு முதன்முதலாக இயக்கப்பட்ட அணு உலையானது 28 நிமிடங்களுக்கு தொடர்ச்சியாக இயக்கப்பட்டு நிறுத்தப்பட்டது.

முற்றும்.

## வாரத்திற்கு ஒரு புதிர்! 93

**ஐன்ஸ்ரைனின் திணிவு - சக்தி சமவலுமைச் சமன்பாடு யாது?**

**புதிர் 93 இற்கான விடைகளை 07.10.2013 இற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்ப வேண்டிய முகவரி:**

**திரு.அ.குகன்**
**ஆசிரியர் பிரிவுA**
**யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம்,**
**ஆசிரிய கல்வியியலாளர்,**
**யாழ். தேசிய கல்வியியற் கல்லூரி,**
**கோப்பாய்.**

**சரியான விடையை அனுப்பும் அதிர்ஷ்டசாலிக்கு ரூபா 250/- பணப்பரிசு வழங்கப்படும்.**

**இப் பணப்பரிசினை யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீட விலங்கியல் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி த.ஈஸ்வரமோகனிடம் நேரில் சென்று பெற்றுக் கொள்ளலாம்.**

**பரிசுக்கு அனுசரணை வழங்குவோர்:**
மக்கள் வங்கி,
யாழ்.பல்கலைக்கழகம்.

**புதிர் 92 க்கான 250/-பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி**

**வெல்லப்படவில்லை**

**புதிர் 92 க்கான கேள்வியும் விடையும்:**


**அணுக்கொள்கை (Atomic Theory) எனும் நூலை எழுதிய கிரேக்க வேதாந்த ஞானியின் பெயர் என்ன?**

**டெமோகிரிடஸ் (Democritus)**

## யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம் புதிர் இல. 93

சரியான விடை:-..........................................................................
முழுப்பெயர்:-..........................................................................
முகவரி:-..........................................................................
தொ.பே. இல:..........................................................................
கையொப்பம்:..........................................................................

# கைமாறுகிறது பிளாக்பெர்ரி நிறுவனம்




பிளாக்பெர்ரி நிறுவனம் சில மாதங்களாகவே மிகப்பெரிய சரிவை சந்தித்து வருகிறது. இந்நிலையில் இந்நிறுவனம் தன்னைத்தானே விற்பனைக்கு அறிவித்திருந்த நிலையில் பிளாக்பெர்ரி நிறுவனத்தின் மிகப் பெரிய பங்குதாரரான பேர்பாக்ஸ் பினான்ஸ் (fairfax financial holdings) அமைப்பு இந்த கம்பனியை வாங்க உள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

பிளாக்பெர்ரியின் பங்குதாரரான பேர்பாக்ஸ் பினான்ஸ் பிளாக்பெர்ரி கம்பனியை 4.7 பில்லியன் டொலருக்கு வாங்க உள்ளது. இந்திய ரூபாயின் மதிப்பின்படி கிட்டதட்ட 30,000 கோடிக்கு பிளாக்பெர்ரி நிறுவனம் விற்கப்படுகிறது.


சில ஆண்டுகளுக்கு முன் பிளாக்பெர்ரி நிறுவனம் மக்களிடத்தில் மிகவும் பிரபலமாக இருந்தது. நிறைவேற்று அலுவலர்கள், பெரு நிறுவனங்களில் பணிபுரிபவர்கள் என எல்லோரும் பிளாக்பெர்ரியை ஒரு காலத்தில் அதிகம் விரும்பினர்.


பிளாக்பெர்ரி கைபேசிகளை பயன்படுத்துவதை சிலர் கௌரவமாகவும் கருதி வந்தனர். ஆனால் அப்பிள் மற்றும் சாம்சங் போன்று நிறுவனங்களின் ஆதிக்கம் அதிகமான பின்பு பிளாக்பெர்ரி சற்று தடுமாற தொடங்கியது. அதன் பின்பு பிளாக்பெர்ரியால் பழைய நிலைமைக்கு திரும்பி வர முடியவில்லை. இந்நிறுவனம் ஏராளமான நட்டங்களை சந்தித்து வந்தது.

கிட்டதட்ட 6000 கோடி மதிப்பிலான பிளாக்பெர்ரி கைபேசிகள் விற்கப்படாமல் உள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. இந்த நட்டத்தின் காரணமாக சமீபத்தில் தனது பணியாளர்களில் 40 சதவீதத்தினரை நீக்கப்போவதாகவும் இந்நிறுவனம் அறிவித்தது. அதன் பின்பு, இப்பொழுது இந்நிறுவனம் ரூ.30,000 கோடிக்கு விற்கப்பட உள்ளது.



*பேர்பாக்ஸ் பினான்ஸ் அமைப்பின் தலைமை அதிகாரியாக இருப்பவர் பிரேம வட்ஸா. கனாடாவில் உள்ள பெரிய வணிக அமைப்பில் தலைமை அதிகாரியாக இருக்கும் இவர் ஒரு இந்தியர். இவர் ஹைத்திராபாத்தில் பிறந்தவர். பிளாக் பெர்ரி நிறுவனத்தின் பங்குதாரராக இருந்த பேர்பாக்ஸ் பினான்ஸ் அமைப்பு அந்நிறுவனத்தை முழுமையாக இப்பொழுது 30,000 கோடிக்கு வாங்க உள்ளதறகு முக்கிய காரணம் பிரேம வட்ஸாதான். இவர் கனடாவின் வாரன் பப்பெட் (waren buffet) என்று எல்லோராலும் அழைக்கப்படுகிறார்.*





*முதல் பத்து நாடுகளில் சீனா இடம்பெறாததற்கு, அந்நாடு பல இணைய தளங்களுக்குத் தடை விதித்ததுதான் காரணம் என்று கூறப்படுகிறது*

# இணையப் பயன்பாட்டில் அதிகம் பயன்பெறும் நாடுகள்

இணைய இணைப்பு இன்று உலகம் முழுவதுமே இணைப்புக்களை ஏற்படுத்தி வருகிறது தினம் தினம் பலர் புதிய இணைப்புகளை வாங்கி வருகிறார்கள் இந்த இணையம் மூலம் அதிகம் பயன்பெறும் நாடுகளின் பட்டியல் இதோ.

இணையப் பயன்பாட்டினால் அதிகம் பயன் பெறும் நாடுகளில் சுவீடன் முதல் இடத்தில் உள்ளது. அடுத்து அமெரிக்காவும், அதனை அடுத்து கிரேட் பிரிட்டனும் உள்ளன. பிராட் பேண்ட் கேபிள் இணைப்பு, நவீன தொழில்நுட்ப பயன்பாடு போன்றவற்றை முதன்மை அளவு கோலாக வைத்துள்ளார்.

மேலும், ஒரு நாட்டின் இணையத் தளம் எந்த அளவிற்குப் பயன் தரும் வகையில் செயற்படுகிறது என்பதனையும் தன் ஆய்வின் அடிப்படையாகக் கொண்டிருக் கிறார். இணைய தளங்கள் ஒரு நாட்டின் பொருளாதார, அரசியல் மற்றும் சமூக மாற்றங்களை எந்த அளவிற்குக் கொண்டு வருகின்றன என்பதுவும், இவர் ஆய்வில் முக்கியத்துவம் பெற்றிருந்தது.

மேலே குறிப்பிட்ட மூன்று நாடுகளை அடுத்து, அதிக பயன்பெறும் நாடுகளின் வரிசையில், கனடா, பின்லாந்து, சுவிட்சர்லாந்து, நியூசிலாந்து, அவுஸ்திரேலியா, நோர்வே மற்றும் அயர்லாந்து இடம் பெற்றுள்ளன. முதல் பத்து நாடுகளில் சீனா இடம் பெறாததற்குக் காரணம், அந்நாடு பல இணையத் தளங்களுக்குத் தடை விதித்துள்ளதுதான் காரணம் எனவும் தெரிவித்துள்ளாரா. அயர்லாந்து மற்ற நாடுகளில் உள்ள வாடிக்கையாளர்களுக்கு கணனி மற்றும் இணைய வசதியினை அளித்தே அதிகம் பயன் பெற்றுள்ளதாகவும் இவர் கண்டறிந்துள்ளார். தெற்கு ஆசியா மற்றும் ஆபிரிக்க நாடுகளில் பல மிகக் குறைந்த பயனைப் பெற்ற நாடுகளாக உள்ளன. இந்த பட்டியலில் கடைசி இடம் பெற்றிருப்பது நேபாளம். யேமன் நாட்டில் மத்திய கிழக்கு மாநிலம் மிகவும் குறைவான பயனையும், பயன்பாட்டையும் கொண்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

இணையத்தள பயன்பாட்டினைப் பொறுத்தவரை பல நாடுகளில், பணக்காரர்களுக்கும் ஏழைகளுக்கும் இடையே பெரிய இடைவெளி உள்ளது. 61 நாடுகளில், ஒரு பிராட்பேண்ட் இணைப்பிற்காக, ஒருவரின் சராசரி வருமானத்தில் பாதி செலவழிக்க வேண்டிய நிலை உள்ளது. உலக நாடுகளை மொத்தமாக எடுத்துக் கொண்டால், 60 சதவிகித பேர் இணையத்தைப் பார்ப்பதை தங்கள் வழக்கமான செயற்பாடாக மேற்கொள்ளவில்லை என போர்ப்ஸ் இணைய தளம் தெரிவித்துள்ளது. இந்த நிலை மாற வேண்டும் எனில், இணையத்திலிருந்து பயன் பெறும் ஒவ்வொருவரும், அடுத்த வரை அதே பூோல பயன் பெறும் வகையில் இணையத்தைப் பயன்படுத்த சொல்லி தர வேண்டும்.

வைரஸ் தாக்கங்கள் அற்றதும், திறந்த வளமாகவும் கருதப்படும் இயங்குதளமான Ubuntu மக்கள் மத்தியில் சிறந்த வரவேற்பைப் பெற்றிருந்தது.

இந்நிலையில் தற்போது தொடர்ச்சியாக அறிமுகப்படுத்தப்பட்டுவரும் ஸ்மார்ட் கைபேசிகள், டேப்லட்கள் போன்ற மொபைல் சாதனங்களில் பல்வேறு இயங்குதளங்கள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

இதனைப் பின்பற்றி மொபைல் சாதனங்களுக்கான Ubuntu இயங்குதள உருவாக்கமும் விரைவுபடுத்தப்பட்டுள்ளது. அதாவது இந்த இயங்குதளமானது முற்றிலும் தொடுதிரை தொழில்நுட்பத்திற்கு ஏற்றவாறு உருவாக்கப்படுகின்றது.

இதனை எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 17ஆம் திகதி வெளியிட தீர்மானித்துள்ளனர்.



# மொபைல் சாதனங்களுக்கு Ubuntu இயங்குதளம்

# அன்ரொய்ட் இயங்கு தளத்துக்கு 5 வயது

முதற்தர இணைய சேவைகளை வழங்கி வரும் கூகுள் நிறுவனத்தினால் ஏனைய இயங்குதள நிறுவனங்களுக்கு போட்டியாக உருவாக்கப்பட்டதே அன்ரொய்ட் இயங்கு தளம் ஆகும்.

இவ் இயங்குதளம் 2008ஆம் ஆண்டு முதன்முதலாக அறிமுகப்பட்டிருந்தது. இந்நிலையில் இந்த வருடம் தனது 5ஆவது பிறந்த தினத்தைக் கொண்டாடுகின்றது. தற்போது ஸ்மார்ட் அதிகளாவான கைப்பேசிகளில் பயன்படுத்தப்பட்டுவரும் இந்த இயங்கு தளம் சாம்சங் தயாரிப்புக்களின் 64 சத வீதமான சாதனங்களில் பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

இதேவேளை கூகுள் பிளே ஸ்டோரிலிருந்து இதுவரை 48 பில்லியன் வரையான அன்ரொயிட் அப்பிளிக்கேஷன்கள் தரவிறக்கம் செய்து நிறுவப்பட்டுள்ளதுடன், 1 பில்லியன் வரையான அன்ரொயிட் சாதனங்கள் தற்போது செயற்பாட்டிலுள்ளன.



# சி.ஐ.ஏ.விடம் சிக்காது, ஸ்னோவ்டன் ஹொங்கொங்கில் எங்கிருந்தார் தெரியுமா?

அமெரிக்க உளவுத்துறை இரகசியங்களை வெளியிட்ட எட்வார்ட் ஸ்னோவ்டன், அமெரிக்கா கைது செய்ய முயன்ற நிலையில் கொங் கொங்கில் இருந்து வெளியேறி ரஷ்ய விமானநிலையத்திற்கு சென்றது பழைய கதை. புதிய கதை என்னவென்றால், கொங்கொங்கில் இருந்து மொஸ்கோவுக்கு விமானம் ஏறுமுன், இரு தினங்கள் அவர் எங்கே பாதுகாப்பாக தங்கியிருந்தார் என்று தற்போது வெளியாகியிருக்கும் தகவல்தான்!

எட்வார்ட் ஸ்னோவ்டன், கொங் கொங்கில் உள்ள ரஷ்ய தூதரகத்திலேயே பாதுகாப்பாக தங்கியிருந்தார் என்ற செய்தியை இன்று வெளியிட்டுள்ளது.

ரஷ்ய அரசு வட்டார தகவல்களையும், ஸ்னோவ்டனுக்கு நெருக்கமானவர்களையும் மேற்கோள் காட்டி இந்தச் செய்தியை வெளியிட்டுள்ளது. ரஷ்யாவின் நம்பகத்தன்மை வாய்ந்த பத்திரிகைகளில் ஒன்றாக கருதப்படும் கொமர்சான்ட்...

இது நிஜமாக இருந்தால், அமெரிக்காவிடம் இருந்து ஸ்னோவ்டனை காப்பாற்றும் முயற்சியில் ரஷ்யா ஈடுபட்டது என்பதும் நிஜமாகிறது. ஸ்னோவ்டன் மொஸ்கோ விமான நிலையத்தில் வந்து இறங்குவதற்கு முன்னரே, ரஷ்யாவின் தொடர்புகள் அவருக்கு ஏற்பட்டு விட்டன என்பதும், நிஜமாகிறது.

ஸ்னோவ்டன் மொஸ்கோ விமான நிலையத்தில் வந்து இறங்கிய மறுநாளே, இதுதொடர்பாக கருத்து தெரிவித்த ரஷ்ய ஜனாதிபதி புடின் அவர் (ஸ்னோவ்டன்) தமது பயணத் திட்டத்தில் ரஷ்யாவை எதற்காக சேர்த்துக்கொண்டார் என்று எமக்கு தெரியாது. அவர் மொஸ்கோவில் வந்து இறங்குவார் என்ற தகவலும் எமக்கு கிடைக்கவில்லை. திடீரென அவராகவே இங்கே வந்து இறங்கியுள்ளார் என்று கூறியிருந்தார்.

அமெரிக்க உளவுத்துறை இரகசியங்களை வெளியிட்டவர் எட்வார்ட் ஸ்னோடன் தான் என்ற விடயமும், அவர் அப்போது கொங்கொங்கில் தங்கியுள்ளார் என்ற விடயமும் கார்டியன் பத்திரிகையால் வெளியிடப்பட்ட நேரத்தில், அவரை எப்படியாவது மடக்க அமெரிக்க உளவுத்துறை முயற்சி செய்தது என்பது பெரிய இரகசியம் கிடையாது.

அந்த நேரத்தில் அவருக்கு சீன உளவுத்துறையுடன், மற்றொரு சக்தி வாய்ந்த உளவுத்துறையும் பாதுகாப்பு கொடுத்தது எனவும், அதனால்தான் அமெரிக்க உளவுத்துறையால் அவரை நெருங்க முடிந்திருக்கவில்லை.

தற்போது,சக்திவாய்ந்த உளவுத் துறை எதுவென்பது, ரஷ்ய பத்திரிகை செய்தியில் இருந்து உறுதியாகவுள்ளது. இந்தச் செய்தியை ரஷ்ய அரசு இதுவரை மறுக்கவில்லை.

அதன்பின், அமெரிக்காவின் எதிர்ப்பையும் மீறி, ஸ்னோவ்டனுக்கு 1 ஆண்டு தற்காலிக அரசியல் அடைக்கலம் கொடுத்தது ரஷ்யா. ரஷ்ய் குடிவரவு சட்டத்தில் அனுமதிக்கப்பட்டுள்ள விதத்திலேயே அடைக்கலம் கொடுக்கப்பட்டது எனவும் கூறினார்கள் ரஷ்யர்கள்.

இப்போது, ரஷ்யாவில் தற்காலிக அரசியல் அடைக்கலம் வழங்கப்பட்டுள்ள ஸ்னோவ்டன், ரஷ்யாவுக்குள் எங்கே தங்கியுள்ளார் என்ற விடயமும், பரம இரகசியமாகவே வைக்கப்பட்டுள்ளது.

ரஷ்யா நன்றாகத்தான் விளையாடுகிறது, அமெரிக்காவுக்கு எதிரான இந்த விளையாட்டை!

**ஸ்னோவ்டனின் அடுத்த ரகசியம்**

எட்வார்ட்ஸ் ஸ்னோவ்டன் வெளியிட்ட அமெரிக்க உளவுத்துறை இரகசியங்களில் அடுத்த இரகசியம் வெளியாகியுள்ளது. அமெரிக்க உளவுத்துறை , கட்டாரை சேர்ந்த அல் ஜசீரா டி.வி.யின் இமெயில்களையும், ரஷ்யாவின் ஏரோஃபுளோட் ஏர்லைன்ஸ் புங்கிங் சிஸ்டத்தையும் உளவு பார்த்த விபரங்கள்தான், அந்த இரகசியம்.

ஜேர்மன் பத்திரிகையான Der Spiegel இந்த தகவலை வெளியிட்டுள்ளது. எட்வார்ட் ஸ்னோவ்டன் வெளியிட்ட இரகசிய ஆவணங்களில் ஒன்றின் பிரதி தமக்கு கிடைத்திருப்பதாக தெரிவித்துள்ளது இந்த ஜேர்மன் பத்திரிகை.

ஸ்னோவ்டன் வெளியிட்ட ரகசிய ஆவணங்களை வைத்திருப்பது, தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் என்று பிரிட்டிஷ் பத்திரிகையான கார்டியனிடம் கூறிய பிரிட்டிஷ் அரசு, அந்த ஆவணங்களை அழித்துவிடச் சொன்னது.



அதன்பின், இரகசிய ஆவணத்தின் ஒரு பிரதி அமெரிக்காவின் நியூயோர்க் டைம்ஸ் பத்திரிகையிடம் உள்ளதாக தெரிய வந்தது. அதையடுத்து, அந்த ஆவணத்தை அழிக்கும்படி நியூயோர்க் டைம்ஸுக்கு நோட்டிஸ் கொடுத்தது, வாஷிங்டனில் உள்ள பிரிட்டிஷ் தூதரகம்.

இதே ஆவணத்தின் வேறு ஒரு பிரதி ஜேர்மன் பத்திரிகை Der spiegel, என்னிடமும், இருக்கிறதே ஒரு பிரதி என்று கையை உயர்த்தியுள்ளது.

அமெரிக்க உளவுத்துறை NSA வேறு பல நிறுவனங்களையும் உளவு பார்த்தபோதிலும், இந்த இரு நிறுவனங்களும் உளவுத் தகவல்கள் பெறக்கூடிய உயர் சோர்ஸுகள் என்கிறது ஜேர்மன் பத்திரிகை. அதன் அர்த்தம், இந்த இரு நிறுவனங்களின் கம்பியூட்டர் சிஸ்டங்களிலும், அமெரிக்க உளவுத்துறைக்கு உபயோகமான பல தகவல்கள் கிடைக்க வாய்ப்புள்ளது என்பதே.

ஸ்னோவ்டன் வெளியிட்ட இரகசிய ஆவணத்தில் உள்ள ஒரு விடயம்: மார்ச் 2006-ம் ஆண்டு (அப்போது ஜோர்ஜ் புஷ் அமெரிக்க ஜனாதிபதியாக இருந்தார்) அமெரிக்க உளவுத்துறையின் நெட்வோர்க் ஆய்வு மையம் அல் ஜசீரா டி.வி.யின் நிறுவனத்தின் இமெயில்களுக்குள் ஊடுருவியது. அல் ஜசீரா டி.வி.யின் ஸ்டார் செய்தியாளர்கள் சிலரது இமெயில்களிலிருந்தது, அதிரகசியமான சில தொடர்புகள் பற்றிய விபரங்களை தெரிந்து கொண்டது அமெரிக்க உளவுத்துறை.

அல் ஜசீரா டி.வி நிறுவன செய்தியாளர்கள் சிலருக்கு, அதி ரசியமான சில தொடர்புகள் யாருடன் இருந்திருக்க முடியும்?

செப்டெம்பர் 11 தாக்குதலின் பின் அல்-கய்தா தலைவர் பின்லேடன் பிரத்தியேகமாக வெளியிட்ட சில வீடியோக்கள், அல் ஜசீரா டி.வி.க்கே கிடைத்தன. அப்போது பின்லேடனின் பேட்டி அடங்கிய வீடியோ கசட்டை யாரோ ஒரு நபர் தமது அலுவலகத்தில் கொடுத்துவிட்டு சென்றார் என்று தெரிவித்திருந்தது.

அது கப்சா என்பது உளவுத்துறைகளுக்கு தெரியும்.

பின்லேடனுக்கும், அல் ஜசீராவுக்கும் இடையே ஒரு “லிங்க்” இல்லாமல், இந்த கேசட் அல் ஜசீராவுக்கு கிடைத்திருக்க சந்தர்ப்பமே இல்லை. அந்த லிங்க் யார் என்பதை அறிய அமெரிக்க உளவுத்துறைகள் மிக ஆர்வமாக இருந்திருப்பார்கள் என்று சொல்லவும் வேண்டியதில்லை அல்லவா?

யார் அந்த லிங்க் என்ற கேள்விக்கான பதில்தான், அல ஜசீரா டி.வி. நிறுவன செய்தியாளர்கள் சிலரது இமெயில்களை உளவு பார்த்ததில் பெறப்பட்ட, “அதி ரகசியமான சில தொடர்புகள்” பற்றிய விபரங்கள்! (நூற்றுக்கு 99 சதவீதம், அந்த லிங்க் நபர் அமெரிக்க உளவுத்துறையால் உடனே தூக்கப்பட்டு இருப்பார்! இப்போ எங்கே இருக்கிறாரோ... உயிருடன் இருக்கிறாரோ...)

அதன்பின், பின்லேடன் நேரடியாகவே அல் ஜசிரா டி.விக்கு பேட்டியளித்தார். அந்தப்போட்டியில் அல்-கய்தாவின் அப்போதைய துணைத்தலைவர் அய்மன் அல் ஜவாகிரியும் கூடவே இருந்தார். (பின்லேடன் மறைவுக்குப்பின், இந்த அய்மன் அல் ஜவாகிரிதான் தற்போது அல் கய்தாவின் தலைவர்.)

பின்லேடன், மற்றும் அல் ஜவாகிரியுடன், அல் ஜசீரா தொடர்பு கொள்ள வேண்டுமென்றால், அமெரிக்க பில்லியன் டாலர் கணக்கில் செலவுபண்ணி வலைவீசி தேடிவந்த பின்லேடனின் மறைவிடத்துக்கு அல்ஜசீரா செய்தியாளர் மற்றும் கேமராமான் செல்ல முடியும் என்றால், எப்படியான அதிரகசியமான தொடர்புகள் இருந்திருக்க வேண்டும்?

அல் ஜசீரா டி.வி. முக்கியஸ்தர்களின் இமெல்களை உளவுபார்த்தால், என்ன இரகசியம் கிட்டும் என்று புரிகிறதா? ரஷ்ய விமான சேவை ஏரோஃ புளோட்டின் புங்கிங் சிஸ்டத்தையும் உளவு பார்த்த காரணமும் கிட்டத்தட்ட அதுதான். அமெரிக்க உளவுத்துறைகளால் தேடப்பட்ட நபர்கள் பலர் ஏரோஃ புளோட் விமானங்களிலேயே பயணம் செய்தது தெரிய வந்திருந்தது.

அவ்வளவு ஏன், அமெரிக்க உளவுத்துறை ஏரோஃபுளோட்டின் புங்கிங் சிஸ்டத்தை உளவு பார்க்கிறது என்ற ரகசியத்தை லீக் செய்த எட்வார்ட் ஸனோவ்டன் கூட, ஹாங்காங்கில் இருந்து மாஸ்கோவுக்கு பயணம் செய்தது, ஏரோஃபுளோட் விமானத்தில்தான்.

ஏரோ ஃபுளோட் விமான நிறுவன புக்கிங் சிஸ்டத்தை அவர்கள் எப்படி உளவு பார்க்கிறார்கள் என்பதை தெரிந்திருந்த ஸ்நோவ்டன், அதில் தனது பெயர் சிக்காத வண்ணம் பார்த்துக்கொண்டு பயணம் செய்திருக்கக்கூடும்.

எட்வார்ட்ஸ் ஸ்னோவ்டனால் கடத்தி வரப்பட்ட ஆவணங்களில், இன்னமும் எத்தனை இரகசியங்கள் உள்ளனவோ - அவையெல்லாம் தற்போது யார் யாருடைய கைகளில் உள்ளனவோ...அடுத்த ரகசியம் எப்போது வெளியிடப்பட போகிறதோ!

-இணையம்-



# விதிமுறைகளை மீறும் மருந்தகங்களுக்கு புதிய முறையிலான ஒழுக்க விதி அறிமுகம்

(கொழும்பு)

**சுகரதார அமைச்சு வழங்கியுள்ள ஒழுங்கு விதிகளை தனியார் மருந்தகங்கள் மீறி வருவதாகவும் அவ்வாறு மீறி நடக்கும் மருந்தகங்கள் பத்திரிகைகளினூடாக மக்களிடம் மன்னிப்புகோரும் விளம்பரமொன்றை வெளியிட வேண்டும் என்ற புதிய ஒழுங்கு விதியொன்றை அறிமுகப்படுத்தவுள்ளதாகவும் வாசனைத் திரவியங்கள் மற்றும் ஔடத அதிகாரசபை தெரிவித்துள்ளது. தனியார் மருந்தகங்கள் தொடர்பில் சுகாதார அமைச்சு பல ஒழுங்கு விதிகளை முன்வைத்துள்ளது.**

இதனை மீறும் மருந்தகங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படுவதோடு தண்டப்பணமும் அறிவிடப்படுகிறது. இதற்கு மேலதிகமாகவே புதிதாக பத்திரிகைகளில் விளம்பரம் வெளியிட்டு மன்னிப்புக்கோரும் சரத்தொன்றை அறிமுகப்படுத்த இருப்பதாக வாசனைத்திரவியங்கள் மற்றும் ஔடத அதிகார சபைத் தலைவர் டாக்டர் ஹேமந்த பெனரகம கூறியுள்ளார்.

நுண்ணுயிர் தாக்கங்களைக் கட்டுப்படுத்துவதற்குப் பயன்படுத்தப்படும் மாத்திரைகள் குறித்து மருத்துவர்களை அறிவூட்டும் நிகழ்வு கொழும்பு காசல் பெண்கள் வைத்தியசாலையில் நடைபெற்றது.

இங்கு கருத்துத் தெரிவித்த அவர், தனியார் மருந்தகங்களுக்கு ஒழுங்குவிதிகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. அவற்றை அவை கட்டாயம் பின்பற்றவேண்டும்.

மருந்தகத்தை கட்டாயம் பதிவு செய்தல், பயிற்றப்பட்ட மருந்தாளர்களை சேவையில் ஈடுபடுத்தல், மருத்துவர்கள் சிபார்சு செய்யாத மருந்துகளை வழங்காதிருத்தல், குளிரூட்டுதல், அரசாங்கத்தில் பதியப்பட்ட மருந்துகளை மட்டும் விற்றல், காலாவதியான மருந்துகளை விற்காதிருத்தல் உட்பட பல ஒழுங்கு விதிகள் வழங்கப்பட்டுள்ளன.

இதனை மீறும் மருந்தகங்கள் தமது செலவில் மக்களிடம் மன்னிப்புக்கோரும் விளம்பரங்களைப் பிரசுரிக்க வேண்டும் எனத் தெரிவித்தார். (அ-7)

## ஓவியக் கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

யாழ். சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியின் தூரிகை நர்த்தன கண்காட்சி இன்று வெள்ளிக்கிழமையும் நாளை சனிக்கிழமையும் காலை 9.30 முதல் மாலை 4 மணி வரை பாடசாலையில் அதிபர் கு.விமலன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக கோப்பாய் அரசினர் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை பதிலதிபர் வீ.கருணைலிங்கம், சிறப்பு விருந்தினராக வலிகாம கல்வி வலய சித்திர ஆசிரிய ஆலோசகர் திருமதி மதியழகி இளமுருகன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (அ-7)

## பிரி.வெளியுறவு அமைச்சரை சந்தித்தார் அமைச்சர் பீரிஸ்

இலங்கையில் எதிர்வரும் நவம்பர் மாதம் நடைபெறவுள்ள பொதுநலவாய நாடுகளின் தலைவர்கள் கலந்து கொள்ளும் உச்சி மாநாடு தொடர்பாக இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ், பிரித்தானிய வெளிவிவகார அமைச்சர் அலிஸ்டர் பேர்ட் ஆகியோர் கலந்துரையாடியுள்ளனர்.

அமெரிக்காவின் நியூயோர்க்கிலேயே குறித்த சந்திப்பு இடம் பெற்றுள்ளது.

அமைச்சர் பீரிஸ் மற்றும் பேர்ட் ஆகியோர் நியூயோர்க்கில் நடைபெறும் ஐக்கிய நாடுகள் பொதுச்சபைக் கூட்டத்தில் கலந்து கொண்ட போதே அவர்கள் இவ்வாறு கலந்துரையாடியுள்ளனர்.

இலங்கையில் நடைபெறவுள்ள பொதுநலவாய நாடுகளின் மாநாடு தொடர்பில் ஏற்பட்டுள்ள விமர்சனங்கள் குறித்து தாம் கலந்துரையாடியதாக பிரித்தானிய வெளிவிவகார அமைச்சர் கூறியுள்ளார். (அ-2)

## அரசுடன் இணைந்ததால் தேர்தலில் தோற்றோம்

### அமைச்சர் விமல் கவலை

நியாயமான தேர்தல்கள் மூலமாகவே ஜே.வி.பி அரசியலுக்கு வந்தது என அமைச்சர் விமல் வீரவன்ஸ தெரிவித்துள்ளார்.

கொழும்பில் அண்மையில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பொன்றில் அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

ஜே.வி.பி இம்முறை தேர்தலில் வீழ்ச்சியடைந்துள்ளது. தமது தோல்விக்கு மற்றவரை குற்றம் சுமத்துவதில் பயனில்லை.

அதேவேளை அரசாங்கத்துடன் இணைந்து போட்டியிட்டதால் இம்முறை தேர்தலில் தேசிய சுதந்திர முன்னணி தோல்வியடைந்ததுடன் ஒரு ஆசனத்தைக் கூட பெறமுடியவில்லை.

கடந்த முறை தனித்து போட்டியிட்ட தேசிய சுதந்திர முன்னணி வெற்றிபெற்றது. விருப்பு வாக்கு முறையிலான தேர்தலில் இவ்வாறான நிலைமையை எதிர்நோக்க நேரிடும்.

ஜே.வி.பி மட்டுமல்லாது ஐக்கிய தேசியக் கட்சியும் தற்போது அரசியலில் தொழுநோயாளியாகியுள்ளனர் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-7)



வாழைச்சேனை பிரதேசத்தில் இருந்து ஆழ்கடலுக்கு மீன் பிடிக்கச் சென்ற படகொன்று ஆயிரத்து 500 கிலோ கிராம் எடையுடைய புலிச்சுறா இன மீன் ஒன்றை நேற்று முன்தினம் பிடித்துள்ளது. அண்ணளவாக 24 அடி நீளமும் 15 அடி சுற்றளவையும் கொண்டிருக்கும். இந்த மீன் ஏலத்தில் விடப்பட்டு 69 ஆயிரம் ரூபாவிற்கு விற்பனை செய்யப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

## சரத் மீதான கொலை முயற்சி; புலி உறுப்பினர்கள் சாட்சியம்?

(கொழும்பு)

முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா கொலை முயற்சி வழக்கில் முன்னாள் புலி உறுப்பினர்கள் சாட்சியளிக்கவுள்ளனர்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் முன்னாள் சிரேஷ்ட உறுப்பினர்கள் மூன்று பேருக்கு எதிராக வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

வழக்கு விசாரணைகளில் குறித்த புலி உறுப்பினர்கள் சாட்சியமளிக்கவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இந்த வழக்கு விசாரணைகள் எதிர்வரும் நவம்பர் மாதம் 28 ஆம் திகதி நடைபெற வுள்ளது.

சந்தேக நபர்களுக்கு எதிராக 230 குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன.

பெண் தற்கொலைக் குண்டுதாரி ஒருவரைப் பயன்படுத்தி சரத் பொன்சேகாவை படுகொலை செய்ய முயற்சிக்கப்பட்டது. கொழும்பு உயர் நீதிமன்றில் இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. (அ-2)

## வடக்கு மாகாண மக்கள் தமது ஆரம்ப வாழ்வை மறந்து விட்டனர்

### அமைச்சர் பசில் உருக்கம்



(கொழும்பு)

அண்மையில் இடம்பெற்ற தேர்தலின் ஊடாக வடமாகாண மக்கள் தமது ஆரம்ப வாழ்க்கையை மறந்து செயற்பட்டுள்ளதாக பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

மினுவாங்கொடை பகுதியில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய அவர், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வடக்கின் வசந்தத்தை பொதுமக்களின் நன்மையைக் கருத்தில் கொண்டு செயற்படுத்தியதாக தெரிவித்தார். மக்களுக்காகவே வடக்கின் வசந்தம் அரசாங்கத்திற்கோ ஆளும் கூட்டமைப்பு கட்சிக்கோ வசந்தத்தை ஏற்படுத்துவதற்கோ அல்லது வாக்குகளை பெறுவதற்கோ அல்ல.

ஆனால் சிலர் கேட்கிறார்கள் வடக்கின் வசந்தத்தை நடைமுறைப்படுத்தியும் ஏன் மக்கள் வாக்களிக்கவில்லை? என்று அது வடக்கு மக்களின் தீர்மானமாகும் அவர்களுக்கு ஆரம்பம் மறந்து போயுள்ளது.

கடந்த 5 வருடங்களுக்கு முன்னர் தாம் இருந்த நிலைமையை அவர்கள் மறந்துவிட்டார்களென்றால் அது ஜனாதிபதியின் தவறு அல்லவே. அடிப்படைவாதம், உணர்ச்சிபூர்வமான கருத்துக்கள், தனியாட்சி என்பனவற்றை மீள ஏற்படுத்துவதாக தெரிவிக்கப்பட்ட கருத்துக்களை செவிமடுத்த பின்னர் மக்கள் இந்தத் தீர்மானத்தை எடுத்திருக்கலாம் என அவர் மேலும் தெரிவித்தார். (அ-7)

## பாக்கியசோதி சரவணமுத்துவை அழைத்தது வெள்ளை மாளிகை

ஐக்கிய நாடுகள் பொதுச் சபைக் கூட்டத்தில் கலந்து கொண்டுள்ள அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா நாடுகளின் தலைவர்கள் மற்றும் உலக முழுவதிலுமுள்ள சிவில் அமைப்புக்களின் தலைவர்களை சந்திக்கும் வட்ட மேசை கூட்டத்திலேயே இவர் கலந்து கொண்டார்.

இதன்போது சிவில் சமூக அமைப்புக்களுக்கு எதிரான தடைகள் குறித்து இவர் ஜனாதிபதி ஒபாமா உள்ளிட்டவர்களுடன் விவாதித்துள்ளார்.

இதன் பிரகாரம் சிவில் சமூக அமைப்புகள் எதிர்நோக்கும் தடைகள், அந்த அமைப்புக்களை பாதுகாக்க எடுக்க வேண்டிய நடவடிக்கைகள், அவற்றுக்கு ஆதரவு வழங்குதல் போன்றவை பற்றி இதன்போது விவாதிக்கப்பட்டுள்ளது.

கடந்த 23 ஆம் திகதி நடைபெற்ற இந்த விவாதத்தில் கலந்து கொள்ள இலங்கையின் மாற்றுக் கொள்கைக்கான நிலையத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கலாநிதி பாக்கியசோதி சரவணமுத்துவுக்கு வெள்ளை மாளிகை அழைப்பு விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

## மக்களின் விருப்பு வெறுப்புகளை அறிந்து அரசியல் நடத்துங்கள்

### சஜித் எம்.பி. தெரிவிப்பு

மக்களின் ஆணைக்கு புறம்பாக அரசியல் நடத்த முடியாது என ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

கட்டுவான் பிரதேசத்தில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் பங்கேற்ற போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்,

மக்களின் ஆதரவை நேர்மையுடன் ஏற்றுக் கொள்ளும் அதேவேளை காலாவதியான அரசியல்வாதிகள் தமது பொறுப்புக்களைத் துறக்க வேண்டும். மாறாக மக்களின் ஆணைக்குப் புறம்பான வகையில் அரசியல் நடத்துதல் பொருத்தமற்ற செயலாகும்.

நாகரிகமடையாத காலம் முதல் மனிதனின் பலம் ஒற்றுமையாக செயற்படுவதாகும். தனித்துநின்று எந்தவொரு சாதனையையும் படைக்க முடியாது.

மக்களின் விருப்பு வெறுப்புகளை அறிந்து கொண்டு அதன் அடிப்படையிலேயே அரசியல் நடத்த வேண்டும் என தெரிவித்துள்ளார். (அ-2)

# நவநீதம்பிள்ளையின் அறிக்கை ஏற்றுக்கொள்ளக் கூடியதல்ல

## ஐ.நா.வதிவிட பிரதிநிதி ரவிநாத் ஆரிய சிங்க தெரிவிப்பு

(கொழும்பு)

**ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் ஆணையாளர் நவநீதம்பிள்ளையின் வாய்மொழி மூல அறிக்கை ஏற்றுக் கொள்ளக்கூடியதல்ல என ஐ.நா. மனித உரிமை பேரவைக்கான இலங்கை வதிவிட பிரதிநிதி ரவிநாத் ஆரியசிங்க தெரிவித்தார்.**

ஐக்கிய நாடுகள் மனிதவுரிமைப் பேரவையின் அமர்வுகள் தற்போது சுவிட்சர்லாந்தின் ஜெனீவாவில் நடைபெற்று வருகின்றன. இவ் அமர்வுகளில் கலந்துகொண்ட நவநீதம்பிள்ளை அண்மையில் இலங்கைக்கு மேற்கொண்ட விஜயத்தின்போது தான் கண்டவற்றை வாய்மூல அறிக்கையாகச் சமர்ப்பித்தார்.

அதில் போர்க்குற்றங்களுக்கு இலங்கை அரசாங்கம் நம்பகரமான விசாரணையை ஏற்படுத்தி குற்றவாளிகளுக்குரிய தண்டனையை எதிர்வரும் 2014 ஆம் ஆண்டு மார்ச் மாதத் திற்குள் வழங்கவேண்டுமென கேட்டுக் கொண்டதுடன் தவறின் ஐ.நா. மனிதவுரிமைப் பேரவை விசாரணைகளை நடத்த வேண்டி வரும் எனவும் குறிப்பிட்டிருந்தார்.

அத்துடன் விடுதலைகள் தொடர்புடைய போர்க்குற்றங்களை முறையாக விசாரிக்கவும் வலியுறுத்தினார். மேலும் திருகோணமலையில் 5 மாணவர்கள் படுகொலை செய்யப்பட்டமை, ஏ சி எப் தொண்டு நிறுவன பணியாளர்கள் 17 பேர் கொல்லப்பட்டமை போன்ற விசாரணைகளின் இழுபறி நிலையையும் சுட்டிக்காட்டியதுடன் அவ்வாறான விசாரணைகளில் முன்னேற்றம் இல்லை எனவும் கூறியுள்ளார்.

அத்துடன் தனது இலங்கைக்கான விஜயத்தின் போது தன்னைச் சந்தித்த பொது மக்கள் விசாரணைக்குட்படுத்தப்பட்டமை தொடர்பிலும் கூறியுள்ளார்.

வடக்குக் கிழக்கில் போர் முடிவுற்ற பின்னரும் கடுமையான இராணுவ பிரசன்னம் இருப்பதையும் பெண்கள், சிறுமிகள் மீதான பாலியல் பலாத்காரங்கள் தொடர்பிலும் தனது வாய்வழி அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

மேலும் காணாமற்போனோரை விசாரிக்க அமைக்கப்பட்ட ஆணைக்குழுவால் பயன் எதுவும் ஏற்படவில்லை என்பன உள்ளிட்ட பல்வேறு குற்றச்சாட்டுக்களை முன்வைத்திருந்தார்.

இலங்கையில் தான் கண்டதையும் கேட்டதையும் ஐ.நா.மனிதவுரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளை தெரிவித்த கருத்துக்களையே இலங்கை அரசாங்கம் மறுத்துள்ளது. நவநீதம்பிள்ளையின் இக்கருத்து தொடர்பில் இலங்கை அரசாங்கம் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கைக்கு எதிராக விசாரணைகளை நடத்துமாறு கோர நவநீதம்பிள்ளைக்கு அதிகாரங்கள் கிடையாது. இலங்கை விவகாரம் குறித்து அவசர அவசரமாக கவனம் செலுத்த வேண்டியதில்லை.

இலங்கைக்கு ஊக்கமளிக்க வேண்டுமே தவிர அழுத்தங்களைப் பிரயோகிக்கக் கூடாது.

இலங்கையில் மனிதவுரிமை நிலைமைகள் மோசமாகக் காணப்படுவதாக நவநீதம்பிள்ளை வெளியிட்ட கருத்து ஏற்றுக் கொள்ளக் கூடியதல்ல எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-2)

# தெறிப்பு படிமம் கவிதை தொகுப்பு வெளியீடு

(கொழும்பு)

பாராளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ரஜீவ விஜேசிங்கவினால் தொகுக்கப்பட்டு இந்திய தேசிய புத்தக நிதியத்தால் வெளியிடப்படும் தெறிப்புப் படிமம் எனும் கவிதைத் தொகுப்பு யாழ்ப்பாண் இந்தியத் துணைத்தூதரகத்தினால் வெளியீடு செய்து வைக்கப்படவுள்ளது.

இந்நிகழ்வு இல.14 , மருதடி ஒழுங்கை, நல்லூரிலுள்ள இந்தியத் துணைத்தூதரகத்தில் எதிர்வரும் 30 ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறும்.

இலங்கையின் மொழிகளில் எழுத்தாளர்களால் எடுத்தாளப்பட்ட பல்வேறு பொதுவான கருப்பொருட்களில் அமைந்த நிரவுரு, அன்பு, அரசியல் மற்றும் தத்துவம் பற்றிய கவிதைகளை இத்தொகுதி கொண்டுள்ளது.

இப்புத்தகம் கிட்டத்தட்ட 100 இலங்கைக் கவிஞர்களையும் லக்ஷ்மி டி சில்வா, ரஞ்சினி ஒபேசேகரா, லக்ஷ்மி ஹேறாம்ஸ்ட்ரோம் மற்றும் ஏ.ஜே. கனகரட்ணா ஆகியோரால் செய்யப்பட்ட கவிதைகளின் மொழிபெயர்ப்புக்களும் உள்ளடக்கப்பட்டுள்ளன.

புத்தக வெளியீட்டைத் தொடர்ந்து பா.அகிலன், அ.யேசுராசா, கருணாகரன், சோ.பத்மநாதன், சித்தாந்தன், விவேக், ஐ.சாந்தன் ஆகியோரின் தமிழ்க் கவிதை வாசிப்பும் ஆரியவன்ச ரணவீரசிங்கவின் சிங்களக் கவிதை வாசிப்பும் இடம்பெறும்.

இந்திய தேசிய புத்தக நிதியமானது தொடர்புகளை ஏற்படுத்தல் இலங்கைச் சிறுகதைகளின் தொகுதி எனும் ரஜீவ விஜே சிங்கவினால் மும்மொழிகளிலிருந்தும் தொகுக்கப்பட்ட புத்தகத்தை முன்னர் வெளியிட்டிருந்தது. இப்புத்தகம் மராத்தி, தமிழ் ஆகிய மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டிருந்தது. (அ-4)

# மாலக்க சில்வாவுக்கு சட்டவிரோத பாதுகாப்பு வழங்கப்பட்டது

## குறித்து விசாரணைகள் ஆரம்பம்

மாலக்க சில்வாவிற்கு சட்டவிரோதமாக பாதுகாப்பு வழங்கப்பட்டமை தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அமைச்சர் மேர்வின் சில்வாவின் புதல்வர் மாலக்க சில்வாவுக்கு அமைச்சரவை பாதுகாப்பு பிரிவு மற்றும் பேலியகொட பொலிஸ் நிலையத்தின் இரண்டு கான்ஸ்டபில்கள் பாதுகாப்புக்காக சட்டவிரோதமாக வழங்கப்பட்டுள்ளமை தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அமைச்சர் மேர்வின் சில்வா தனக்கு வழங்கப்பட்டுள்ள பாதுகாப்பு அதிகாரிகளை, அவரது மகனுக்கு வழங்கியுள்ளதுடன், பேலியகொட பொலிஸ் நிலையத்தில் மேலும் இருவர் மேலதிகமாக நியமிக்கப்பட்டுமுள்ளனர்.

மாலக்க சில்வாவுக்கு பாதுகாப்பு வழங்கி சென்ற வாகனம் ஒன்று கடந்த 23 ஆம் திகதி தங்காலை வாடிகல வெலியார பிரதேசத்தில் விபத்துக்குள்ளானதை அடுத்து இந்த விடயம் தெரியவந்துள்ளது.

அமைச்சர் ஒருவரின் பாதுகாப்புக்கு வழங்கப்படும் அமைச்சரவையின் பாதுகாப்பு பிரிவின் அதிகாரிகளை அவரது குடும்பத்தினரின் பாதுகாப்புக்கு பயன்படுத்த முடியாது என அந்த பாதுகாப்பு பிரிவின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (அ-2)

# சுற்றுலாத்துறைக் கல்வியும் அதன் முக்கியத்துவமும்

உலகளாவிய ரீதியில் செப்டெம்பர் மாதம் 27 ஆம் திகதி உலக சுற்றுலாத்துறை தினம் அனைவராலும் கொண்டாடப்படுகின்றது. இந்த வருடம் உலக சுற்றுலாத்துறை ஒன்றியத்தினால் (WTO) சுற்றுலா மற்றும் நமது பொதுவான எதிர்காலத்தை பாதுகாப்பதற்கு நீர் எனும் தொனிப்பொருள் முன்வைக்கப்பட்டுள்ளது. இந்த தொனிப்பொருள் உலகளாவிய ரீதியில் சுற்றுலாத் துறையின் முக்கியத்துவத்தை பறைசாற்றி நிற்கின்றது.

உழைத்துக்களைத்த மக்களுக்கு உடல், உளரீதியான ஓய்வு தேவை. ஓய்வை விரும்பும் மக்கள் தத்தமது தகுதிக்கேற்ற வகையில் சுற்றுலாவை மேற்கொள்வர். ஆரம்ப காலத்தில் சுற்றுலா வெறும் பொழுதுபோக்கு அம்சங்களையே தன்னகத்து கொண்டிருந்தது.

உழைத்துக் களைத்த மக்கள் ஓய்வை ஒரு பொழுதுபோக்கு அம்சமாகவும் பயனுள்ளதாகவும் மாற்றி அமைக்க முற்பட்ட போது தான் சுற்றுலாத்துறையானது ஒரு வரையறைக்குள் கொண்டு வரப்பட்டது.

பின்னர் அது படிப்படியாக இலாபம் ஈட்டுவதை நேர்க்கமாக கொண்டு தனிப்பட்ட ஒரு துறையாக வளர்ந்து வருகின்றது. இந்த சுற்றுலாத்துறையை விருத்தி செய்யவும் அதன் முக்கியத்துவத்தை ஏனையோருக்கு தெரியப்படுத்தவும் சுற்றுலாத்துறை கல்வி என்பது அறிமுகப்படுத் தப்பட்டது.

சுற்றுலாவை அதன் தன்மைகளை அடிப்படையாகக் கொண்டு பல்வேறு வகையாக வகைப்படுத்தியுள்ளனர். உள்ளூர்ச் சுற்றுலா, வெளிநாட்டுச்சுற்றுலா, கல்விச்சுற்றுலா, மத யாத்திரை, வர்த்தகச் சுற்றுலா என்பவை அவற்றுள் சில.

இலங்கைக்கு அந்நியச் செலாவணியை ஈட்டித்தரும் துறைகளில் சுற்றுலாத்துறை பெரும் பங்கு வகிக்கின்றது. அரசாங்கம் சுற்றுலாத்துறையை ஊக்குவிக்கும் முகமாக பல்வேறு வகையான திட்டங்களை அறிமுகப்படுத்தியுள்ளது.

2012 ஆம் ஆண்டு ஒரு மில்லியன் சுற்றுலாப்பயணிகள் நமது நாட்டுக்கு வருகை தந்துள்ளனர். 2016 ஆம் ஆண்டு 2.5 மில்லியன் சுற்றுலாப் பயணிகள் நம் நாட்டுக்கு வருகை தருவரென எதிர்பார்க்கப்படுகின்றது.

இத்துறை மூலம் 2.4 பில்லியன் அமெரிக்க டொலர் வருமானம் எதிர்பார்க்கப்படுகின்றது. இந்தத் துறையின் மூலம் இலங்கையில் பல பிரதேசங்கள் அபிவிருத்தி செய்யப்படுவதுடன் மக்களின் வாழ்க்கைத்தரமும் உயர்த்தப்பட்டுள்ளது.

யுனெஸ்கோ இலங்கையின் சுற்றுலா பிரதேசங்களை அடையாளம் கண்டு அவற்றுள் எட்டு பிரதேசங்கள்ள சுற்றுலா மையங்களாக பிரகடனப்படுத்தியுள்ளது. அனுராதபுரம், பொலநறுவை, சிகிரியா, தம்புள்ள குகைக்கோயில், கண்டிதலதாமாளிகை, காலி, மத்திய மலைநாடு, சிங்கராஜாவனம் என்பன யுனெஸ்கோ நிறுவனம் பிரகடனப்படுத்திய சுற்றுலா மையங்களாகும்.

2012 ஆம் ஆண்டில் தெகிவளை, யாழ்ப்பாணம், பதுளை, லபுதுவ ஆகிய உயர்தொழில் நுட்ப கல்லூரியில் உயர் தேசிய டிப்ளோமா இன் சுற்றுலாத்துறையும் விருந்தோம்பல் முகாமைத்துவமும் என்ற கற்கை நெறி அறிமுகம் செய்யப்பட்டது.

இலங்கை மத்திய வங்கியின் அறிக்கைப் படி சுற்றுலாத்துறையில் 2011 ஆம் ஆண்டு 57,786 நேரடி தொழில் வாய்ப்புக்களையும் மறைமுகமாக 80,899 வாய்ப்புக்களையும் வழங்கியுள்ளது.

யாழ்ப்பாண உயர்தொழில் நுட்ப கல்லூரியில் அறிமுகஞ் செய்யப்பட்ட எமது கற்கை நெறி சிறப்பான வடிமைப்போடு வெற்றிகரமாக இடம்பெற்றுக் கொண்டிருச்கின்றது. இக்கற்கை நெறி 3 வருடங்களைக் கொண்டதாகும். இக்கற்கை நெறியைப் பூர்த்தி செய்கின்ற மாணவர்கள் உள்நாட்டு, வெளிநாட்டு வேலைவாய்ப்பினை இலகுவாக பெற்று தமது எதிர்காலத்தை பிரகாசிக்கச் செய்ய கைகொடுக்கும் என்பதில் ஐயமில்லை.

சுற்றுலாத்துறைக் கல்வி இயற்கையான சுற்றுலாத்தளங்களை பாதுகாத்தல், ஏற்கனவே அழிவுற்ற நிலையில் இருக்கும் சுற்றுலாத்தளங்களை புனரமைப்பு செய்தல், செயற்கையான சுற்றுலாத்தளங்களை உருவாக்கல், இதுவரை அடையாளம் காணப்படாத சுற்றுலாத்தளங்களை வெளியுலகிற்கு அடையாளம் காட்டுதல், கலாசார விழுமியங்களை பாதுகாத்தல், சர்வதேசங்களுக்கு தெரியப்படுத்தல், தொல்பொருள் சின்னங்களை பாதுகாத்தலும் அதை மற்றவர்களுக்கு விளம்பரப்படுத்தலும் மக்களிடையில் சுற்றுலாத்துறையின் முக்கியத்துவத்தை வெளிப்படுத்தல் போன்ற பல்வேறுபட்ட அம்சங்களைக் கொண்டுள்ளது.

மேலும் இக்கல்வியானது நமது நாட்டு வெளிநாட்டு வரலாறுகளையும் நமது நாட்டு வெளிநாட்டு கலாசார விழுமியங்களையும் அறிந்துகொள்ளக் கூடியதாகவும் இருப்பதோடு சர்வதேசங்களுடன் நாம் நல்ல உறவைப் பேணிக் கொள்ளவும் வழிவகுக்கும். இவ்வாறு பல்வேறுபட்ட அரிய விடயங்களைத் தன்னகத்தே கொண்டுள்ள சுற்றுலாத் துறையானது தற்போது வெற்றியின் இமயத்தை தொட்டுள்ளது என்பது ஐயம் திரிபற்ற முடிவாகும்.

(உயர் தேசிய சுற்றுலாத் துறை மற்றும் விருந்தோம்பல் முகாமைத்துவ டிப்ளோமா மாணவர்கள்)

# இலங்கைக்கு ஏற்பட்டுள்ள சர்வதேச வலி; கூட்டமைப்பு ஒத்தடம் கொடுக்கக் கூடாது

வடக்கு மாகாண சபைத்தேர்தல் என்பது இலங்கை அரசு முழுமனத்தோடு விரும்பி நடத்தப்பட்டதொன்றல்ல. சர்வதேச சமூகத்தின் கடுமையான அழுத்தத்திற்கு ஈடுகொடுக்கமுடியாமலேயே வடக்கில் தேர்தலை நடத்தவேண்டிய கட்டாயத்துக்கு அரசு தள்ளப்பட்டது.

இலங்கையில் எந்த நோக்கத்திற்காக மாகாண சபை முறைமை கொண்டுவரப்பட்டதோ! அந்த நோக்கத்தை நிறைவேற்றுவதில் அரசுக்கு இம்மியளவும் மனம் இருக்கவில்லை.

வடக்கு கிழக்கு மக்களின் பிரச்சினைக்குத் தீர்வாகக் கொண்டுவரப்பட்ட மாகாண சபை, வடக்கு மாகாணத்தைத் தவிர ஏனைய இடங்களில் இயங்கியது என்றால் இலங்கை அரசுகள் தமிழ்மக்கள் தொடர்பில் கொண்டுள்ள நிலைப்பாடு என்ன? என்பதைப் புரிந்துகொள்வதில் அதிக கடினம் இருக்கமுடியாது.

யுத்தம் முடிவுற்றதும் தமிழ்மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும் என்று கூறிய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ போர் முடிந்து மூன்று ஆண்டுகள் கடந்த நிலையிலும் தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு காண்பது என்ற விடயத்தை அறவே சிந்திக்கவில்லை. மாறாக இலங்கை பல்லின மக்கள் வாழும் நாடு. இங்கு இனப்பிரச்சினை கிடையாது என்று கூறிக் காலம் கடத்தப்பட்டது.

இருந்தும் 2009 ஆம் ஆண்டில் வன்னிப்போரில் நடந்த இன அழிப்புக்குற்றச்சாட்டுக்கள், அது தொடர்பிலான ஆதாரங்கள் என்பன இலங்கை அரசுக்கு நெருக்கடியாயின.

விடுதலைப்புலிகளைத் தோற்கடித்துவிட்டால் தென்பகுதி மக்கள் நிம்மதியாக வாழமுடியும் என்று நினைத்த அரசுக்கு சர்வதேசத்தின் அழுத்தம் பெருந்தலையிடியாயிற்று.

ஜெனீவாவில் இலங்கை அரசுக்கு எதிராக இரு தடவைகள் கொண்டுவரப்பட்டு நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் தொடர்பில் தீர்க்கமான பதிலை சர்வதேசத்தின் முன் வைக்க வேண்டிய கட்டாயம் இலங்கை அரசுக்கு உள்ளது.

## நவநீதம்பிள்ளையின் இலங்கை விஜயம்

காலத்திற்குக் காலம் தமிழ் மக்களை ஏமாற்றிய பழக்கதோசத்தில் சுணைக்கெட்டுப்போன இலங்கை அரசு, சர்வதேசத்தையும் ஏமாற்றலாம் என்று நினைத்தது.

சீனாவுடன் உறவை ஏற்படுத்துவதன் மூலம் இந்தியாவின் அழுத்தத்திற்கு முடிவு கட்டுவது, ஜப்பானை அணைத்துக் கொண்டு இலங்கைக்கு ஆதரவாகப் பிரசாரம் செய்வது, விலை போகக்கூடிய சில தூதுவர்களுக்கு நவரத்தினமாலை கொடுத்துச் சமாளிப்பது என்ற அணுகுமுறைகள் செல்லுபடியற்றதாகிப்போயின.

கூடவே, தென்பகுதியில் இருக்கக்கூடிய பேரினவாதிகள், பௌத்த மதவாதிகள் மூலமான எச்சரிக்கைகளும் சர்வதேசத்தை அதட்டும் வீரவசனங்களும் இடையிடையே வெளிப்படுத்தப்பட்டன.

இந்நிலையில்தான் ஐ.நா. மனிதவுரிமை ஆணையர் நவநீதம்பிள்ளை அவர்களின் இலங்கை விஜயம் அமைந்தது.

நவநீதம்பிள்ளை இலங்கைக்கு வருவதை-யாழ்ப்பாணம் மற்றும் வன்னிப் பிராந்தியங்களுக்குச் செல்வதை விரும்பாத இலங்கை அரசு, நேரடியாகத் தனது எதிர்ப்பைக் காட்டாமல், தான் மறைகரமாக நின்று கொண்டு பொதுபலசேனா, ஜாதிக ஹெல உறுமய போன்ற இனவாதிகளைத் தூண்டிவிட, அவர்கள் நவநீதம்பிள்ளையைத் தனிப்பட்ட முறையில் கடுமையாக விமர்சித்தனர்.



# இலங்கை அரசின் கழுத்தை நெரிக்கத் தயாராகிறது ஐ.நா



இதில் அமைச்சர் மேர்வின் சில்வா, நவநீதம்பிள்ளையை தான் திருமணம் செய்யவிரும்புவதாகக் கூறினார். மேர்வினின் இந்த வார்த்தைகள் இலங்கை அரசின் அழுக்குத்தனத்தை உலகம் முழுக்கக் காட்டிக்கொடுத்தது.

எந்தச் சலனமும் இல்லாமல் இலங்கைக்கு விஜயம் செய்த நவநீதம்பிள்ளை அம்மையார், இலங்கையின் களநிலைமையை நேரில் அவதானித்ததுடன் இலங்கையில் என்ன நடக்கின்றது என்பது பற்றித் தமக்குத் தெளிவாகத் தெரியும் என்றும் கூறினார்.

அதுமட்டுமல்லாமல் யாழ்ப்பாணம், வன்னி ஆகிய இடங்களுக்கும் விஜயம் செய்த ஐ.நா.மனிதவுரிமைகள் ஆணையர் இலங்கையில் இடம்பெற்ற- இடம்பெறும் மனிதவுரிமை மீறல்கள் தொடர்பில் கடுமையான கண்டனத்தைத் தெரிவித்தார்.

நவநீதம்பிள்ளையின் வருகைக்கு எதிர்ப்புத் தெரிவித்தவர்கள் அவரின் எச்சரிக்கையால் வாலைச் சுருட்டிக் கொண்டனர்.

## இலங்கைக்கு எச்சரிக்கை

ஐ.நா. கூட்டத் தொடரில் 25.09.2013 இல் உரையாற்றிய நவநீதம்பிள்ளை அவர்கள் போர்க்குற்ற விசாரணையை இலங்கை அரசு உடனடியாக மேற்கொள்ள வேண்டுமெனக் கூறியதுடன் மார்ச் 2014 இற்குள் போர்க்குற்ற விசாரணையை நடத்தாவிட்டால் சர்வதேச விசாரணைகள் நடத்தப்படும் என்று காலக்கெடு விதித்து இலங்கை அரசை எச்சரித்தார்.

அம்மையாரின் எச்சரிக்கை நிச்சயம் இலங்கை அரசுக்கு பேதியாக இருக்கும் என்பது மறுக்கமுடியாத உண்மை.

ஐ.நா.வின் எச்சரிக்கை - அதன் விளைவு என்பவற்றைத் தடுப்பதற்காக இலங்கை அரசு வடக்கு மாகாண சபைக்குத் தெரிவு செய்யப்பட்ட புதிய மாகாண அரசை நாடும். நாங்கள் இலங்கையர்கள், எங்களுடைய பிரச்சினைகளை நாங்களே தீர்த்துக்கொள்வோம் என்று தோளில் கைபோட்டு நட்புப் பாராட்டும். இதைத் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு நம்பினால் சர்வதேசத்தின் அழுத்தத்திற்கு தமிழர்களே! ஒத்தடம் கொடுத்ததாகக் கதை மாறிவிடும்.

சிங்கமும் மானும் ஒற்றுமையாக வாழலாம் என்ற படைப்பை பிரம்மன்-உருவாக்கும் போது, நாங்களும் நீங்களும் ஒற்றுமையாக வாழமுடியும் என்று கூறலாமே தவிர வன்னிப் போரில் நடந்த மகா கொடுமைத்தனத்திற்கு - கொன்றொழிப்புக்களுக்கு இலங்கை அரசிடம் சர்வதேசம் விளக்கம் கேட்பதை தமிழ் அரசியல் தலைமைகள் நேரடியாகவோ, மறைமுகமாகவோ தடுத்துவிடக்கூடாது.

வடக்கு மாகாணசபை வேறு. போர்க்குற்ற விசாரணை வேறு. ஆக, இலங்கை அரசுடன் பேசுதல் என்ற எந்த விடயத்திலும் சர்வதேசத்தின் மத்தியஸ்தமும் ஐ.நா சபையின் அனுசரணையும் இருக்க வேண்டும் என்பதை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஒருபோதும் மறந்துவிடக்கூடாது. இதை மறந்து அரசுடன் பேசுவதற்கு ஏகினால் அதற்குத் தமிழ் மக்கள் கொடுக்கும் தண்டனை பயங்கரமானதாகவே இருக்கும்.

- விதுரன்


# வழங்கப்பட்ட நிதி போதாமையால் வீடுகளை நிர்மாணிக்கமுடியவில்லை

(முல்லைத்தீவு)

**முல்லைத்தீவு மாவட்டத்தில் 12 ஆயிரத்து 167 வீடுகளை புதிதாக நிர்மாணிப்பதற்கு வழங்கப்பட்ட நிதி போதாமையால் அவற்றை முழுமையாக நிர்மாணிக்க முடியவில்லை என அப்பகுதி மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.**

போரினால் வீடுகள் உள்ளிட்ட அனைத்தையும் இழந்த நிலையில் இருந்த மக்களுக்கு, வீடுகளை நிர்மாணிப்பதற்காக நிதி வழங்கப்பட்ட போதிலும் அந்நிதி போதாமையால் வீடுகளை பூரணமாக கட்டிமுடிக்க முடியவில்லை.

இவற்றுள் மாந்தை கிழக்கு பிரதேச செயலர் பிரிவில் ஆயிரத்து 343, துணுக்காய் பிரதேச செயலர் பிரிவில் ஆயிரத்து 794, ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவில் 2 ஆயிரத்து 42, கரைதுறைப்பற்று பிரதேச செயலர் பிரிவில் 2 ஆயிரத்து 796, புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவில் 3 ஆயிரத்து 495, மணலாறு (வெலிஓயா) பிரதேச செயலர் பிரிவில் 697 வீடுகளுமாக மொத்தம் 12 ஆயிரத்து 167 வீடுகளை நிர்மாணிப்பதற்கு 5 1/2 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கப்பட்டது.



வீடுகளை முழுமையாக நிர்மாணிப்பதற்கு 9 இலட்சம் ரூபா தேவைப்பட்டமையால் சிலர் தமது நகைகளை அடகுவைத்து தமது வீடுகளை முழுமையாக நிர்மாணித்துள்ளனர்.

சிலர் தமது பொருளாதார கஷ்டம் கருதி வீடுகளின் நிர்மாண வேலைகளை அரைகுறையாக நிறுத்தியுமுள்ளனர்.

அத்துடன் மேலும் மாந்தை கிழக்கு பிரதேச செயலர் பிரிவில் 865, துணுக்காய் பிரதேச செயலர் பிரிவில் ஆயிரத்து 268, ஒட்டு சுட்டான் பிரதேச செயலர் பிரிவில் 2 ஆயிரத்து 899, கரைதுறைப்பற்று பிரதேச செயலர் பிரிவில் 6 ஆயிரத்து 920, புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவில் 6 ஆயிரத்து 684, மணலாறு பிரதேச செயலர் பிரிவில் ஆயிரத்து 412 வீடுகளும் தேவையாக உள்ளன.

எனவே, எதிர்வரும் மழைக் காலத்திற்கு முன்னர் இவ் வீடுகளைப் பூரணமாக கட்டிமுடிக்க நிதி உதவிகளை வழங்கி உதவ வேண்டுமெனவும் மேலும் வீட்டுத்திட்டம் கிடைக்காதோருக்கு வீட்டுத்திட்டம் கிடைக்க ஆவன செய்ய வேண்டுமெனபாதிக்கப்பட்ட மக்கள் கோரிக்கை ஒன்றை முன் வைத்துள்ளனர். (ம-267)




## நிர்வாக சபை தெரிவு

(பூநகரி)

போர்க்கால நடவடிக்கையினால் நூலக கட்டடம் சேதமடைந்து நிர்வாகமும் செயற்படாதிருந்த பூநகரி மத்திய சனசமூக நிலையத்தின் புனரமைப்புக் கூட்டமும் நிர்வாகத் தெரிவும் கடந்த 9 ஆம் திகதி கிராம சேவை அலுவலர் நா.தமிழினி தலைமையில் இடம்பெற்றது.

இதில் தலைவராக பொன். தில்லை நாதன், உபதலைவராக செ.கருணாகரன், செயலாளராக செ.பிரதீபன், பொருளாளராக திருமதி ச.சுதர்சனா, உபசெயலாளராக செ.மாதிகா ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (ம-84)

## மணல் அகழ்ந்தவர்களுக்கு தண்டப்பணம் விதிப்பு

(முல்லைத்தீவு)

முறிகண்டிப்பிள்ளையார் ஆலயத்தை அண்டிய பகுதிகளில் சட்ட விரோத மண் அகழ்வில் ஈடுபட்ட ஏழுபேரை மாங்குளம் பொலிஸார் முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராஜா முன்னிலையில் ஆஜர்படுத்திய வேளை ஏழுபேருக்கும் 2 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதித்ததுடன் மணலை பறிமுதல் செய்யுமாறும் உத்தரவிட்டுள்ளார்.

தொடர்ச்சியாக கிடைத்த முறைப்பாடுகளின் அடிப்படையில் மாங்குளம் பொலிஸார் சோதனை நடவடிக்கையின் போது எதிரிகளைக் கைது செய்திருந்தனர்.

மேலும் கொடுக்கப்பட்ட அனுமதிப் பத்திரத்தின் நிபந்தனைகளை மீறி மண் அகழ்வில் ஈடுபட்டதாக பொலிஸார் மன்றில் தெரிவித்திருந்தனர். (அ-ம)

## ஆயுள்வேத வைத்தியசாலையின் செயற்பாடுகள் விஸ்தரிப்பு

(பூநகரி)

பூநகரி பிரதேச சபையினால் நடத்தப்படும் ஆயுள் வேத வைத்திய சாலையின் செயற்பாடுகள், முழங்காவில் கிராமத்திற்கும் பல்லவராயன்கட்டு கிராமத்திற்கும் விஸ்தரிக்கப்பட்டுள்ளன.

இதன்படி பிரதிவாரமும் புதன் கிழமைகளில் முழங்காவிலில் இயங்கும் பிரதேச சபையின் உப அலுவலக மண்டபத்தில் காலை 9 மணி முதல் பிற்பகல் 2 மணிவரையும் பல்லவராயன் கட்டு பிரதேச சபையின் உப அலுவலக மண்டபத்தில் பிரதி வியாழக்கிழமைகளில் காலை 9 மணி முதல் பிற்பகல் 2 மணிவரையும் சிகிச்சைகள் வழங்கப்படவுள்ளன.

ஞாயிறு தவிர்ந்த ஏனை நாட்களில் பூநகரி பிரதேச சபை வளாகத்தில் அமைந்துள்ள ஆயுள் வேத வைத்தியசாலையில் இச் சிகிச்சைகள் இடம்பெறுமென அறிவிக்கப்படுகிறது. (ம-84)

## வீதி புனரமைக்கப்படவில்லை

(முல்லைத்தீவு)

அளம்பில் கடற்கரை வீதி புனரமைக்கப்படாமையால் பயணிப்போர் பெரும் சிரமங்களை எதிர் கொள்கின்றனர்.

ஒரு கிலோ மீற்றர் நீளம் கொண்ட இவ்வீதி குன்றும் குழியுமாக காணப்படுவதால் விபத்துக்கள் பல இடம் பெறும் சூழ்நிலை காணப்படுகிறது.

எனவே, துறைசார்ந்த அதிகாரிகள் இவ் வீதியை புனரமைத்துத் தரவேண்டுமென பயணிகள் கோரிக்கை ஒன்றை முன்வைத்துள்ளனர். (ம-267)

## திருட்டு முயற்சி முறியடிப்பு

(குருமன்காடு)

வவுனியா வெளிக்குளத்தில் உள்ள வீடொன்றில் இடம்பெற இருந்த திருட்டு முயற்சி முறியடிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் தெரியவருவது, குறித்த வீட்டில் நின்ற நாய்க்கு மருந்தடித்து, நாயை மயக்கிவிட்டு திருடுவதற்காக கதவை உடைத்த போது வீட்டுக்காரர் அவலக்குரல் எழுப்பினர். அவலக்குரலைக் கேட்டு அயலவர்கள் குறித்த வீட்டிற்கு ஓடிவர திருடர்களும் திருடாது தப்பி ஓடியுள்ளனர்.

இவ்வாறான திருட்டுச் சம்பவங்கள் நாளுக்குநாள் அதிகரித்துவருகின்றதென அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். (ம-250)

## சி.க.கூ.சமாசங்களுக்கான அபிவிருத்தி வேலைத்திட்டம்

(குருமன்காடு)

இலங்கை சி.க.கூ.சம்மேளனத்தினால் வடமாகாணத்திலுள்ள மாவட்ட சி.க.கூ.சமாசங்களின் இவ் ஆண்டுக்கான அபிவிருத்தி வேலைத்திட்டம் ஒன்று புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இவ் அபிவிருத்தித் திட்டத்தில் வடமாகாணத்திலுள்ள வவுனியா, மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம் ஆகிய ஐந்து மாவட்ட சி.க.கூ. சமாசங்களில் அங்கத்துவம் வகிக்கும் ஒவ்வொரு மாவட்ட சமாசங்களிலிருந்தும் இயங்காத நிலையிலுள்ள 20 சி.க.கூ.சங்கங்கள் வீதம் தெரிவு செய்யப்பட்டு மொத்தமாக 100 சி.க.கூ.சங்கங்களை மீள புனரமைப்பு செய்து இயங்க வைப்பதற்குரிய இவ் வேலைத்திட்டம் கடந்த ஜூன் மாதம் முதல் மாவட்ட சி.க.கூ. சமாசங்களினூடாக நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

இவ் வேலைத்திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்ட 100 சி.க.கூ. சங்கங்களை மீள புனரமைப்பு செய்து இயங்கச் செய்வதற்கு ஒரு மாவட்ட சி.க.கூ. சமாசத்திற்கு இரண்டு வெளிக்கள உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டு இவர்களுக்கான சம்பளம், இலங்கை சி.க.கூ. சம்மேளனத்தினால் வழங்கப்படுவதுடன் ஒரு சி.க.கூ. சங்கத்தின் அலுவலகத்திற்கு தேவை யான தளபாடங்களான ஒரு மேசை, கதிரை, அலுமாரி அத்துடன் பெயர்ப் பலகை ஆகியவையும் வழங்கப்பட்டுள்ளன.

மேலும் இச் சி.க.கூ. சங்கங்களின் நிர்வாக சபை உறுப்பினர்கள் மற்றும் அங்கத்தவர்களுக்கான தலைமைத்துவம், சங்க கணக்கு வைப்பு முறை சம்பந்தமான பயிற்சி வகுப்புகள் மற்றும் கருத்தரங்கு செயலமர்வுகளை மேற்கொள்வதற்கான நிதியையும் வழங்கி வருகின்றது.

எதிர்காலத்தில் மீள புனரமைப்பு செய்யப்பட்டு, இயங்க வைக்கப்படவுள்ள இச் சி.க.கூ. சங்கங்களுக்கு கடனை வழங்குவதற்குத் தேவையான நிதியை இலங்கை சி.க.கூ. சம்மேளனம் மாவட்ட சி.க.கூ. சமாசங்களுக்கு வழங்குவதற்கு இணங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (ம-250)

## உள்ளூராட்சி வாரத்தையொட்டி பல செயற்பாடுகள் முன்னெடுப்பு

(பூநகரி)

பூநகரி பிரதேச சபை நிர்வாகத்தினர் உள்ளூராட்சி வாரத்தை ஒட்டி அந்த வாரத்தில்பல செயற்பாடுகளை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகளை எடுத்துள்ளனர்.

எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 21 ஆம் திகதி காலை தொடக்கம் மாலை வரை முக்கொம்பன் கிராமத்தில் ஆயுர் வேத நடமாடும் சிகிச்சையும் மறுநாள் 22 ஆம் திகதி பணியாளர்கள், உறுப்பினர்கள், பொறுப்பாளர்கள் இணைந்து கடந்த கால சபைக்கு வரவேண்டிய நிலுவைகள் அறவிடலும் இடம்பெறவுள்ளது.

எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 23 ஆம் திகதி கிராம ரீதியான சிரமதானப் பணிகளும் மறுநாள் 24 ஆம் திகதி பூநகரி பிரதேச சனசமூக நிலையுங்களுக்கான வலுவூட்டல் போட்டிகளும் இடம்பெறவுள்ளன.

எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 25 ஆம் திகதி சுற்றாடலில் மரங்களை நடுதல் நிகழ்வில் ஆயுர்வேத மூலிகை மரங்களும் பயன் தரு மரங்களும் அலுவலக சுற்றாடலிலும் சந்தை தொகுதியிலும் பொது இடங்களிலும் நாட்டப்படவுள்ளன.

இறுதி நாளான 26 ஆம் திகதி பாடசாலை மட்டத்தில் கல்வி, நூலக அபிவிருத்தி சம்பந்தமான நூலக விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக பிரதேச சபை உறுப்பினர்களும் பணியாளர்களும் பாடசாலைகளை தரிசித்து செயற்பாட்டில் ஈடுபடவுள்ளனர். (ம-84)

வெளியே காட்டிய கோபம் மன்னிப்பிற்கு வழிதேடும்.
உள்ளே அடக்கிய கோபம் பழிக்கு வழி தேடும்.
– ஓர் அறிஞர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www:valampurii:lk

## பான் கீ மூனின் காலம் கடந்த கழிவிரக்கம் தமிழர் காவியத்திற்கு முகவுரை அல்ல

ஐ.நா.சபையின் 68 ஆவது கூட்டத்தொடர் நடைபெற்றுவரும் வேளையில், இலங்கையில் நடந்த இறுதிக்கட்டப் போரில் ஐ.நா.சபையின் செயற்பாடுகள் தோல்வியடைந்துள்ளதை ஐ.நா. சபையின் பொதுச் செயலாளர் பான் கீ மூன் மனப்பூர்வமாக ஏற்றுக்கொண்டு அதனைத் தெரியப்படுத்தியுள்ளார்.

வன்னிப் போர் முடிவுற்ற கையோடு போர் தந்த இழப்புகளை அவதானிப்பதற்காக வருகை தந்த பான் கீ மூன், உலங்குவானூர்தியில் வன்னிப்பிராந்தியத்துக்குச் சென்று யுத்தம் நடந்த பகுதிகளைப் பார்வையிட்டிருந்தார்.

உலங்குவானூர்தியிலிருந்து அவர் எதனை அவதானித்தார் என்பதை நாம் முன்மொழிய முடியாவிட்டாலும் வன்னி மண்ணில் வதைப்பட்ட மக்களின் அழுகுரலை, மரண ஓலத்தை நிச்சயம் அவர் கேட்டிருக்க முடியாது.

இலங்கையில் நடந்த இறுதிப்போரின் போது ஐ.நா. சபையின் செயற்பாடுகள் தோல்வியில் முடிந்தது என்பதை இன்று ஏற்றுக்கொள்ளும் பான் கீ மூன் அன்று தமிழ் மக்களுக்கு மகா துரோகம் இழைத்தார் என்பதை இந்த உலகம் உணர்ந்து கொள்ள வேண்டும்.

பான் கீ மூன் தவிர்ந்த வேறொருவர் ஐ.நா. சபையின் பொதுச் செயலாளராக இருந்திருந்தால், நிச்சயம் அவர் தமிழ் மக்களைக் காப்பாற்றியிருப்பார்.

என்ன செய்வது ! எங்களின் பரார்த்த வினைப் பயனாக பான் கீ மூன் ஐ.நாவின் செயலாளராக இருந்து விட்டார்.

முள்ளிவாய்க்காலில் நடந்த மனித வதைப் படலம் அதனைத் தொடர்ந்து முட்கம்பி வேலிக்குள் சுமார் மூன்று இலட்சம் தமிழ் மக்களை அடைத்து; உலகில் எங்கும் இல்லாதவாறு பகிரங்கமாக மனித உரிமை மீறலை அரங்கேற்றி; மார்தட்டி நின்ற சிங்கள ஆட்சியாளர்களின் கொட்டம் என எதனையும் கண்டுகொள்ளாத அளவில், பான் கீ மூன் நடந்து கொண்டார்.

உலகின் மிக உன்னதமான அமைப்பாகிய ஐ.நா. சபையின் செயலாளர் பான் கீ மூன் அன்று எதுவும் பேசாமல் இருந்தமைக்குக் காரணம் என்ன?

இலங்கைக்கு வந்த அவருக்கு மகா திரவிய அபிசேகம் நடந்ததா? அல்லது சுவர்ணபுஷ்ப மாலைகள் அணியப்பட்டனவா?

வன்னியில் நடந்த அவலத்தை அந்தக் கணத்தில் தடுத்து நிறுத்தாமல், ஏதோ வியட்நாம் போர் காலத்தில் நடந்த கொடூரத்தை இப்போது கூறுவது போல, வெறும் மூன்றே ஆண்டுகளுக்குள் இலங்கையில் நடந்த சம்பவத்தை அவர் கூறிநிற்பது அவரின் நேர்மைத்தனத் திற்கும் நிர்வாகச் செயற்திறனுக்கும் இழுக்கானது.

எதுவாயினும் வன்னிப் போரின் போது ஈழத் தமிழ் மக்களைக் காப்பாற்றத் தவறிய ஐ.நா. செயலாளர் பான் கீ மூன் தனது பதவியை இராஜினாமா செய்ய வேண்டும் என்றும் தமிழ் மக்களுக்கு அவர் இழைத்த அநீதிக்காக என்றோ ஒரு நாள் அவர் வருந்த வேண்டி வரும் என்றும் இப்பகுதியில் 2009ஆம் ஆண்டில் எழுதிய விடயங்களை மீட்டுப் பார்க்கின்றோம்.

ஆம், பான் கீ மூன் இப்போது கவலை கொள்ளலாம். நாம் இலங்கையில் தோற்றுப்போனோம் என்று சொல்லி முடிக்கலாம். ஆனால் கொன்றவன் வென்றவனாகவும் உயிரிழந்தவன் தோற்றவனாகவும் முடிந்து போன எங்கள் காவியத்திற்கு ஐ.நாவின் செயலாளர் கூறுவது முகவுரையல்ல.

எங்கள் கதைக்கு முகவுரை எழுதும் தகைமை ஐ.நா. சபையின் மனித உரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளை அவர்களுக்கே உண்டு.

நீயே! உன்னை விசாரி அல்லது விசாரிக்கப் படுவாய்! என்ற அம்மையாரின் வாசகம் எங்களைப் பற்றி எழுதும் அத்திப்பட்டிபோன்ற மிகத் துயரமான – வரலாற்றுக்காவியத்திற்குப் பொன்மொழியாக முன்னிற்கும்.

# முன்னோர்கள் வழியில் தன்னிகரில்லாத கல்விப் பணிபுரிந்த திருமதி சிவநாதன்



ஆறுமுக நாவலர் கல்விப் பணியினைத் தொடர்ந்து முன்னெடுத்தவர்களுள் கோப்பாய் மு.சுவாமிநாதன் மிக முக்கியமானவர். கோப்பாயில் பெண்கள் கல்வி கற்கவென தமது சொந்தக் காணியில் சரஸ்வதி வித்தியாசாலையை ஆரம்பித்தவர். நாவலர் தொடங்கிய சைவப் பிரகாச வித்தியாசாலை மூடப்படும் நிலையிலிருந்தபோது அந்த ஆண்கள் பாடசாலையைத் தமது பெண்கள் பாடசாலையோடு இணைத்து கிட்டத்தட்ட 50 ஆண்டு காலம் முகாமையாளராக இருந்து பரிபாலித்தவர். உரும்பிராய் இந்துக் கல்லூரியின் இணை நிறுவுநர், புகழ்பெற்ற இந்துக் கல்லூரிச் சங்கத்தின் உறுப்பினராக இருந்து காரைநகர் இந்துக்கல்லூரியின் வளர்ச்சிக்கு நற்பணியாற்றியவர்.

இப் புகழ் பெற்ற கல்விச் சேவையாளர் மரபில் அவரின் மூத்த மகனாரின் மகளாகப் பிறந்து, சிறந்த ஆசிரியையாக விளங்கியவரே 27.09.2013 அன்று ஓய்வுபெறும் திருமதி நாகேஸ்வரி சிவநாதன் ஆவார். தமது பேரனார் வளர்த்துவிட்ட கோப்பாய் நாவலர் பாடசாலையிலேயே தமது ஆசிரியப் பணியை தொடங்கிய இவர், பின் நிரந்த ஆசிரியராகி, கோப்பாய் ஆசிரிய பயிற்சிக்கலாசாலையிலே பயிற்சி பெற்றவர். பின் சைவத் தமிழ்க் கல்வி உலகில் சிறப்புப் பெற்றுத் திகழும் யா/ ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயத்திலும், யா / உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலயத்திலும் ஆசிரியையாகச் சேவையாற்றும் பாக்கியம் பெற்றவர். நிறைவாக தாம் கல்விப் பணியைத் தொடங்கிய யா / கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயத்தில் சிறப்புற ஆசிரியப் பணிபுரிந்தவர்.

நற் குணமும் நற் செய்கையும் உடைய இவர் மாணவர் உள்ளம் மகிழ பாடம் நடத்துவதில் சிறந்தவர். பாலர் கல்வியை அப் பிள்ளைகளின் உள விருத்தி அறிந்து பாடம் சொல்லிக் கொடுப்பவர்கள் மிகவும் அரியராக, இருக்கிற இன்றைய கல்வி உலகில், இவர் போன்ற ஆளுமைகளின் பணி இன்றியமையாததாகும். சின்னஞ் சிறு மாணவர்களை புத்தகக் கல்விக்குப் புறம்பாக, ஆளுமை விருத்தி நடவடிக்கைகளிலும் நன்கு வழிப்படுத்தி வந்தவர்.

பாடசாலைசார் கல்வி நடவடிக்கைகளுக்குப் புறம்பாக பல சமுதாயப் பணிகளிலும் துணை நின்றவர் ஆசிரியை திருமதி நாகேஸ்வரி சிவநாதன்.

இவ்வகையில் தமது கணவனார் பல்லாண்டு காலம் தலைவராக இருந்த தெல்லிப்பழை இந்து இளைஞர் மன்றத்தின் மூலம் ஆற்றிய பணிகள் முக்கியமானவையாகும். இச்சங்கம் நடத்திய மாணவரக்கான பல போட்டிகளை நெறிப்படுத்தி, ஆற்றலுள்ள மாணவரை இனங்காட்டியமை குறிப்பிடத்தக்கதாகும். இவரால் வளர்தெடுக்கப்பட்ட அவர்களிற் பலர் இன்று சிறந்த பேச்சாளர்களாகவும், சைவ சமயப் பணியாளர்களாகவும் அறியப்பட்டுள்ளனர்.

இதனால் மறைந்த அன்னை சிவத் தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் அன்புக்குப் பாத்திரமானவர். அவ்வாறு பாடசாலைக் கற்பித்தல் ஓய்வின் பின்னரும், சமுதாயம் சார் பணிகளில் அவர் தொடர்ந்தும் ஈடுபட வேண்டும் என்பது அனைவரதும் எதிர் பார்ப்பாகும்.

கிருபா

# பொதுநலவாயம் தொடர்பான விசேட கலந்துரையாடல்

(துனாங்களப்பு)

தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் யாழ்.மாவட்ட காரியாலயத்தில் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு பொதுநலவாய (காமன் வெல்த்) மாநாடு தொடர்பான விஷேட கலந்துரையாடல் ஒன்று இடம் பெறவுள்ளது.

கலந்துரையாடல் தேசிய இளைஞர் சேவைமன்றத்தின் வடமாகாண பணிப்பாளர் சரத் சத்திரபால தலைமையில் நடைபெறவுள்ளது.


இதில் யாழ்.மாவட்டத்தின் 15 பிரதேச செயலகங்களைச் சேர்ந்த இளைஞர் பராளுமன்ற உறுப்பினர்கள், இளைஞர் சேவை உத்தியோகத்தர்கள், பிரதேச சம்மேளனத்தலைவர்கள், மாவட்ட சம்மேளன உறுப்பிணர்கள் பிரதிநிதிகள் ஆகியோரை தவறாது சமுகம் அளிக்குமாறு தேசிய இளைஞர் மன் றத்தின் மாவட்ட காரியாலயம் அறிவித்துள்ளது. (செ–9,37)




**இறைவன் கொடுப்பதை தடுக்கமுடியாது**

''நபியே! அல்லாஹ் உமக்கு யாதொரு தீங்கிழைத்தால் அதனை நீக்குவோர் அவனையன்றி வேறொருவருமில்லை. உமக்கு யாதொரு நன்மையை அவன் கொடுத்தாலும் அதைத்தடுத்துவிடக் கூடியவன் எவனுமில்லை. அவன் யாவற்றின் மீதும் மிக்க ஆற்றலுடையோன்''

(திருக்குர் ஆன் 6:17)




கங்கை ஆறு இன்றுவரை ஒரு வழிபாட்டுத் தலமாகத் திகழ்கிறது. தூய்மையான கங்கை ஆற்றை வெறுமனே ஓர் ஆறு எனக் கருதாமல் எமது வினைகளையெல்லாம் கழுவி எம்மை நலமாக்கும் நீர்க்கடவுள் என்ற நம்பிக்கை இந்துக்களிடம் நிலைத்திருக்கிறது. கங்கை நதி சிவபெருமானின் சடாமுடியிலிருந்து பூமிக்கு வருகிறது என்ற ஆழமான கருத்தும் உண்டு. இக்கருத்தினைப் பல அடியார்கள் தமது பாடல்களிலே பதிவு செய்துள்ளனர். மணிவாசகர் பாடலிலே கங்கை பற்றிய இக்கருத்தினைச் செந்தமிழ்ச் சொற்சித்திரமாகக் காட்சிப்படுத்திக் காட்டியுள்ளார்.

சடைமுடியாகிய அணையின் பெருமையைச் சார்ந்து வெண்மணியாகிய முத்துக்களையுடைய சங்குகளைக் கொழித்து மந்தார மலர்களை உந்தித் தள்ளும் கங்கையாகிய வரம்புக்குட்பட்ட நீர்நிலையில் பிறைமதியாகிய தோணி பொருந்தப் பெற்று கொன்றை மாலையையும் உடையவனே. இக்காட்சிக்கூடாகச் சில செய்திகளையும் மணிவாசகர் உணர்த்தியுள்ளார். பணிலம் என்ற சொல்லைப் பயன்படுத்தும்போது அதன் பொருளையும் தெளிவாக விளக்க வெண்மணிப்பணிலம் எனக் குறிப்பிட்டுள்ளார். சங்கு பலவகைப்படும். அவற்றுள் வெண்மையான முத்துக்களைக் கொண்ட சங்கே பணிலம் எனப்பட்டது. அதேபோல நுந்தும் என்ற சொற்பயன்பாடு நீரோட்டம் மலர்களைத் தள்ளிச் செல்வதை உணர்த்துகிறது. சிறை நீர் என்னுந் தொடர் நீர் கட்டறுத்துப் பாயாமல் பாதுகாப்பாக வரம்பு கட்டப்பட்டதைக் குறித்து நிற்கிறது. அதற்குள்ளே ஒரு கலைத்திங்களாகிய பிறைக் கலம் நிற்கிறது. கலம் என்ற பொதுச் சொல் நீரிற் பயணிக்க உதவும் ஊர்தியாகும்.

இவ்வாறு இறைவன் சடைமுடியைக் காட்டுகின்றபோது மணிவாசகர் தன்னுடைய தவறு ஒன்றையும் சுட்டிக்காட்டியுள்ளர். இகழ்ச்சியில்லாத நின்திருவடிகளின் பழமையாகிய தொண்டினை நின் அருளாற் பெற்று அது என் விதியின்மையால் என்னைவிட்டு நழுவிப்போக நின்னைப் பழித்துக் கொண்டு செய்வதறியாது திகைத்து விழித்துக் கொண்டு இருந்த என்னை நீ கைவிட்டு விடலாகாது என வேண்டுதல் செய்கிறார். அவர் இறைவன் திருவடியை நேரடியாகக் கண்டவர். எனவே மற்றவர்களைப் போல பிறர் வாயிலாகக் கேட்டறிந்தவரல்ல. திருவடி தீட்சை பெற்ற போது மிக்க மகிழ்ச்சியடைந்தது மட்டுமல்லாமல் தெய்வீகத்தை உணர்ந்து மெய் சிலிர்த்தவர். ஆனால் பின்னர் உலகியல் வாழ்வுக்கு மீண்டும் திரும்பிய போது அந்த அனுபவத்தை முற்றாக மறந்தது மட்டுமன்றி இறைவனைப் பழித்து வாழ்ந்திருந்தார். இதுவே அவர் செய்த பெரிய பிழையென்பதைப் பின்னர் நன்குணர்ந்து கொண்டபோது திகைத்துவிட்டார். விதியின் பயனால்தான் இவ்வாறு செயற்பட்டதாக அவர் கூறுவது மனித வாழ்வியல் நிலையான ஒரு சாட்டாக உள்ளது.

**கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்**

தொடர்ந்து வழிபாடு செய்ய மறக்கும் மனிதர் அதைத் தம்முடைய தவறாகக் கொள்வதில்லை. காரணத்தை விதியாகச் சாட்டி விடுவர். முன்னோரது முறைமைகளைப் பின்பற்றவும் தற்போது யாரும் விரும்புவதில்லை. வழிபாட்டு நடைமுறைகளைப் பழித்துச் கூறுவோர் இன்றும் பலர் உளர். அவர்கள் மணிவாசகரைப்போலப் பழித்து விழித் திருப்பவர் ஆவர். அவர்களையே மணிவாசகர் தன்கூற்றால் நெறிப்படுத்துகிறார்.

பழிப்பினிப் பாதப் பழந்தெழும்
பெய்தி விழப் பழித்து
விழித்திருந்தேனை விடுதி கண்டாய்
வெண்மணிப் பணிலங்
கொழித்து மந்தார மந்தாகினி
நுந்தும் பந்தப் பெருமை
தழீஇச் சிறை நீரிற் பிறைக்கலஞ்
சேர்தரு தாரவனே



# புருமின் அதிரடிச் சதத்தால் வீழ்ந்தது ஒடாகோ அணி

நீல் புரூமின் அதிரடி சதத்தால், பெர்த் ஸ்கார்ச்சர்ஸ் அணிக்கு எதிரான ஆட்டத்தில் ஒடாகோ அணி 62 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

சிக்ஸர்களையும், பவுண்டரிகளையும் விளாசிய புரூம் ஆட்டமிழக்காமல் 56 பந்துகளில் 117 ஓட்டங்களைப் பெற்றார்.

சம்பியன்ஸ் லீக் இருபது ஓவர் போட்டியின் 8ஆவது ஆட்டம் ராஜஸ்தான் மாநிலம், ஜெய்ப்பூரில் புதன் கிழமை நடைபெற்றது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற பெர்த் ஸ்கார்ச்சர்ஸ் அணி முதலில் ஃகளத் தடுப்பைத் தேர்வு செய்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய ஒடாகோ அணியின் தொடக்க வீரர்கள் சொற்ப ஓட்டங்களில் ஆட்டமிழந்தனர். அந்த அணி 9 ஓட்டங்களை எட்டுவதற்குள் முக்கியமான 2 விக்கெட்டுகளை இழந்தது.

இதனால், ஆரம்பத்தில் சிறிது பொறுமையாகவே விளையாட ஆரம்பித்தார் புரூம். நான்காவது விக்கெட்டாக களமிறங்கிய டி புரூடர் சிறந்த இணைப் பாட்டத்தை அளிக்க, புரூமின் அதிரடி ஆரம்பமானது. பவுண்டரிகளுக்குச் சென்று கொண்டிருந்த பந்துகளை சிக்ஸருக்கு அனுப்பி ரசிகர்களுக்கு உற்சாகத்தை ஏற்படுத்தினர் ப்ரூம்.

34 பந்துகளில் அரை சதம் கண்ட ப்ரூம், தொடர்ந்து சிக்ஸர் மழையைப் பொழிந்தார். இதனால், 51 பந்துகளில் சதமடித்தார்.

அவருக்கு பக்க பலமாக விளையாடி வந்த புரூடன் 45 ஓட்டங்களிலும் டாஸ்சேட்டி 66 ஓட்டங்களிலும் ஆட்டமிழந்தனர். இறுதியில் ஒடாகோ அணி, 20 ஓவர்கள் முடிவில் 4 விக்கெட் இழப்புக்கு 242 ஓட்டங்களைப் பெற்றது.

இறுதிவரை ஆட்டமிழக்காத புரூம் 117 ஓட்டங்களைப் பெற்றார். இதில், 8 சிக்ஸர்களும், 9 பவுண்டரிகளும் அடங்கும்.

இந்த ஆட்டத்தின்போது 18ஆவது ஓவரில் மூன்று சிக்ஸர்களை தொடர்ந்து விளாசிய புரூம், அந்த ஓவரில் 21 ஓட்டங்களை எடுத்தார். ஒடாகோ அணி, கடைசி 5 ஓவரில் மட்டும் 94 ஓட்டங்களை எடுத்தது குறிப்பிடத்தக்கது.

243 என்ற கடின இலக்குடன் களமிறங்கிய ஸ்கார்ச்சர்ஸ் அணியின் தொடக்க விக்கெட்டுகள் விரைவாக வீழ்ந்தன. 11 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுகளை இழந்து அந்த அணி தடுமாறியது. எனினும், மற்ற வீரர்கள் ஓரளவு ஓட்டங்களைச் பெற்று ஆட்டமிழந்தனர். 20 ஓவர்கள் முடிவில் அந்த அணி 6 விக்கெட்டுகளை இழந்து 180 ஓட்டங்களை மட்டும் எடுத்து தோல்வியைத் தழுவியது. அதிகபட்சமாக கார்ட்ரைட் ஆட்டமிழக்காமல் 69 ஓட்டங்களை எடுத்தார்.

இதனால், 62 ஓட்டங்கள் வித்தியாசத்தில் ஒடாகோ அணி வெற்றி பெற்றது. ஒடாகோ அணித் தரப்பில் பட்லர் 3 விக்கெட்டுகளைக் கைப்பற்றினார்.

அதிரடியான சதம், களத்தடுப்பின்போது 2 பிடியெடுப்புகள் என அணியின் வெற்றிக்கு முக்கியப் பங்காற்றிய ப்ரூம் ஆட்ட நாயகன் விருதைப் பெற்றார்.

இந்த வெற்றியின் மூலம், ஒடாகோ அணி கடைசியாக விளையாடிய 14 ஆட்டங்களிலும் வெற்றியை பதிவு செய்துள்ளது குறிப்பிடத்தக்கது. தகுதிச் சுற்றின் மூலம் சம்பியன்ஸ் லீக் போட்டியின் பிரதான சுற்றுக்கு ஒடாகோ அணி தகுதி பெற்றது. தகுதிச்சுற்றில் 3 ஆட்டத்திலும் வெற்றி பெற்ற ஒடாகோ அணி, பிரதான சுற்றின் 2 ஆட்டத்திலும் வெற்றி பெற்று புள்ளிகள் பட்டியலில் முதலிடத்தில் உள்ளது.

இந்த ஆட்டத்தில் புரூம் எடுத்த 117 ஓட்டங்கள், சம்பியன்ஸ் லீக்கில் தனிநபர் எடுத்த மூன்றாவது அதிகபட்சமாகும். இதற்கு முன்னர், அவுஸ்திரேலியாவின் டேவிட் வோர்னர் 135 மற்றும் 123 ஓட்டங்களை பெற்றுள்ளார்.

# உலகக் கிண்ணக் காற்பந்து போட்டியின் பின்னர் மைதானம் கைதிகளின் பாவனைக்கு

பிரேசிலில் அடுத்த ஆண்டு உலகக் கிண்ணக் காற்பந்து போட்டிகள் நடைபெற உள்ளன. இதற்காக பிரேசில் அரசு 12 மைதானங்களை கட்டி வருகின்றது.

உலகக் கிண்ணப் போட்டிகளை நடத்த மொத்தம் 13.3 பில்லியன் டொலர் தேவை என மதிப்பிடப்பட்டுள்ளது. அதில் மைதானங்களுக்கு மட்டும் 3.5 பில்லியன் டொலர் செலவிடப்படுகின்றது.

பொதுமக்கள் சேவைக் குறைபாடு, அதிக வரி, சமூக ஏற்றத்தாழ்வு போன்றவை மக்களின் வாழ்க்கைத் தரத்தை கேள்விக் குறியாக கும்போது விளையாட்டிற்காக இத்தனை ஆடம்பர செலவுகள் தேவையில்லை என்று கடந்த ஜூலை மாதம் இலட்சக்கணக்கான மக்கள் போராட்டங்களில் ஈடுபட்டனர்.

இந்த நிலையில் இவ்வளவு செலவில் கட்டப்படும் விளையாட்டு மைதானங்கள் அதற்குப் பின்னர் எதற்கும் பயன்படாது என்பது குறித்து சிந்தனை எழுந்துள்ளது. 44 ஆயிரம் பேர் உட்கார்ந்து பார்க்கக்கூடிய வசதிகளுடன் கட்டப்பட்டுள்ள அமேசொனாஸ் மாநிலம் மானுஸ் பகுதியில் உள்ள மைதானம் 275 மில்லியன் டொலர் செலவில் கட்டப்பட்டுள்ளது. இந்த மைதானம் உலகக் கிண்ண போட்டிகளின்போது நான்கு முறை மட்டுமே உபயோகப்படுத்தப்படும். 2.3 மில்லியன் மக்கள்தொகை உள்ள அந்தப் பகுதியில் விளையாட காற்பந்து அணி எதுவும் கிடையாது.

இதுபோன்றே தலைநகர் பிரேசிலியா, தென்மேற்குப் பகுதியில் உள்ள கியாபா, வடகிழக்குப் பகுதியில் உள்ள நடால் போன்ற இடங்களில் கட்டப்பட்டுள்ள மைதானங்களும் பயனில்லாமல் போகும். 2016ஆம் ஆண்டு இங்கு நடைபெற உள்ள ஒலிம்பிக் போட்டிகளுக்கும் இதேபோன்று பெருந்தொகை செலவிடப்படும்.

இதனிடையில் அமேசொனாஸ் மாவட்ட நீதிபதியாகப் பணியாற்றும் சபினோ மார்கு வெஸ் போட்டிகளுக்குப் பின்னர் மானுஸ் மைதானத்தை கைதிகளின் செயலாக்கத்திற்குப் பயன்படுத்தலாம் என்று கருத்து தெரிவித்துள்ளார். இவர் அம்மாநிலத்தில் உள்ள சிறைகளை மேற்பார்வையிடும் அமைப்பிற்குத் தலைவராகவும் உள்ளார்.

பிரேசிலின் விளையாட்டுத்துறை அமைசசரான ஆல்டோ ரெபெலோ விளையாட்டு மற்றும் பிற நிகழ்ச்சிகளும் நடத்து



வதற்கு இந்த மைதானங்கள் பயன்படுத்தப்படும் என்று அறிவித்துள்ளார். மற்ற அரசு அதிகாரிகளோ சம்பந்தப்பட்ட நகர நிர்வாகங்கள் இந்த மைதானங்களின் பயன்பாடுகளுக்காக புதுமையான முறையில் சிந்தித்து செயற்பட வேண்டும் என்று தெரிவித்துள்ளனர்.



# சம்பியன்ஸ் லீக்கில் தொடர்கிறது ராஜஸ்தானின் வெற்றிப் பயணம்

சம்பியன்ஸ் லீக் ரி-20 போட்டியில் லயன்ஸ் அணிக்கு எதிரான ஆட்டத்தில் டிராவிட் தலைமையிலான ராஜஸ்தான் ரோயல்ஸ் அணி 30 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

ரோயல்ஸ் சுழற்பந்து வீச்சாளர் பிரவீண் தாம்பே, அற்புதமாக பந்து வீசி 4 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

இந்த ஆட்டம் ராஜஸ்தான் மாநிலம், ஜெய்ப்பூரில் புதன்கிழமை இரவு நடைபெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய ரோயல்ஸ் அணி 20 ஓவர்கள் முடிவில் 5 விக்கெட் இழப்புக்கு 183 ஓட்டங்களை பெற்றது. அந்த அணியில் தனிப்பட்ட நபர், அதிக ஓட்டங்களைக் குவிக்கவில்லை என்றாலும், 4 வீரர்கள் 30 ஓட்டங்களுக்கு மேல் பெற்றனர். இது, அணியின் ஒட்டு மொத்த ஓட்ட எண்ணிக்கையை உயர்த்தியது.

அதிகபட்சமாக பிராட் ஹோட்ஜ் ஆட்டமிழக்காமல் 23 பந்துகளில் 46 ஓட்டங்களை பெற்றார். நிதானமாக விளையாடிய அணித் தலைவர் டிராவிட் 5 பவுண்டரிகளுடன் 31 ஓட்டங்களைப் பெற்றார்.

அடுத்து விளையாடிய லயன்ஸ் அணி 20 ஓவர்களில் 9 விக்கெட்டுகளை இழந்து 153 ஓட்டங்களை எடுத்து தோல்வியைத் தழுவியது.

அணித் தலைவர் ஆல்விரோ பீட்டர்சன் அதிக பட்சமாக 40 ஓட்டங்களைப் பெற்றார். ரோயல்ஸ் தரப்பில் மகாராஷ்டிரத்தைச் சேர்ந்த பிரவீண் தாம்பே 3 ஓவர்கள் பந்து வீசி 15 ஓட்டங்களை மட்டும் அளித்து 4 விக்கெட்டுகளைக் கைப்பற்றினார்.

இதில், சிறப்பாக விளையாடி வந்த ஆல்விரோ பீட்டர்சனை போல்டாக்கி அனைவரையும் அதிர்ச்சியில் உறைய வைத்தார் தாம்பே. ஆட்டநாயகன் விருது தாம்பேவுக்கு அளிக்கப்பட்டது.

இந்த ஆட்டத்தில் வெற்றி பெற்றதன் மூலம், உள்ளூரில் ரோயல்ஸ் அணி தொடர்ந்து பெற்ற வெற்றிகளின் எண்ணிக்கை 10ஆக (ஐபிஎல் போட்டியில் 8 ஆட்டங்கள், சம்பியன்ஸ் லீக்கில் 2 ஆட்டங்கள்) உயர்ந்தது.

# சிறிகாமாட்சியை வீழ்த்தியது கே.சீ.சீ.சீ

நியூஸ்ரார்ஸ் விளையாட்டுக் கழகம் 2 ஆவது ஆண்டாக நடத்தும் நியூஸ்ரார் பிரிமியர் லீக் வெற்றிக் கிண்ணத்திற்கான கிரிக்கெட் சுற்றுப்போட்டி தொடரில் கே.சீ.சீ.சீ அணி, சிறிகாமாட்சி அணியை 85 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய கே.சீ.சீ.சீ அணி 20 ஓவர்களில் 8 இலக்குகளை இழந்து 189 ஓட்டங்களை பெற்றது. பங்குஜன் 86 (தொடரின் 8 ஆவது அரைச் சதம்), யனுதாஸ் 17, உமாநாத் 17, வல்லவன் 19 ஓட்டங்களை பெற்றனர். திவாகர் 2, சுஜன், பவிதரன், தீபன், றதீஸ், சுதர்சன் தலா ஒரு இலக்கினை கைப்பற்றினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய சிறிகாமாட்சி அணி 19.5 ஓவர்களில் சகல இலக்குகளையும் இழந்து 104 ஓட்டங்களை பெற்றது. சுஜன் 27, தீபன் ஆட்டமிழக்காது 17 ஓட்டங்களை பெற்றனர். பவி, யனுதாஸ் தலா 3 இலக்கினை கைப்பற்றினர்.

இப்போட்டியின் மூலம் சிறந்த கழக அணித் தெரிவிற்கு கே.சீ.சீ.சீ. அணி 4.89 புள்ளிகளையும் சிறிகாமாட்சி அணி 2.2 புள்ளிகளையும் பெற்றுக் கொண்டன.


## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் வாடகைக்கு வீடு /கட்டடம் தேவை

அறிவியல் நகர், கிளிநொச்சியில் அமையவுள்ள யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பொறியியல் பீட, விவசாய பீட மாணவர்களிற்கு விடுதி வசதி வழங்குவதற்காக சகல வசதிகளுடனும் கூடிய பெரிய, நடுத்தர வீடுகள் /கட்டடங்கள் கிளிநொச்சி திருமுருகண்டி வீதியை அண்மித்த பகுதிகளில் வாடகைக்குத் தேவை.

வீடு / கட்டடத்தை வாடகைக்குத் தர விரும்புவோர் கீழ்வரும் மாதிரி படிவத்தில் தயார்செய்யப்பட்டு பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்ப படிவங்களை 18.10.2013 ஆம் திகதி பி.ப.2.30 மணிக்கு முன்னர் சிரேஷ்ட உதவிப் பதிவாளர்/ நிர்வாகக் கிளை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் எனும் முகவரிக்கு கிடைக்கக் கூடியவாறு பதிவுத் தபாலில் அனுப்பவும்.

கடித உறையின் இடது மேல் மூலையில் "யாழ்.பல்கலைக்கழக பொறியியல் பீட /விவசாய பீட மாணவர்களுக்கான வீடு /கட்டடம்" என குறிப்பிடப்பட வேண்டும்.பல்கலைக்கழக கேள்விச் சபையின் முடிவே இறுதியானது.

★ தொடர்புகளுக்கான தொலைபேசி இல: 021 222 6517

பதிவாளர்

(சி–4927)

சிரேஷ்ட உதவிப் பதிவாளர் /நிர்வாகம்
யாழ். பல்கலைக்கழகம்

**யாழ். பல்கலைக்கழகத்தின் பொறியியல்பீட /விவசாய பீட உபயோகத்திற்கான வீடு /கட்டடம்**

மேற்படி விடயம் தொடர்பாக தங்கள் ......................ஆம் திகதிய பத்திரிகை விளம்பரத்திற்கு அமைவாக எனது பின்வரும் வீட்டை /கட்டடத்தை பல்கலைக் கழகத்திற்கு குத்தகைக்குத் தர விரும்புகிறேன்.

வீடு / கட்டடம் பற்றிய விபரங்கள்

1) வீடு / கட்டடம் அமைந்திருக்கும் இடம்:
...............................................................................
...............................................................................
...............................................................................

2) வீடு / கட்டட சொந்தக்காரரின் பெயரும் அவரது நிரந்தர முகவரியும்:
...............................................................................
...............................................................................
...............................................................................

3) தொடர்பு கொள்ள வேண்டியவரின் பெயரும் முகவரியும் தொலைபேசி இலக்கம்
பெயர் : ..........................................................................
முகவரி: ..........................................................................
..........................................................................
தொலைபேசி இல : ...........................................................

4) a) வீட்டின் / கட்டடத்தின் பரப்பளவு (சதுர அடி)........................
b) வீடு / கட்டடம் அமைந்துள்ள காணியின் பரப்பளவு............

5) அறைகளின் எண்ணிக்கை...............
குளியல் அறைகளின் எண்ணிக்கை......
மலசல கூடங்களின் எண்ணிக்கை.....

6) மின்சார வசதி உண்டு / இல்லை..............................................
விபரம் ..............................................................

7) தண்ணீர் வசதி : கிணறு /குழாய் நீர்
விபரம் ..............................................................

8) எதிர்பார்க்கப்படும் குத்தகை / மாதாந்த வாடகை..................
(வீடு / கட்டட பராமரிப்பு தொடர்பான செலவுகள் உள்ளடங்கலாக)

9) குத்தகைக்கு தரக்கூடிய கால அளவு: ..................................

10) வேறு யாதாயினும் கட்டுப்பாடுகள் /நிபந்தனைகள் (இருப்பின்)....
..............................................................................
..............................................................................

திகதி: ........................ ...........................................
விண்ணப்பதாரரின் கையொப்பம்


## ஸ்ரீலங்கா கிரிக்கெட் பிரிவு 3

# யாழ்.சென்றல் அணி வெற்றி

ஸ்ரீலங்கா கிரிக்கெட் போட்டிக்கு யாழ். நகரில் இருந்து ஓர் அணியை தெரிவு செய்வதற்காக யாழ்.மாவட்ட துடுப்பாட்ட சங்கம் தகுதிகாண் சுற்றுப் போட்டியை நடத்துகின்றது.

அந்த வகையில் அண்மையில் இடம் பெற்ற போட்டியில் மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற அரையிறுதி ஆட்டத்தில் யாழ்.சென்றல் அணி திருநெல்வேலி கிரிக்கெட் கழக அணியை 5 இலக்குகளால் வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய திருநெல்வேலி கிரிக்கெட் கழக அணி 46.1 ஓவர்களில் சகல இலக்குகளையும் இழந்து 197 ஓட்டங்களை பெற்றது. சுரேந்திரன் 44, கோபி 22, விதுண் 18, சுரேஸ் 27 ஓட்டங்களை பெற்றனர்.

பந்து வீச்சில் யசின்தன் 1, திருக்குமரன் 3, றஜீவ்குமார் 3, றொகான் 2, சுபாதீஸ் ஒரு இலக்கினையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய யாழ்.சென்றல் அணி 42.3 ஓவர்களில் 5 இலக்குகளை இழந்து 198 ஓட்டங்களை பெற்றது. பாலேந்திரா 22, யசின்தன் 26, றஜீவ்குமார் ஆட்டமிழக்காது 52, றொகான் 36, கலிஸ்ரன் ஆட்டமிழக்காது 26 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் சிவராஜ் 2, விதுண் 1, லவகாந் 1, சுரேந்திரன் 1 இலக்கினையும் கைப்பற்றினர்.

இப் போட்டியில் வெற்றி பெற்ற யாழ். சென்றல் அணி மானிப்பாய் பரீஸ் அணியுடன் நாளை மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற விருக்கும் இறுதிப் போட்டியில் கலந்து கொள்வார்கள்.

இப்போட்டியின் மூலம் சிறந்த கழக அணி தெரிவு நிகழ்விற்கு யாழ்.சென்றல் அணி 7.9 புள்ளிகளையும் திருநெல்வேலி கிரிக்கெட் கழக அணி 2.4 புள்ளிகளையும் பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# மானிப்பாய் பரீஸ் வெற்றி

ஸ்ரீலங்கா கிரிக்கெட் சுற்றுப் போட்டிக்கு யாழ்.நகரிலிருந்து ஒரு அணியை தெரிவு செய்வதற்காக யாழ்.மாவட்ட துடுப்பாட்ட சங்கம் தகுதிகாண் போட்டிகளை நடத்தி வருகின்றது.

அந்த வகையில் அண்மையில் மானிப்பாய் பரீஸ் அணிக்கும் யாழ்.ஜொனியன்ஸ் அணிக்கும் இடையில் நடைபெற்ற முதலாவது அரையிறுதிப் போட்டியில் மானிப்பாய் பரீஸ் அணி, யாழ் ஜொனியன்ஸ் அணியை ஒரு விக்கெட்டால் வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய ஜொனியன்ஸ் அணி 50 ஓவர்களில் 9 விக்கெட்டுக்களை இழந்து 261 ஓட்டங்களை பெற்றது. அன்புஜன் 37, அமிர்தயன் 17, காண்டீபன் 32, விதுஸன் 80, பிருந்தாபன் 25 ஓட்டங்களையும் பெற்றனர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய மானிப்பாய் பரீஸ் அணி 48.1 ஓவர்களில் 9 விக்கெட்டுக்களை இழந்து 262 ஓட்டங்களைப் பெற்றது. கோபு 47, சபேஸன் 76, கிசோ 32 ஓட்டங்களை பெற்றனர். சன்சயன் 2, விதுஸன் 3, பிருந்தாபன் 2 இலக்குகளை கைப்பற்றினர்.

இப்போட்டியின் மூலம் சிறந்த கழக அணித் தெரிவுக்கு மானிப்பாய் பரீஸ் அணி 8.5 புள்ளிகளையும் யாழ்.ஜொனியன்ஸ் அணி 3.5 புள்ளிகளையும் பெற்றுக் கொண்டன.

# ஸ்ரீலங்கா கிரிக்கெட் பிரிவு 3 துடுப்பாட்ட சுற்றுப்போட்டி

## திருநெல்வேலி கிரிக்கெற் அணி வெற்றி

சிறிலங்கா பிரிவு 3 இற்கான சுற்றுப் போட்டிக்கு யாழ் நகரில் இருந்து ஓர் அணியை தெரிவு செய்வதற்கான தகுதி காண் போட்டிகள் நடைபெற்றுவருகின்றன.

அந்தவகையில் அண்மையில் யாழ்.பல்கலைக்கழக மைதானத்தில் நடைபெற்ற கால் இறுதி போட்டியில் திருநெல்வேலி கிரிக்கெட் கழக அணி, யாழ்.பல்கலைக்கழக அணியை 53 ஓட்டங்களால் வெற்றிபெற்று அரை இறுதிக்கு தகுதி பெற்றுள்ளது.

முதலில் துடுப்பெடுத்தாடிய திருநெலவேலி கிரிக்கெட் கழக அணி 47.2 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 154 ஓட்டங்களை பெற்றது.

சிவராஜ் 27, விதுண் 58, சுரேந்திரன் 21 ஓட்டங்களை பெற்றனர். அச்சுதன் 03, குயின்ரன், தரணிதரன், விதுஷ் தலா 2 இலக்கினையும் சற்குணேஸ்வரன் ஒரு இலக்கினையும் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய யாழ்.பல்கலைக்கழக அணி 33.2 ஓவர்களில் சகல இலக்குகளையும் இழந்து 101 ஓட்டங்களை பெற்றது.

தசீந்தன் 21, பிரகாஷ் 16, அச்சுதன் 32 ஓட்டங்களையும் பெற்றனர். கோபிநாத் 04, சுரேந்திரன், சிவராஜ், சுரேஷ் தலா 2 இலக்கினையும் கைப்பற்றினர்.


இப் போட்டியின் மூலம் சிறந்த கழக அணி தெரிவு நிகழ்விற்கு திருநெல்வேலி கிரிக்கெற் அணி 7.5 புள்ளிகளையும், யாழ். பல்கலைக்கழக அணி 2 புள்ளிகளையும் பெற்றுக் கொண்டனர்.

# காதலியை கரம் பிடிக்கிறார் ஜோகோவிக்

பிரபல டென்னிஸ் வீரர் நோவாக் ஜோகோவக் தனது காதலியை மணமுடிக்க உள்ளார். சர்வதேச டென்னிஸ் போட்டிகளுக்கான தர வரிசைப் பட்டியலில் முதலிடம் வகிப்பவர் செர்பிய நாட்டை சேர்ந்த நோவாக் ஜோகோவிக்.

இவர்தனது நீண்ட கால தோழியான ஜெலீனா ரிஸ்டிக்கை கரம் பிடிக்கிறார். இது குறித்து டுவிட்டரில் மிக்க மகிழ்ச்சி! வாழ்த்துகளுக்கு எனது நன்றி என தனது நண்பர்களை குறிப்பிட்டு கருத்து தெரிவித்துள்ளார்.

இவரது காதலியான ஜெலீனாவும் செர்பிய நாட்டை சேர்ந்தவர் தான். காதலி இவருக்கு முத்தமிடுவது போன்ற புகைப்படத்தையும் வெளியிட்டுள்ளார்.



மேலும், தொடர்ந்து 100-வது வாரமாக முதலிடம் வகிக்கும் டென்னிஸ் வீரர் என்ற பெருமையையும் ஜோகோவிக் சமீபத்தில் நிகழ்த்தியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## வடக்கிற்கான தேர்தல்...

தேர்தலில் இடம்பெற்ற வன்முறை மற்றும் அச்சுறுத்தல்கள் தொடர்பில விசாரணைகள் நடத்தப்படும் என நம்புகிறோம் என்றார்.

அதேவேளை வடக்கு மாகாண முதலமைச்சராக தெரிவாகியுள்ள சி.வி.விக்னேஸ்வரனுக்கு வாழ்த்துக்களை தெரிவித்து கொண்ட ஜீன் லம்பார்ட், வடக்கு மாகாண மக்களின் நன்மைகள் தொடர்பாக முக்கிய பொறுப்புகள் அவருக்கு வழங்கப் பட்டுள்ளதாக குறிப்பிட்டார்.

இலங்கை அரசியல் அமைப்பின் கட்டமைப்புக்குள் தேசிய மற்றும் மாகாண ஆட்சியாளர்கள் முழுமையான ஒத்துழைப்புடன் செயற்பாடுவர்கள் என நம்புவதாக அவர் தெரிவித்தார். (செ-11)

## ஐ.நா பேரவைக்குள்...

போதுமான அங்கீகாரத்தை வழங்கவில்லை என இந்திய பிரதிநிதி குறிப்பிட்டார்.

இலங்கையில் வடக்கு மாகாண சபைத் தேர்தலை நடத்திய இலங்கை அரசு சர்வதேசத்திற்கு தனது அர்ப்பணிப்பை வெளிகாட்டியுள்ளது எனவும் அவர் கூறினார்.

வடக்கு மாகாண மக்களின் அவசர தேவைகளை உணர்ந்து இலங்கை அரசும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் பரஸ்பர புரிந்துணர்வுடன் ஆக்கபூர்வமாக கூட்டாக பணியாற்ற வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தினார்.

அதேவேவேளை இங்கு கருத்து வெளியிட்ட ஐரோப்பிய ஒன்றிய பிரதிநிதி.

இலங்கையின் மூத்த பிரமுகர்கள் ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளரின் செயற்பாடுகளை குறைமதிப்புக்கு உட்படுத்த முயற்சித்து வருவதாக கவலை வெளியிட்டார்.

ஆணையாளரின் கடந்த மாத இலங்கையில் மேற்கொண்ட விஜயம் தொடர்பிலான அறிக்கை குறித்து கலக்கமடைந்துள்ள இலங்கை அரசாங்கத்தின் அதிகாரிகள் மற்றும் ஏனையோர் இழிவுபடுத்தும் அல்லது திசைதிருப்பும் முயற்சியாக தவறான பிரசாரங்களை மேற்கொண்டு வருகின்றனர் என அவர் மேலும் தெரிவித்தார்.

அதேவேளை மனித உரிமை ஆணையாளர் அலுவலகத்தின் தொழிலநுட்ப உதவிகளை இலங்கை பெற்று கொள்ள வேண்டும் என வேண்டுகோள் விடுத்த அமெரிக்க பிரதிநிதி, கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக குழுவின் பரிந்துரைகளை அமுல் படுத்த வேண்டும் என வலியுறுத்தியுள்ளார்.

இதனிடையே வடக்கு மாகாண சபை தேர்தல் வெற்றிகரமான நடத்தப்பட்டமையை வரவேற்ற அவுஸ்திரேலிய பிரதிநிதி, இலங்கையை தனிமைப்படுத்தாது மனித உரிமை கவலைகளை சீர்செய்ய அந்த நாட்டை ஊக்கப்படுத்த வேண்டியதே சிறந்த வழியாகும் என தெரிவித்தார். (செ-11)

## இலங்கைக்கு எதிராக...

வெளியிட்ட அவர்,

30 வருடங்கள் தொடர்ந்த போர முடிவுக்கு வந்த பின்னர், ஜனநாயகத்தை ஏற்படுத்த இலங்கை அரசாங்கம் தனது அதிகாரங்களைக் கொண்டு எல்லாவற்றையும் செய்த போதிலும், அமெரிக்கத் தூதரகம் அவற்றை வலுவற்றதாக்கியுள்ளது.

நாம் பல கட்சி நாட்டில் இருக்கிறோம். இலங்கையில் போர் உச்சத்தில் இருந்த போது கூட நாம் தேர்தல்களை நடத்தினோம். ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி மீது குற்றம்சாட்டுவது நியாயமற்றது.

தெற்கில். அமெரிக்க தூதரகத்தின் பின்னணியுடன் எந்த மட்டத்திலும் தேர்தல்களில் அவர்களால் வெற்றி பெறமுடியாது. சில வங்குரோத்து அரசியல் கட்சிகள் கூட அமெரிக்கத் தூதரகத்தைப் போன்றே குற்றம் சுமத்துகின்றன.

18வது திருத்தச்சட்டத்தின் மூலம் இலங்கை ஜனாதிபதி பதவி வரம்பு நீடிக்கப்பட்டதை மேற்குலக நாடுகள் விமர்சிக்கின்றன. ஆனால அண்மையில் ஜேர்மனிய சான்ஸிலர் ஏஞ்சலா மேர்க்கல் மூன்றாவது முறையாக அந்த பதவிக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

2005ம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலைப் புறக்கணிக்குமாறு விடுதலைப் புலிகளும் அவர்களைச சார்ந்தவர்களும் தமிழ் மக்களுக்கு உத்தரவிட்ட போது, மேற்குலக சக்திகள் அதற்கு எதிராக எந்த கருத்துக்களையும் வெளியிடவில்லை.

போரில் பிரபாகரன் உயிர் தப்பியிருந்தால், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சிறைக்கைதியாகவே இருந்திருக்கும். அந்த கட்சியினால் வடக்கு மாகாணசபைத் தேர்தலில் போட்டியிட்டிருக்க முடியாது.

வடக்கு மாகாணசபைத் தேர்லில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பெற்ற வெற்றியானது பிரிவினைவாத உணர்வுகளை ஊக்குவித்துள்ளது என்று தவறாக எண்ணி செயற்பட்டால் அது மோசமான தவறாகி விடும் என்றார் கோத்தபாய. (செ- 11)

## அரசு - கூட்டமைப்பு...

கலாக மூன்று மாகாணங்களிலும் வெற்றிகரமாக நடத்தி முடிக்கப்பட்ட தேர்தல்களை இந்திய அரசு வீரவேற்கிறது. அதிகளவான வாக்காளர் பங்கெடுப்பும் பல்வேறு அரசியற்கட்சிகளின் உற்சாகமான பங்கேற்பும் ஜனநாயக விழுமியங்கள் மற்றும் மாகாணசபை உள்ளிட்ட பல்வேறு மட்டங்களிலுள்ள பிரதிநிதித்துவ சபைகளுக்கான இலங்கை மக்களின் அர்ப்பணிப்பை வெளிக்காட்டுகிறது.

தென்னாசிய தேர்தல் முகாமைத்துவ அமைப்பு மற்றும் பொதுநலவாய தேர்தல் கண்காணிப்பு அமைப்பு என்பவற்றின் தேர்தல் அவதானிப்புகளை நாம் கருத்தில் கொண்டுள்ளோம் ஒட்டுமொத்தமாகப் பார்க்கும் போது மக்களின் விருப்பம் இத்தேர்தலில் வெளிக்காட்டப்பட்டுள்ளமையை நாம் ஏற்றுக்கொண்டுள்ளோம்.

வட மாகாணசபைக்குத் தேர்தல நடத்தப்படுமென சர்வதேச சமூகத்திற்கு இலங்கை அரச கொடுத்த அர்ப்பணிப்பு வாக்குறுதியை பெருமைப்படுத்தி நிறைவேற்றியுள்ளது. சர்வதேச சமூகத்திற்கு இலங்கை அரசு வழங்கிய அரசியலமைப்பு திருத்தத்தை முழுமையாக அமுல் படுத்தல் மற்றும் அதைத்தாண்டி செல்லுதல் உள்ளிட்ட வாக்குறுதிகளை நிறைவேற்றும் என எதிர் பார்கின்றோம்.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பும் இலங்கை அரசும் விடுத்துள்ள சாதகமான செய்திகளை நாம் கவனத்திற் கொண்டுள்ளோம். இருசாராரும் வட மாகாண மக்களின் முன்னேற்றத்திற்காக சேர்ந்து வேலை செய்ய ஆயத்தமாக உள்ளதாக கூறியமை உண்மையில் திருப்தி தரும் ஒரு விடயமாகும்.

வட மாகாணமானது 30 வருடங்களாக நீண்ட ஆயுதப்போரின் வடுக்களில் இருந்து மீண்டுள்ளது. இத்தகைய நிலையிலுள்ள மக்களின் உடனடித்தேவைகளை பூர்த்தி செய்யவென அவசரகதியில் மக்களின் தேவை நோக்கிய கரிசனையுடன் இருபகுதியும் பங்காளித்துவ மனப்பானமையுடனும பரஸ்பரம் ஏற்றுக்கொள்ளும் தன்மையுடனும் ஆக்கபூர்வமாக செயற்படுமாறு வேண்டுகின்றோம். இத்தகைய கூட்டிசைவான ஒரு அணுகுமுறையே இரண்டு சமூகங்களினதும் உண்மையான நல்லிணக்கத்திற்கு வழிவகுக்கும்.

இந்தச் செயன்முறையை மேலும் முன்னெடுத்துச்செல்ல இருதரப்புடனும் சேர்ந்து செயற்பட இந்திய அரசு அர்ப்பணிப்புடன் செயற்படும். இதனால் இலங்கையிலுள்ள சிறுபான்மையினம் உள்ளிட்ட சமூகங்கள் அனைத்தும் ஒன்றுபட்ட இலங்கையின் சமபங்காளிகளாக தம்மை உணர்வதோடு சமத்துவம், நீதி, சுயகௌரவம் மிக்க ஒரு எதிர்காலத்தை எதிர்பார்க்க முடியும என அதில் தெரிவிக்கப் பட்டுள்ளது. (செ-4)

## வீரவன்சவின்...

எமது தனிப்பட்ட கருத்துகளை முன் வைக்கவில்லை. தமிழ் மக்களின் விரும்பங்களே அதில் உள்ளன. அதன் பிரதிபலிப்பாகத் தான் நாம் இன்று பெரு வெற்றியும் பெற்றுள்ளோம்.

ஜனநாயகத்தை மதிப்பளித்து, தமிழர்கள் மீது அரசு உண்மையாக அக்கறை கொண்டிருக்குமானால் நமது விஞ்ஞாபனத்தை நடைமுறைப்படுத்த வேண்டும். இதற்குச் செயல்வடிவம் கொடுக்கும் முழுப்பொறுப்பும் அரசிடமே காணப்படுகிறது. வட மாகாணத்தில தேர்தலை மட்டும் நடத்தினால் ஜனநாயகம் மலர்ந்து விடப் போவதில்லை என்பதை அரசு உணர்ந்து செயற்பட வேண்டும்.

எவ்வாறு தமிழர்கள் ஜனநாயகத்தை ஐக்கியப்படுத்த முன்வந்தார்களோ, அதேபோன்று பெரும்பான்மையினத்தவர்களும் இனி வரும் காலங்களில் ஒன்றுபட்டு நாட்டை ஐக்கியப்படுத்த வேண்டும என சுமந்திரன் தெரிவித்தார்.

இதன்போது, "வடமாகாணத்திலுள்ள ஆளுநரையும், இராணுவத்தினரையும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் முடிந்தால் அங்கிருந்து அகற்றிப் பார்க்கட்டும்" என அமைச்சர் விமல் வீரவன்ஸ விடுத்த சவால் தொடர்பாக சுமந்திரன தெரிவித்தாவது,

அரசு ஜனநாயகத்தை விதைக்க வேண்டிய பாரிய கடமையில் உள் ளது. இராணுவத்தினர் அங்கிருப்பதை வடபகுதி மக்கள் விரும்பவில்லை. இதனால் தான் நாம் தொடர்ந்தும் இராணுவத்தினரை அகற்றக் கோரி குரல்கொடுத்து வருகின்றோம்.

விமல் விடுத்த சவாலை நாம் அவ்வளவு பொருட்டாகக் கருதவில்லை. இதற்கான பதிலை இன்னும் வெகுவிரைவில் அவர் உண ர்ந்து கொள்வார். ஆனால், தமிழர் களின் குரலுக்கு அரசு செவி சாய்க்க வேண்டும். இதுதான் அதன கடமை என்றார் சுமந்திரன். (செ-11)

## நல்லிணக்க...

துள்ளது. இலங்கையில் மனித உரிமைகள் மற்றும் நல்லிணக்கம் தொடர்பில் கூடுதல் கவனம் செலுத்தப் பட வேண்டியுள்ளதாக அவுஸ்திரேலியாவின் புதிய வெளிவிவகார அமைச்சர் ஜூலி பிஷொப் தெரிவித்துள்ளார். எனினும் பொதுநலவாய நாடுகள் தலைவர்கள் அமர்வுகளை உலகத் தலைவர்கள் புறக்கணிக்கக் கூடாது என அவர் வலியுறுத்தியுள்ளார்.

எதிர்வரும் நவம்பர் மாதம் நடைபெறவுள்ள பொதுநலவாய நாடுகள் தலைவர்கள் அமர்வுகளில் உலக நாடுகள் பங்கேற்க வேண்டுமென தெரிவித்துள்ளார். மனித உரிமை விவகாரங்களில் ஏற்படுத்தப்பட்டுள்ள மேம்பாடுகள் குறித்து தெளிவுபடுத்த இலங்கைக்கு இந்த அமர்வுகள் சந்தர்ப்பமாக அமையும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (செ-11)

## காணி அதிகாரங்கள்...

மன்றம், 13 ஆவது அரசியல் சட்டத்திருத்தத்தின்படி காணி தொடர்பான அதிகாரங்கள் மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்டிருப்பதாக தீர்ப்பளித்திருந்தது.

கொழும்பு மேல் முறையீட்டு நீதிமன்றத்தின் இந்த தீர்ப்பை ரத்து செய்யுமாறு கோரி இலங்கையின் உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடுகக்கப்பட்டது. அந்த வழக்கை விசாரித்த உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதி மொஹான் பீரிஸ் அடங்கிய மூன்று நீதிபதிகள், பதின்மூன்றாவது அரசியல் சட்டத்திருத்தத்தில் காணி அதிகாரங்கள், எவையும் மாகாணசபைகளுக்கு வழங்கப்படவில்லை என தீர்ப்பளித்துள்ளனர்.

இந்த தீர்ப்பு, இலங்கை அரசுக்கு கிடைத்த பெரிய வெற்றி என்று வர்ணித்த அரசின் சார்பில் வாதிட்ட வழக்கறிஞர் கோமின் தயாசிறி,

காணி தொடர்பான அதிகாரம் மாகாணசபைகளுக்கு இருப்பதாக இதுவரை பொய்யான பிரசாரங்கள் செய்துவந்த இலங்கை அரசுக்கு எதிரான உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சக்திகளுக்கு இந்த தீர்ப்பு முறையான பதிலை அளித்திருப்பதாக கூறினார்.

உச்சநீதிமன்றத்தின் இந்த தீர்ப்பை "இந்த சக்திகள்" எளிதாக நிராகரிக்க முடியாது என்றும் அவர் கூறினார்.

பதின்மூன்றாவது அரசியல் சட்டத்திருத்தத்தின்கீழ் மாகாண சபைகளுக்கு காணி அதிகாரம் அளிக்கப்பட்டிருப்பதாக தமிழ் கட்சிகள் தொடர்ந்தும் வாதிட்டு வருகின்றன. மேலும் மாகாணசபைகளுக்கு காணி மற்றும் காவல்துறை அதிகாரங்கள் அளிக்கப்படுவது என்பது தமிழர்களின் இனப்பிரச்சனைக்கான குறைந்தபட்ச தீர்வாக அமையும் என்றும், அதிகாரப் பகிர்வு அரசியலுக்கான தொடக்கப் புள்ளியாக அது அமையும் என்றும் தமிழர் தரப்பில் கோரிக்கைகள் முன்வைக்கப்படுகின்றன.

*த.தே.கூ அரசு சந்திக்கும் முக்கிய சவால்*

உலக அளவில் ஆர்வத்தை உருவாக்கிய வடமாகாணசபைத் தேர்தல்கள் வெற்றிகரமாக நடந்து முடிந்து, அதில் தமிழ்தேசிய கூட்டமைப்பு மிகப்பெரும்பான்மையான இடங்களைக் கைப்பற்றி ஆட்சி அமைக்கவிருக்கும் பின்னணியில், உச்சநீதிமன்றத் தின் நேற்றைய தீர்ப்பு இலங்கையின் அரசியல் அரங்கில் முக்கிய விவாதங்களைத் தோற்றுவிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

காரணம், தமிழ்தேசிய கூட்டமைப்பின் சார்பில் முதல்வர் பதவிக்குத் தேர்வு செய்யப்பட்டிருக்கும் ஓய்வு பெற்ற உச்சநீதிமன்ற நீதிபதி சி. வி. விக்னேஸ்வரன் காணி மற்றும் காவல்துறை அதிகாரங்களை மாகாண சபைகளுக்கு பெற்றுத்தருவது தமது முக்கிய குறிக்கோள்களில் முதன்மையானவை என்று அறிவித்திருக்கும் பின்னணியில், இந்த உச்சநீதிமன்றத் தீர்ப்பு அவருக்கு மிகப்பெரிய சவாலை தோற்றுவிக்கும் என்று கருதப்படுகிறது.

காரணம் வட மாகாண சபையில் இருக்கும் பல்லாயிரக் கணக்கான ஏக்கர் காணிகளை, இலங்கை அரசாங்கம் இராணுவத்தின் தேவைகளுக்காக ஏற்கெனவே கையகப்படுத்தியிருக்கிறது. அதில் குடியிருந்த ஆயிரக்கணக்கான தமிழர்கள் அங்கிருந்து பலவந்தமாக வெளியேற்றப்பட்டிருக்கிறார்கள். இப்படி விருப்பத்துக்கு மாறாக வெளியேற்றப்பட்டவர்கள் தங்களின் சொந்த காணிகளில், வாழ்விடங்களில் தங்களை மீண்டும் குடியேற அனுமதிக்கவேண்டும் என்று ஆண்டுக கணக்கில் போராடி வருகிறார்கள்.

இவர்களின் கோரிக்கைகளை நிறைவேற்றவேண்டிய அவசியத்தில் இருக்கும் வடமாகாணத்தில் அமையவிருக்கும் தமிழ்தேசிய கூட்டமைப்பின் அரசாங்கத்திற்கு உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பு மிகப் பெரிய தடைக்கல்லாக அமையக் கூடும் என்று அரசியல் அவதானிகள் கருதுகிறார்கள். (செ-11)


## பணியாளர் தேவை

தொலைத்தொடர்பு நிலையத்தில் பணிபுரிவதற்கு பெண் பணியாட்கள் தேவை. கணனி Typing செய்யக் கூடியவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.நேரில் வரவும்.

9.00AM - 2.00 PM

**செல்வா ரெலி கொமினிக்கேசன்**

124, கோவில் வீதி,

(பொஸ்கோ பாடசாலைச் சந்தி) யாழ்ப்பாணம்.

(4036)

## இன்று வெளிநாடு பயணமாகும்

### எமது மாணவர்களுக்கு வாழ்த்துக்கள்




வெளிநாட்டு ஹொட்டேல் பணிக்கு சிகரம் நிறுவனம் ஊடாக தெரிவுசெய்யப்பட்டு இன்று காலை 7.45க்கு கட்டுநாயகா விமான நிலையத்திலிருந்து பயணமாகும் 11 பேருக்கும் எமது வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

இவர்களின் எதிர்காலம் சிறப்பாக அமைவதுடன், இவர்கள் தொடர்பான பெற்றோரின் எதிர்பார்ப்புக்கள் நிறைவேறவும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*- சிகரம் பணிப்பாளர் மற்றும் கல்வி-தொழில் வழிகாட்டிப் பிரிவினர்*

புதிய அணியினரை இணைத்துக்கொள்வதற்கான கருத்தரங்கும், உடனடி அனுமதியும் எதிர்வரும் 27, 28, 29, 30 ஆம் திகதிகளில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியாவில் நடைபெறவுள்ளது.

முற்பதிவுகளுக்கு. 0773616798, 021 222 0011

சிகரம் SIKARAM MEDIA & EDUCATION கல்வி - தொழில் வழிகாட்டி

153, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம். (DAMRO வுக்கு முன்னால்) www.sikaram.lk


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 27.09.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.